Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 24 ரூபா 16/50
செப். 09 - 15, 2004

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 579



## குருநகர் அவலமும் உளடக அதர்மமும்

## விஜயகாந்த் தனிக்கட்சி அமைப்பார் -லியாக்கத் அலிகான்

## கூட்டமைப்புக்கு புதிய கட்டளைகள்

# அஷ்டலக்ஷ்மி

எட்டு என்ற எண்ணுக்கு எப்போதுமே ஒரு மகிமை உண்டு. பால்வெளியிலே திசைகள் கிடையாது. ஒன்றுமில்லாத அகண்ட வெளியிலே ஒரு புள்ளி வைக்கப்படும்போது அங்கே எல்லாம் தோன்றிவிடுகிறது. அந்தப் புள்ளியே பிந்து. அதுவே சக்தி. எட்டு திசைகளும் பதினாறு கோணங்களும் கிடைக்கின்றன.

எட்டுத் திக்கிலும் சென்று வெற்றியடைந்தான் என்பார்கள். அஷ்டதிக்கஜங்கள் எனப்படும் யானைகள் எட்டுத் திசைகளையும் தாங்குவதாக மரபு. அஷ்ட மூர்த்திகளாக சிவபிரானுக்கு வடிவங்கள் உண்டு. ஏன், அஷ்டாஷரம் நம் ஸ்ரீக்குப் பிடித்த மணாளனின் மந்திரம் அல்லவா? ஓம் நமோ நாராயணாய என உச்சரித்தாலே அஷ்ட ஐஸ்வர்யங்களும் கிடைத்துவிடுமல்லவா?

இப்போப்பட்ட எட்டு என்ற வடிவங்களின் சிறப்புகாரணமாக நம்முடைய ஸ்ரீ அஷ்டலக்ஷ்மியாக் உருவெடுக்கிறாள். லஷ்மி என்றாலே செல்வத்தின் அதிதேவதை என்ற எண்ணத்தைப் போக்க அஷ்டலக்ஷ்மியாகிறாள். உலகின் அனைத்துப் பொருள்களின் வடிவமாக, புஷ்டியான சிறப்பியல்புகளின் வடிவமாக, எங்கெங்கு காணினும் ஸ்ரீயே நிறைந்து நிற்கிறாள் என்ற உண்மையின் வடிவமாகவும் தன்னை நிருபித்துக்கொள்ள ஸ்ரீ அஷ்டலக்ஷ்மியாகிறாள். இதுவே செல்வ மகள் மட்டுமல்ல, அனைத்துமே அவள்தான் என்று நிருபிக்கிறது.

-இணையத்திலிருந்து.

# ஆன்மீகம்



## நியாயத் தீர்ப்பு

அவர் காலங்களையும் சமயங்களையும் மாற்றுகிறவர்; ராஜாக்களைத் தள்ளி, ராஜாக்களை ஏற்படுத்துகிறவர்; ஞானிகளுக்கு ஞானத்தையும், அறிவாளிகளுக்கு அறிவையும் கொடுக்கிறவர்.

தானியேல் 2-21.

ஆம், பிரியமானவர்களே! தேவன் ராஜாக்களைத் தள்ளி, ராஜாக்களை ஏற்படுத்துகிறவர். ஒரு தேசத்தில் ஜனங்களின் கிரியைகள் எப்படியிருக்கிறதோ அவர்கள் செய்கைக்கு ஏற்ற ராஜாக்களை அவர் நியமிக்கிறார். ஜனங்கள் கர்த்தருக்கு விரோதமாக எழும்பும்போதும் வானத்தையும் பூமியையும் உண்டாக்கியவரை துச்சமாகப் பேசும்போதும், அனைத்தையும் ஆளுகிறவர் அந்த ஞானமற்ற ஜனங்களை ஆள ஒரு ராஜாவை நியமிப்பார். ஜனங்கள் கஷ்டப்படும்போது அரசாங்கத்தைக் குற்றம் சுமத்துவார்கள். ஆனால், அவர்களுடைய செயல்களுக்குத் தக்க ராஜாவே நியமிக்கப்படுவான்.

"மனு புத்திரனே! ஒரு தேசம் எனக்கு விரோதமாய்த் துரோகம் பண்ணிக்கொண்டேயிருந்து, பாவஞ்செய்தால், நான் அதற்கு விரோதமாக என் கையை நீட்டி, அதில் அப்பம் என்னும் ஆதரவுகோலை முறித்து, அதில் பஞ்சத்தை அனுப்பி, மனுஷரையும், மிருகங்களையும் அதில் இராதபடிக்கு நாசம் பண்ணுவேன். (எசேக்கியேல் 14:13). தேவனுடைய நியாயத் தீர்ப்பு தேசத்துக்கு வந்துகொண்டிருக்கிறது. அதற்குமுன் தேசம் இரட்சிக்கப்படுவதற்காக ஜெபிப்போம்.

ஆமென்.

-சகோபோல், தெல்தெனிய.

## இணை வைத்தல்

"நிச்சயமாக இணைவைத்தல் மிகப் பெரிய அநியாயமாகும்."

(31:13)

"நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணைவைக்கப் படுவதை மன்னிக்க(வே) மாட்டான்." இதனைத் தவிர (மற்ற) எதனையும் தான் நாடியோருக்கு மன்னிப்பான்."

(4:48)

"நிச்சயமாக எவர் அல்லாஹ்விற்கு இணை வைக்கின்றாரோ, அவர் மீது திட்டமாக அல்லாஹ் சுவனபதியை தடுத்து வைக்கிறான். அவர் தங்குமிடம் நரகம்தான். இன்னும் (இத்தகைய) அநியாயக்காரர்களுக்கு (மறுமையில்) உதவி செய்வோர் இல்லை."

(5:72)

"உங்களுக்கு மிகப் பெரும் பாவத்தை அறிவிக்கட்டுமா?" என நபி (ஸல்) அவர்கள் வினவ, ஸஹாபாக்கள் 'ஆம்' அல்லாஹ்வுடைய தூதரே என்றனர். நபி(ஸல்) அவர்கள் "அல்லாஹ்வுக்கு இணை கற்பித்தல், பெற்றோரை நோவினை செய்தல்" என்று குறிப்பிட்டார்கள்.

ஆதாரம் :- புஹாரி, முஸ்லிம்.

-செய்யது புஹாரி ஸஹானா, வாழைச்சேனை - 05.

## கவிதைப் போட்டி இல.576



இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

### பரிசுக்குரிய கவிதை

### அஞ்சாதே பாப்பா

மண் ஆசைக்காக தனது
சக மனிதர்களையே
விழுங்கி
ஏப்பமிட்டுக்கொண்டிருக்கும்
சுயநலம் பிடித்த மனிதப்
பிறவிகளை
விட இவைகள் ஒன்றும்
பயங்கரமானவையல்ல.

-பிஹாமா ஹில்மி, பலாங்கொட.

### கானல் வரி

விலைவாசி குதிரைமீதேறி
சவாரி வர.....
முதலை மீதேறி வருவது
யார் வீட்டு(க்கு)ச்
செல்ல(வ)மோ....?

-பெ. விக்னேஸ்வரன், ஹட்டன்.

### இரை

வணிக முதலை
அரசியல் முதலை
இனத்துவ முதலை
எல்லா முதலைகளும்
மக்களை விழுங்கியே
வாழ்ந்துகொண்டிருக்கின்றன.

-அ.சந்தியாகோ, கண்டி.

### விட்டுவிடு!

கெட்டவர்களின்
உறவு ஒருக்காலும்
கூடாது
விட்டுவிடடா தம்பி.

-எஸ்.பி.பி.சுணேஷ், தாண்டியடி.

### அதிசயம்!

மாற்று கருத்தாளர்
"கொலை"
ஜனநாயகம் திரும்பியவர்
"சூடு"
செய்திகள் கேட்டு,
மனித மந்திகள்
மகிழ - இந்த
முதலை எப்போது
மழலையானதோ....!

-சங்கம ஹிஷாம், திருகோணமலை.

### நானும் நீயும்

உனக்கு கடலில்
பலம்
எனக்கு கரையில் பலம்
உன்னை மடக்கிப்
பிடித்துத் தோலுரித்து
சப்பாத்துக் கட்டுவேன்
நான் மனிதக் குட்டி
நீ முதலைக் குட்டி.

-காமீம் செயினுலாப்தீன், கிண்ணியா.

### ஸ்நேகிதம் வாழ்க!

இங்கேதான்
நட்பு கிரகித்து
மனிதம் நடமாடுகின்றது
வாழ்க
ஸ்நேகிதத்தால்
நன்றியுள்ளவர்கள்!

-சபினா ஏ.நஸ்புள்ளாஹ், கிண்ணியா.

### பொறாமை

முதலைக்கும் குழந்தைக்கும்
உள்ள ஒற்றுமை
நம் நாட்டு மக்களிடம்
இல்லையென்று நினைத்து
பொறாமையாய் இருக்கின்றது.

-வே.காங்கேஸ்வரன், மூதூர்.

## கவிதைப் போட்டி இல.579



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 15.09.2004

கவிதைப் போட்டி இல.579
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### மிருக + மனித முதலைகள்!

சிறு பிள்ளைத்தனமாக.....
மிருக முதலை மீதேறி;
நீ விளையாடுகிறாய்....!
பெருவில்லத்தனமாக....
மனித முதலைகள்
நம்மீதெல்லவா
ஏறி விளையாடுகின்றன?...

-கோட்டைமுனை முத்துமணி, பதுளை.

### முடிவு?

மனிதனில் சவாரி
செய்வோர்
மன்றத்துக்குப்
போவார்கள்
குதிரையில் சவாரி
செய்வோர்
குப்புற விழுவார்கள்
புலிகளில் சவாரி
செய்வோர்
பூர்வீகம்
தொலைப்பார்கள்.
முதலையில் சவாரி
செய்வோர்
பாழியில் பசிக்குணவு
ஆவார்கள்.

-சீ.தங்கவடிவேல், மட்டக்களப்பு.

### வீண் முயற்சி

மிருக அரக்கக் குணம் எல்லாம்
மனிதன் மேல் ஏறியிங்கே
அட்டகாசம் புரிந்து இந்த
அகிலத்தையே ஆட்டுகையில்
பச்சை மனப் பாலகனே
இச்சை கொண்டு ஈவு
இரக்கமில்லா - இம்
மிருகத்தின் மேல் ஏறிப் பார்க்க -
ஏன்
வீண்முயற்சி செய்கின்றாய்?


-க.மலர்ராஜன், திருகோணமலை.

# உங்கள் பக்கம்

## அடையாள அட்டையின் அவசியம்

தேர்தலில் வாக்களிப்போர் கட்டாயமாகத் தங்களது அடையாள அட்டையுடன் வாக்களிக்கச் செல்வதற்கான சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சட்டமாக்கப்படுவது பெரிதும் வரவேற்கத் தக்கது. இச் சட்டம் கடந்த தேர்தல் காலங்களுக்கு முன்னதாகவே செயற்பட்டிருக்க வேண்டும். கடந்த ஏப்ரல் 2இல் முடிவடைந்த தேர்தலில் ஆள்மாறாட்டம் கூடுதலாக இடம்பெற்றுள்ளது. குறிப்பாக வடக்கு - கிழக்கில் இறந்தவர்களினதும் புலம் பெயர்ந்தவர்களினதும் பெயர்களில் வாக்களிக்கப்பட்டது. அடையாள அட்டை முறை கட்டாயமாக்கப்படும் பட்சத்தில் வேட்பாளர்களின் முகவர்களுக்கு ஏற்படும் அச்சுறுத்தல் போன்ற பிரச்சினைகளுக்கு இடமிருக்காது. மேலும் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் அடையாள அட்டை இல்லாதவர்கள் அவற்றைப் பெற்றுக்கொள்ளவேண்டியதன் அவசியத்தினை அரசாங்கம், கிராம சேவையாளர்களூடாகவும், ஊடகங்கள் மூலமும் அறிவுறுத்துதல் அவசியமாகும். எதிர்காலங்களில் நடைபெறும் தேர்தல்கள் நீதியாகவும் சுதந்திரமாகவும் ஜனநாயக உரிமையுடனும் நடைபெறுவதற்கு அடையாள அட்டை உபயோகம் அவசியமென்பது வாக்காளர்களினது எதிர்பார்ப்பாகும்.

-வி.சில்வெஸ்டர், மூதூர்.



# வாசக[ர்] சாலை

### யுத்த அவலம்

முரசு சுமந்து வந்த அத்தனை அம்சங்களும் அசத்திச் சென்றன! லேடீஸ் ஸ்பெஷல் தந்த 'பிள்ளைகளை திட்டாதீர்கள்' என்ற அம்சம் சிறப்பாக இருந்தது. தகவல் பெட்டி தந்த...'அவலம்' ஆப்கானிஸ்தானில் உயர்தர வகுப்பு மாணவர்கள் பரீட்சை எழுதும் காட்சியைப் பார்த்தபோது......எங்கெல்லாம் யுத்தம் வெடிக்கிறதோ அங்கெல்லாம் இதே....அவல நிலைதான் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாய் அமைந்திருந்தது.

-முஸம்மில், குவைத்.

### அன்பான முரசே!

என்னுள் என்றும்
நிலைத்திருக்கும் உன் சேவை
என்னை தினமும் பிரமிக்க
வைக்கிறது! தொடர்ந்தும்
உன் சேவை வளம்பெற
என் வாழ்த்துக்கள்.

-ஆர்.மாலதி, சுண்டுக்குழி.

### என் இனிய முரசுக்கு!

பயன் பெறும் பல ஆக்கங்களை எமக்கு தினமும் வழங்கும் உன் பணி மென்மேலும் தொடர எனது வாழ்த்துக்கள். குறிப்பாக லேடீஸ் ஸ்பெஷல் பயனுள்ள தகவல்களைத் தந்து எம்மை மகிழ்விப்பதோடு ஏனைய ஆக்கங்களும் சூப்பரோ சூப்பர். தொடர்ந்து உன்னையே விரும்பி வாசிக்கிறோம்.

-வி.சுதாராஜ், மாவனல்ல.

### பிரியமான தினமுரசே!

நீ சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் இனிமையானவை. தித்திக்கும் சிறுகதை, அரசியல், தேன் கிண்ணம், சினிமா, மனம் விரும்பும் சிறுவர் பகுதி, லேடீஸ் ஸ்பெஷல் இப்படி அடுக்கிக்கொண்டே போகலாம். அவ்வளவு விடயங்கள். அனைத்துமே அற்புதமாக அமைந்துள்ளன. தினமுரசே, உன் சேவை மென்மேலும் தொடர எனது இனிய வாழ்த்துக்கள்.

-சண்முகம் நிரஞ்ஜலா, கண்டி.

### ஓய்ந்திடா முரசே.....

வாரந்தோறும் வாசக
நெஞ்சங்களை
தன்வசப்படுத்தி வைத்திருக்கும்
என் அபிமான முரசே....!
நீ தினந்தோறும் வரமாட்டாயா?
வாசக நெஞ்சங்களின் துடிப்பான
ஆக்கங்களையும்
மற்றும் நாட்டு நடப்புக்களையும்
மேலும் புதுப் புது
அம்சங்களையும்
சுமந்து வந்து உனக்கென
ஒரு தனி இடத்தினைத் தக்க
வைத்துக்
கொண்டிருக்கும் நீ என்றும்
ஓயாமல் இருப்பாய் என
நம்புகின்றேன்.

-கே.மேகசுதன், திருக்கோவில் - 02.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# வருட முடிவுக்குள் சமாதானப் பேச்சுக்கள் மீள ஆரம்பிக்கும் சாத்தியங்கள் தென்படுகின்றன

அரசாங்கத்துக்கும் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதற்கான சர்வதேச அழுத்தங்கள் அதிகரித்து வருவதால் இவ்வருட இறுதிக்குள் இரு தரப்பும் பேச்சுவார்த்தை மேசைக்கு வரக்கூடிய சாத்தியக்கூறுகள் தென்படுவதாக இலங்கை சமாதானப் பேரவையின் முக்கியஸ்தரொருவர் கூறினார். தாம் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகள் பற்றிப் பேசி, அதை நிறுவினால் மட்டுமே பேச்சுவார்த்தைக்கு வருவோமென்று நிபந்தனை விதித்திருக்கும் புலிகள், தமது நிலைப்பாட்டைத் தளர்த்த வேண்டுமென்று சர்வதேச சமூகம் அழுத்தம் பிரயோகித்து வருவதாகவும் அவர் சொன்னார். கொழும்பிலும் கிழக்கிலும் தொடர்ச்சியாக இடம்பெற்றுவந்த படுகொலைகளை நிறுத்துவதற்கு சர்வதேச சமூகம் எடுத்த முயற்சி பாராட்டுக்குரியது. ஐரோப்பிய யூனியன், நோர்வே, பிரிட்டன், அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகள் படுகொலைகளை நிறுத்துமாறும் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிக்குமாறும் அண்மைக் காலங்களில் கடுமையான அழுத்தங்களைப் பிரயோகித்து வந்தன. கிளிநொச்சிக்குச் சென்று எஸ்.பி. தமிழ்ச்செல்வன், புலித்தேவன், நடேசன் ஆகியோரைச் சந்தித்துப் பேசிய பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகர் ஸ்டீபன் எவான்ஸ், நெதர்லாந்துத் தூதுவர் சுசான் பிளாங்கார்கட், ஐரோப்பிய யூனியனின் வதிவிடப் பிரதிநிதி வூற்றர் வில்சன் ஆகியோர் புலிகள் நெகிழ்வுத் தன்மையோடு பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டுமென்று வலியுறுத்தினர். அத்தோடு வடக்கிலும் - கிழக்கிலும் புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை சர்வதேச நாடுகள் முன்னெடுக்குமென்றும் தெரிவித்தனர். இதேநேரம் லண்டனில் புலிகளின் முக்கியஸ்தரான அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேசிய நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்குமாறு வலியுறுத்தியிருந்தார். இதேநேரம் அண்மையில் லண்டன் சென்று திரும்பிய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவும் விரைவில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுமென்று நம்பிக்கை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது. இம்மாத முடிவுக்குள் சகல அரசியல் கட்சிகளையும் அழைத்து புலிகளுடனான பேச்சுக் குறித்து அவர்களின் கருத்துக்களை அறியவுள்ள தாக காலியில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 53ஆவது வருடாந்த மாநாட்டில் ஜனாதிபதி தெரிவித்திருந்தார். சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதில் எவ்வித பின்னடைவும் இல்லையென்று தெரிவித்த ஜனாதிபதி, அரசாங்கம் - புலிகள் ஆகிய இரு தரப்பினரதும் நகர்வுகள் சாதகமானவையாக உள்ளன வென்றும் குறிப்பிட்டிருந்தார். ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் பேச்சுவார்த்தையில் பங்குபற்றுவதைக் கைவிட்ட புலிகள் இயக்கத்தை மீண்டும் பேச்சுவார்த்தைக்குக் கூட்டிவருவதற்காக இயன்ற அனைத்தையும் அரசாங்கம் மேற்கொள்ளுமென்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். வடக்கு - கிழக்குக்கு இடைக்காலப் பொறிமுறையொன்றினை அமைப்பது குறித்த யோசனைகளை முன்வைப்பதற்கென்று ஜனாதிபதி குழுவொன்றினை அமைத்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

பிணக்குகளும் மோதல்களும் இடம்பெற்ற நாடுகளில் பேச்சுவார்த்தைகளின்போது இழுபறிகளும் ஏற்றத்தாழ்வுகளும் இடம்பெறுவது சர்வசாதாரணமானதே. கம்பூச்சியாவில் ஏழு இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் யுத்தத்தினால் மடிந்தார்கள்.

அங்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவது சம்பந்தமான பேச்சுவார்த்தைக்கு வட்ட மேசையா, நீள்வட்ட வடிவ மேசையா தேவை என்பது குறித்து ஆறு மாதங்கள் பேச்சுவார்த்தை நடைபெற்றது. எனவே, இருபது வருடங்களுக்கு மேலாக மோதலில் ஈடுபட்ட சக்திகள் ஒரே இரவுக்குள் பிரச்சினையைத் தீர்த்துவிடுமென்று எதிர்பார்க்க முடியாதென்று சமாதானப் பேரவையின் பிரமுகர் தெரிவித்தார்.

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காகவே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்குத் தான் ஆதரவளிக்க முன்வந்ததாக இ.தொ.கா. தலைவர் ஆறுமுகம் தொண்டமான் கூறியிருப்பதும் பேச்சுவார்த்தையை முன்னெடுக்க அரசாங்கத்துக்கு ஐக்கிய தேசிய முன்னணி ஆதரவளிக்கும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருப்பதும் நம்பிக்கை தரும் விடயமென்றும் அவர் சொன்னார்.

## கூட்டமைப்பு எம்.பி.க்கள் திக்குமுக்காட்டம்

வன்னியை அண்டிய கடற்பகுதியில் குருநகர் மீனவர்கள் தாக்கப்பட்ட சம்பவம் பற்றி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேள்வி எழுப்பியபோது பதில் கூற முடியாமல் ஈழவேந்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன், கஜேந்திரன் போன்ற தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி.க்கள் திக்குமுக்காடினர். மீன்பிடி அமைச்சு மீதான ஒத்திவைப்புப் பிரேரனை சம்பந்தமான விவாதம் ஏழாம் திகதி பாராளுமன்றத்தில் இடம்பெற்றபோது பேசிய ஈழவேந்தன் என்னும் கனகேந்திரன் படையினர் தமிழ் மக்கள் மீது நிகழ்த்திய கடந்த கால அத்துமீறல்கள் பற்றிக் குறிப்பிட்டார். அப்போது குறுக்கிட்ட அமைச்சர், டக்ளஸ் குருநகர் சம்பவம் பற்றிக் கேள்வி எழுப்பினார். குருநகர் சம்பவம் சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்றது. இது குறித்து நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? ஏன் தமிழ்க் கூட்டமைப்பு கண்டனம் தெரிவிக்கவில்லை? என்று கேள்வி எழுப்பியபோது பதிலளிக்க முடியாமல் ஈழவேந்தன் மழுப்பினார். இதேபோன்று முன்னைய அரசாங்கத்தில் மீன்பிடித்துறை ஆலோசகராகவிருந்த சுரேஷ் பிரேமச்சந்திரனிடமும் கஜேந்திரனிடமும் கேள்வி எழுப்பியபோது பதிலளிக்க முடியாமல் திக்குமுக்காடினார்கள்.

## குருநகர் மீனவர்களுக்கு எச்சரிக்கை

வாரத்தில் வியாழன், சனி ஆகிய இரண்டு தினங்களில் மாத்திரம் வன்னிக் கடலில் குருநகர் மீனவர்கள் தொழிலில் ஈடுபட அனுமதி வழங்கியுள்ள கடற்புலிகள், இந்த விடயத்தில் தங்களின் தீர்மானங்களை ஏற்காமல் ஆர்ப்பாட்டம் முதலான நடவடிக்கைகளில் எவரேனும் ஈடுபடுவார்களாயின் அவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று எச்சரித்துள்ளனர்.

குருநகர் மீனவர்கள் மீது வன்னியின் பாலாவிக் கடற்பரப்பில் 30ஆம் திகதி புலிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒரு மீனவர் காயமுற்றார். ஒரு மீன்பிடிப் படகு எரித்து நாசமாக்கப்பட்டது. மூன்று மீன்பிடிப் படகுகளும் காயமடைந்த மீனவர் உட்படப் பதினொரு மீனவர்களும் புலிகளால் பலாத்காரமாக வன்னிக்குக் கடத்திச் செல்லப்பட்டிருந்தனர். இந்தச் சம்பவத்தையடுத்து குருநகர் மீனவர்கள் தொழில்களைப் பகிஷ்கரித்து, கடைகளை மூடித் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். புலிகளின் யாழ்.அரசியல் துறைத் தலைமையகத்தின் மீதும் கல்வீச்சு இடம்பெற்றது. பிரதான வீதியில் அமைந்துள்ள கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாச அலுவலகத்தின் மீதும் மீனவர்கள் தாக்குதல் மேற்கொண்டனர். இந்த அலுவலகத்தில் புலிகளின் புலனாய்வுத்துறை முக்கியஸ்தரான இனியவனும் அவரது சகாக்களும் தங்கியிருப்பது வழக்கம். ஆர்ப்பாட்டங்கள் பலமானதையடுத்து கடத்தப்பட்ட மீனவர்களும் படகுகளும் விடுவிக்கப்பட்டன. இது தொடர்பான தவல்களை இருட்டடிப்புச் செய்த உதயன் பத்திரிகை அலுவலகத்தின் முன்பாகவும் பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தச் சம்பவங்களையடுத்து குருநகர்ப் பகுதியின் கத்தோலிக்க மதகுருவும் ‘நெய்தல்’ நிறுவன இயக்குநருமான அருட்திரு ஜெயசேகரம் அடிகளார் சமரச முயற்சிகளில் ஈடுபடுமாறு மக்கள் கோரினார். அவரது முயற்சியால் கடந்த இரண்டாம் திகதி வன்னியில் கடற்புலிகளின் தளபதியான சூசை தலைமையிலான குழுவினரும் வன்னிப் பகுதி மீனவர்களும் குருநகரிலிருந்து சென்ற அருட்திரு ஜெயசேகரம் அடிகளார் தலைமையிலான மீனவர்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினர். காயமடைந்த மீனவர் இன்னமும் வன்னியிலுள்ள வைத்தியசாலையொன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். விரைவில் அவரை விடுவிப்பதற்கும் எரிக்கப்பட்ட படகுக்கு நட்டஈடு பெற்றுக் கொடுப்பதற்கும் அடிகளார் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

## குற்றச்சாட்டு

தன்னை இராஜமகேந்திரனாக நினைத்துக்கொண்டு ஊழியர்கள் மீது சீறிப்பாய்ந்து சிங்கம் போல் கர்ச்சிக்கும் வங்கி முகாமையாளரொருவர் குறித்து பல முறைப்பாடுகள் கொழும்பிலுள்ள வங்கி மேலிடத்துக்கு தெரிவிக்கப்பட்டதையடுத்து கொழும்பிலிருந்து சென்ற வங்கியதிகாரிகள் யாழ்ப்பாணம், திருநெல்வேலிக்குச் சென்று விசாரணை நடத்தியுள்ளனர். வங்கி அதிகாரிகளுக்கும் பந்தம் பிடித்து, ஊழியர்களை இடமாற்றுவேனென்று சர்வாதிகாரி போல் நடந்துகொள்ளும் இவர், அந்தச் சமாச்சாரத்தில் பலே கில்லாடியென்றும் சக ஊழியர்கள் தெரிவிக்கின்றனர். ஒரு மகானின் பெயரால் தனது வீட்டுக்கருகே இவர் நடத்திவரும் இல்லத்தில் இவர் செய்த சில்மிஷங்களுக்காக ஊர்மக்களின் தாக்குதலுக்கு இவர் இலக்காகியவரென்றும் கூறப்படுகிறது.

## போதைவஸ்துக் கடத்தலுக்கு மன்னார் தளம்

தமிழகத்திலிருந்து போதைவஸ்துக் கடத்திவருபவர்களின் பிரதான பாதையாக மன்னார் திகழ்கிறதென்று கொழும்பிலுள்ள போதைவஸ்துத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். தமிழகத்திலிருந்து படகுகள் மூலம் மன்னாருக்குக் கடத்திவரப்பட்டு அங்கிருந்து கொழும்புக்குக் கொண்டுசெல்லப்படுவதாகப் பொலிஸார் கூறுகின்றனர். மூன்று வாரங்களுக்கு முன்னர் மன்னாரைச் சேர்ந்த உப்புக்குளம் என்ற பகுதியில் 4.5 கிலோ கிராம் ஹெரோய்ன் போதைவஸ்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. இதன் பெறுமதி ஒரு கோடியே 37 இலட்ச ரூபாவெனவும் நான்கு பேர் கைது செய்யப்பட்டனரென்றும் பொலிஸார் கூறினர். கைதுசெய்யப்பட்ட நால்வரில் மூவர் சகோதரர்களாவர். இதேவேளை புத்தளம் தில்லையடியில் 1490 கிறாம் ஹெரொய்ன் போதைவஸ்துடன் மூவர் கைதுசெய்யப்பட்டனரென்றும் இவர்களில் இருவர் இந்தியாவைச் சேர்ந்தவர்களென்றும் மூன்றாமவர் பேசாலை, கரிசல் பகுதியைச் சேர்ந்தவரென்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

யுத்தம் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த காலகட்டத்தில் அதாவது சில வருடங்களுக்கு முன்னரே, திட்டமிட்ட முறையில் இலங்கைக்குள் போதைவஸ்துக் கடத்துவதற்கு மன்னார் தளமாகப் பயன்படுத்தப்பட்டதாகவும் முக்கியமான தமிழ் அரசியல்வாதியொருவருக்கு இதில் சம்பந்தமிருப்பதாகச் சந்தேகிக்கப்படுவதாகவும் பொலிஸார் கூறினர்.

## தாக்குதல் குறித்து அமைச்சர் டக்ளஸ் கண்டனம்

யாழ். குடாக் கடல் பகுதியில் கடந்த முப்பதாம் திகதி இரவு கடற்றொழிலுக்குச் சென்ற குருநகர் மீனவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான கே.என்.டக்ளஸ் தேவானந்தா கடுமையான கண்டனம் தெரிவித்துள்ளார். வடக்கு - கிழக்கில் இயல்பு வாழ்க்கை ஏற்படுத்தப்பட வேண்டுமென்று கூறிவருபவர்களாலேயே கடற்றொழிலாளரின் வாழ்வுரிமையும் தொழிலுரிமையும் மறுக்கப்படுவது வியப்புக்கும் வேதனைக்குமுரியதாகுமென்றும் அவர் தெரிவித்துள்ளார். குருநகர் மீனவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதில் ஒருவர் படுகாயமுற்றார். மீன்பிடிப் படகொன்று நடுக் கடலில் வைத்து எரியூட்டப்பட்டமை இங்கு குறிப்பிடத் தக்கதாகும். இச் சம்பவத்தைக் கண்டித்து, புலிகளின் பொற்பதி வீதி அலுவலகத்துக்கு எதிரே குருநகர் மக்கள் ஆர்ப்பாட்டம் செய்ததோடு, செய்தியைத் திரித்து வெளியிட்ட யாழ்.பத்திரிகை அலுவலகமொன்றுக்கு வெளியே கண்டனப் பேரணியையும் நடத்தினர்.

இச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கும், சேதமாக்கப்பட்ட அவர்களது உடமைகளுக்கும் உரிய நட்டஈடு வழங்கப்படுவதோடு, எதிர்காலத்தில் இவ்வாறான நடவடிக்கைகள் தொடரா வண்ணம் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கப்பட வேண்டுமென்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறியுள்ளார்.

மேலும், ஊடகங்கள் உண்மைச் சம்பவங்களைத் திரித்து வெளியிடும் போக்கினைத் தவிர்த்து, மக்கள் நலன் சார்ந்து உண்மைகளை வெளிக்கொணர்வதோடு நடுநிலை பேணி ஊடகதர்மத்தைக் காக்க முன்வர வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

## புலிகளுக்குப் பயிற்சியளிக்கவில்லை என்கிறார் எரிக் சொல்ஹெய்ம்

நோர்வே எவருக்கும் இராணுவப் பயிற்சியளிப்பதில்லை. நேட்டோ அமைப்புடன் மட்டுமே இராணுவப் பயிற்சி ஒப்பந்தங்களைக் கொண்டுள்ளோம் என்கிறார் எரிக் சொல்ஹெய்ம். ஒஸ்லோவிலுள்ள ரெனா இராணுவ முகாமில் புலிகளுக்குப் பயிற்சியளிக்கப்பட்டதென்று கூறப்படுவதை நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் திட்டவட்டமாக மறுத்தார். புளொட் இயக்கத் தூது கோஷ்டியொன்றினைச் சில தினங்களுக்கு முன்னர் ஒஸ்லோவில் சந்தித்துப் பேசியபோதே சொல்ஹெய்ம் இவ்வாறு சொன்னார். ‘இலங்கையில் சமாதானத்துக்கான உலகக் கூட்டணி’ என்ற அமைப்பும் ‘ஸ்புர்’ என்ற அவுஸ்திரேலிய அமைப்பும் இணைந்து கடந்த மாத ஆரம்பத்தில் ஒஸ்லோவில் நடத்திய மாநாட்டின்போது ரெனா இராணுவ முகாமில் புலிகளுக்கு இராணுவப் பயிற்சியளிப்பதைக் காட்டுகிறதெனக் கூறும் திரைப்படங்கள் காண்பிக்கப்பட்டன. இது குறித்துப் புளொட் தூதுக்கோஷ்டியைச் சேர்ந்த எஸ்.இராஜன் என்பவர் கேள்வி எழுப்பியபோதே சொல்ஹெய்ம் மேற்கண்டவாறு கூறினார். இம் மாநாட்டினை ஒழுங்கு செய்தவர்களுக்கும் புளொட் இயக்கத்துக்கும் தொடர்புகள் உண்டாவென்றும் சொல்ஹெய்ம் கேள்வி எழுப்பினார்.

மாற்றுக் கருத்துக்களைக் கொண்டவர்களைக் கொன்றொழிக்கும் புலிகளின் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நோர்வே அழுத்தம் கொடுக்க வேண்டுமென்று புளொட் தரப்பினர் வலியுறுத்தினர்.

“யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் எமக்குப் பாதுகாப்பளிக்கப்படுமென்று கண்காணிப்புக் குழு உறுதியளித்ததால் நாம் ஆயுதங்களைக் கையளித்தோம். இப்போது எமது ஆட்கள் கொல்லப்படுகின்றனர். தம்மால் எதையும் செய்ய முடியவில்லை என்று கண்காணிப்புக் குழு கையை விரிக்கிறது” எனப் புளொட் தரப்பினர் சுட்டிக் காட்டினர். யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிடுமாறு சொல்ஹெய்ம் குறிப்பிட்டபோது, அக் குழு மீது தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டனரென்று புளொட் தூதுக் கோஷ்டியினர் கூறினர். இப்படுகொலைகள் குறித்துப் புலிகளின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளதாகக் குறிப்பிட்ட சொல்ஹெய்ம், விரைவில் இலங்கை செல்லவுள்ளதாகவும் அப்போது யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மதித்து நடக்கும்படி அவர்களுக்கு வலியுறுத்தப்படுமெனவும் கூறினார். 2001ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாம் திகதி புலிகளின் அரசியல் குழுவொன்று ரெனா இராணுவ முகாமுக்கு விஜயம் செய்ததாகவும் அங்கு நான்கு மணித்தியாலங்கள் மட்டுமே அவர்கள் தங்கியிருந்தனரென்றும் கொழும்பிலுள்ள நோர்வே தூதரகம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத் தக்கது.

## சுட்டவர்கள் யார்?

கடந்த ஆறாம் திகதி அதிகாலை ஒன்றரை மணியளவில் ஆயித்தியமலை, கரடியனாறுப் பகுதியில் சுட்டுக்கொல்லப்பட்டவர்கள் பிரபா அணியைச் சேர்ந்த புலிகளென்றும் இவர்களைச் சுட்டவர்கள் கருணா அணியினரா அல்லது கருணா அணியினரென்ற சந்தேகத்தில் பிரபா அணியினரே தமது சகாக்களைச் சுட்டுக் கொன்றனராவென்று சந்தேகம் நிலவுவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். புலிகளின் புலனாய்வுப் பிரிவு உறுப்பினர் ஒருவர் உட்பட எட்டுப்பேர் சுட்டுக் கொல்லப்பட்டனரென்றும் பொலிஸார் தெரிவித்தனர். ஏழாம் திகதி நண்பகல் வரை சடலங்கள் அப்புறப்படுத்தப்படாமல் அதே இடத்திலேயே இருந்ததாக மக்கள் கூறுகின்றனர். கரடியனாறுக்குக் கிழக்கே ருக்கம் நீர்த்தேக்கப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. ஆயித்தியமலையை நோக்கிச் சென்று கொண்டிருந்த புலிகள் மீது பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. தொப்பிகல காட்டுப் பகுதியில் கருணா அணியினரின் முகாம்கள் இருக்கலாமென்றும் பொலிஸார் கூறினர்.

## நாயன்மார் கட்டில் இளைஞரின் சடலம்

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டைச் சேர்ந்த நவரட்ணராஜா பிரேம்குமார் என்ற 25 வயது இளைஞரின் சடலம் நாயன்மார் கட்டு என்ற இடத்தில் வெட்டுக்காயங்களுடன் கடந்த 7ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்டது. முதல் நாள் வீட்டுக்குச் சென்ற மூவர் இவரை விசாரணைக்கென அழைத்துச் சென்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். புளொட் இயக்கத்துடன் முன்னர் செயற்பட்ட இவருக்கு இராணுவத்துடன் தொடர்பிருப்பதாகச் சில தினங்களுக்கு முன்னர் புலிகள் எச்சரிக்கை விடுத்தனரென்று இவரது தந்தை தெரிவித்தார்.

## சர்வதேச பத்திரிகையாளர் தினம்

பத்திரிகையாளர்களின் ஒருமைப்பாட்டுக்கான சர்வதேச தினம் கடந்த எட்டாம் திகதி உலகெங்கும் அனுஷ்டிக்கப்பட்டது. ஜெர்மனிய பாசிஸ்டுகளால் சிறைவைக்கப்பட்டிருந்த யூலியஸ் பியூசிச் என்ற செக்கோஸ்லாவிய நாட்டின் முற்போக்குப் பத்திரிகையாளர் 61 வருடங்களுக்கு முன்னர் அதாவது செப்டெம்பர் எட்டாம் திகதி தூக்கிலிடப்பட்டார். முதலாம் உலக யுத்தத்தின் கொடூரங்கள் பற்றி 12 வயது மாணவனாக இருந்தபோதே அவர் எழுதினார். தனது பதினேழாவது வயதில் செக்கோஸ்லாவியாவின் புரட்சிகர இடதுசாரிக் கட்சியின் பத்திரிகையில் கட்டுரைகளை எழுத ஆரம்பித்தார். சிறையிலிருந்தபோது இவர் எழுதிய ‘தூக்குமேடைக் குறிப்பு’ என்னும் நூல் யுத்தக் கொடூரங்களை எதிர்க்கும் பக்கச்சார்பற்ற ஜனநாயக சார்பு, முற்போக்குப் பத்திரிகையாளர்களுக்கு ஓர் ஆதர்ஷமாகும். பேர்லினில் புளொட்சென்சன் என்ற இடத்திலுள்ள நாஸி வெறியர்களின் சிறைக்கூடத்தில் இவர் தூக்கிலிடப்பட்டார்.

# முரசம்

## சர்வகட்சிப் பேச்சுவார்த்தை

***அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.***

**ஜனாதிபதி, புலிகளுடனான பேச்சுவார்த்தைக்கு முன்னர் தான் சர்வகட்சிப் பேச்சுவார்த்தை ஒன்றிற்கு அழைப்பு விடுக்கப்போவதாக அறிவித்துள்ளார். தற்போது நிலவும் அபிப்பிராய பேதங்களுக்குத் தீர்வு காண்பதற்கு இது ஓர் உகந்த மார்க்கமே. அதேவேளை, புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளில் பங்கேற்க முடியாத கட்சிகள், தங்கள் தீர்வுக்கான ஆலோசனைகளை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பமளிக்கும் களமாகவும் இது அமைந்துள்ளது. மேலும் நாட்டிலுள்ள பலதரப்பட்ட கட்சிகளின் கருத்துக்கள் எவ்வாறுள்ளன என்பது குறித்தும் இத்தகைய சர்வகட்சிப் பேச்சுவார்த்தையின் மூலம் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும். மேலும் வடக்கு - கிழக்குக்கு மட்டுமன்றி மலையகம் உள்ளிட்ட சகல பிரதேசங்களிலும் சிறுபான்மையினர் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் குறித்து எடுத்தாராயப்படவும் தீர்வுகள் பரிசீலிக்கப்படவும் வாய்ப்பாக அமையும். அரசாங்கத்துக்கும் புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தையில் இரு தரப்புகள் மட்டுமே பங்குபற்றுவதால் ஏனைய தரப்புகளின் கருத்துக்கள் ஆராயப்படக் களம் இல்லை என்ற ஓர் பிரச்சினை எழுமாயின் அதற்கான ஓர் தீர்வாகவும் இவ்வணுகுமுறை அமைகின்றது. குறிப்பாக, மலையகத் தமிழர் பிரச்சினை, முஸ்லிம்கள் பிரச்சினை மாற்றுக் கட்சிகளின் கருத்துக்கள் என்பன ஆராயப்பட இங்கு இடம் கிடைக்கிறது. இங்கு ஆராயப்பட்ட விடயங்கள் குறித்து புலிகளுடனான பேச்சுவார்த்தையில் உள்ளீடு செலுத்தக் கூடியதாகவும் இது அமையும். இதனால் ஒருவகையில் பன்மைத்துவத்தைப் பேணக்கூடியதான ஒரு மாற்று வழியாக இது அமையும். ஆயினும் இங்கு அவதானத்துடன் செயலாற்ற வேண்டிய அவசியமும் உள்ளது. தீர்வொன்றைக் காண்பது குறித்த நாட்டு மக்கள் அனைவரதும் உண்மையான ஆதங்கத்தை மனதிற் கொண்டு சகலரும் இங்கு செயலாற்ற வேண்டும். மாறாக தமது குறுகிய அரசியல் இலாபங்களையும், ஆட்சியைக் கைப்பற்றும் குறுக்கு வழிகளையும் மனதில் கொண்டு இதனை ஒரு அரசியல் மேடையாக்க எவரும் முனைந்தால் இதுவும் அர்த்தமற்ற ஒன்றாகவே முடியும். சர்வகட்சிப் பேச்சுவார்த்தையென்பது இதுதான் இங்கு முதல் தடவையுமல்ல. முன்னர் பிரேமதாஸவின் ஆட்சிக் காலத்திலும் சர்வகட்சிப் பேச்சுவார்த்தைகள் நிகழ்ந்தன. அவை எவ்வித முடிவையும் எட்டாமல் வெறும் கால விரயத்தோடு கலைந்தன. அத்தகைய நிலைமை இதற்கும் ஏற்படாதிருப்பதை உத்தரவாதப்படுத்திக்கொள்ள வேண்டும். இதனை ஏற்பாடு செய்பவர்கள், இப் பேச்சுவார்த்தைகள் ஆக்கபூர்வமாக அமைவதற்கும், கால விரயமாகிச் செல்லாது குறிக்கப்பட்ட கால அட்டவணைக்குள் நிறைவு பெறுவதற்கும் வழிசமைக்க வேண்டும். ஒன்றை மட்டும் யாவரும் மனதிலிருத்திக்கொள்ள வேண்டும். இப்போதுள்ள தேக்க நிலையை மாற்றியமைக்க ஏதாவது ஆக்கபூர்வமான முயற்சிகள் எடுக்கப்படாவிட்டால் யுத்தத்துக்கான ஓர் ஆபத்தை இந் நாடு மீண்டும் எதிர்நோக்க நேரிடும். இந்தச் சர்வகட்சிப் பேச்சுவார்த்தை அத்தகைய ஓர் ஆக்கபூர்வமான முயற்சியாக அமைந்தால் யாவருக்கும் நல்லதே!**

■■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

***என்றென்றும் அன்புடன்,***
***ஆசிரியர்.***

---

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

**நரன்**

# குருநகர் அவலமும் ஊடக அதர்மமும்

குருநகர்ப் பிரச்சினை ஒருவாறு ஆறி அடங்கி விட்டது. அங்கு பாலைதீவுக் கடலில் கடந்த 30ஆம் திகதி இரவு மீன்பிடித்துக்கொண்டிருந்த மீனவர்கள் தாக்கப்பட்டனர். இத் தாக்குதலின் போது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டு மீனவர் ஒருவர் காயத்துக்குள்ளாக்கப்பட்டதுடன் படகொன்றும் எரியூட்டப்பட்டது. சில மீனவர்கள் தடுத்து வைக்கப்பட்டு, சில படகுகள் எடுத்துச் செல்லப்பட்டன. பாலைதீவுக் கடற்பகுதியானது புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான கல்முனைப் பகுதியை அண்டியுள்ளது. கல்முனை யாழ்.குடாநாட்டைக் கண்காணிக்கும் புலிகளின் ஒரு கேந்திர நிலையமாகும். யாழ்.குடாநாட்டுக்குள் கடல் மார்க்கமாக திடீர் ஊடுருவல்களைச் செய்யக்கூடிய ஒரு தாக்குதல் முனையாகவும் அமைந்துள்ளது. அத்துடன் நீண்டதூர எறிகணைகளால் கல்முனையிலிருந்து குடாநாட்டுக்குத் தாக்குதல் நடத்தக்கூடிய வீச்செல்லைக்குள் அமைந்திருக்கும் பிரதேசமாகும். புலிகள் அப் பகுதியில் தமது எறிகலன் அரண்களை நிறுவியுள்ளதாகவும் அரச தரப்பினரால் சந்தேகிக்கப்பட்டு வருகிறது.

இத்தகைய ஒரு பகுதியில்தான் குருநகர் மீனவர்கள் மீதான தாக்குதல் நிகழ்த்தப்பட்டது. மீனவர்களைப் பொறுத்த வரையில் இத்தகைய கடற் தாக்குதல்கள் பலவற்றுக்கு முன்னரும் உள்ளானவர்கள்தான். முன்னர் குமுதினிப் படகுப் படுகொலை போன்ற பாரிய கடற் படுகொலைகளும் நிகழ்ந்துள்ளன. கடல் வலயப் பாதுகாப்பு அமுலாக்கப்பட்ட பின்பு கடற்படையினரால் அடிக்கடி மீனவர்கள் இம்சைக் குள்ளாகி வந்துள்ளனர். இது மட்டுமன்றி, இந்திய மீனவர் களுடனும் அவர்கள் சர்ச்சைப்பட வேண்டியிருந்தது.

ஆனால், இம்முறை நிகழ்ந்த தாக்குதல் இவற்றுக் கெல்லாம் மாறுபட்டிருந்ததுதான் இங்குள்ள வேறுபாடு. அதாவது, முன்னைய தாக்குதல்கள் அரச படைகளால் நிகழ்ந்தன. ஆனால், இந்தத் தாக்குதலோ புலிகளால் நிகழ்த்தப்பட்டுள்ளது. இந்த வகைக் கடற்தாக்கு தலொன்றைப் புலிகள் நடத்திய முதலாவது சம்பவமும் இதுவேயாகும்.

இச் சம்பவத்தையடுத்து குருநகர் மீனவர்கள் கொதித்தெழுந்தனர். மறுநாள் மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்திற்கும், கண்காணிப்புக் குழு அலுவலகத்திற்கும் சென்று முறைப்பாடு செய்தனர். சின்னக்கடை மீன் சந்தையில் வரி சேகரிக்கச் சென்ற புலிகளைத் திருப்பி அனுப்பிவிட்டு, கடைகளைப் பூட்டி ஹர்த்தால் நடத்தி, சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். புலிகளின் பொற்பதி வீதி அரசியற் பணிமனைக்குச் சென்று ஆர்ப்பாட்டம் செய்தனர். தமக்கு நேர்ந்த அவலத்தையிட்டு யாழ்.பத்திரிகைகளுக்கு எடுத்துரைத்தும் அப் பத்திரிகைகள் மீனவர்களின் முறைப்பாட்டை முற்றாக மறைத்து, சம்பவத்தையிட்டு வேறு விதமான சித்திரிப்பொன்றை வழங்கியதைக் கண்டு ஆத்திரமுற்ற மீனவர்கள், அப் பத்திரிகைக் காரியாலயத்திற்குச் சென்று கேள்வி கேட்டனர். செய்தி சேகரிப்பதற்கும், புகைப்படம் எடுப்பதற்கும் வந்த இப் பத்திரிகை நிருபர்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

உண்மையில் புலிகள் கூட இத் தாக்குதலை மேற்கொண்டதை நிராகரிக்கவில்லை. பி.பி.ஸி. தமிழோசையில் புலிகள் தரப்பில் பேட்டியளித்த செம்மணன், இத் துப்பாக்கிப் பிரயோகத்தைத் தாமே மேற்கொள்ள நேரிட்டதெனவும், காயமுற்று கிளிநொச்சி மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்ட மீனவர் விரைவில் திருப்பியனுப்பப்படுவா ரெனவும் தெரிவித்திருந்தார். ஆனால், இக் குடாநாட்டுப் பத்திரிகைகளோ, இச் சம்பவம் ஏதோ பாலைதீவு மீனவர்களுக்கும் குருநகர் மீனவர்களுக்கும் நடந்த மோதலென வலிந்து திரிபுபடுத்த முற்பட்டன.

குடாநாட்டுப் பத்திரிகைகள் மட்டுமல்ல, கொழும்பு தனியார் ஊடகங்களிலும் இவ்வாறான ஒருங்குபட்ட சுய தணிக்கை ஒன்றை இவ்விடயத்தில் அமைக்ககூடியதாக இருந்தது. எந்த மூலையில் நிகழும் செய்திகளையும் உடனுக்குடன் தெரிவிப்பதாக மணித்தியாலத்துக்கு ஒரு செய்தி அறிவிப்பைச் செய்துவரும் இவ்வூடகங்கள் இச் சம்பவம் நிகழ்ந்து பல மணித்தியாலங்கள், நாட்கள் கடந்தும் இச் சம்பவத்துக்கு எதிராக ஒரு பெரிய ஹர்த்தால், ஆர்ப்பாட்டம் நிகழ்ந்தும் செய்தியைச் சொல்லாமலே இருட்டடிப்புச் செய்துகொண்டன. இதேவேளை மட்டக்களப்பில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தை ஒளிபரப்பி, அது தமது கணினியமைப்பினூடாகப் பெறப்பட்ட உடனடிச் செய்தியெனக் கீழே எழுத்தோட்டத்தில் சுட்டிக்காட்டித் தமது துரித செயற்பாட்டை விளம்பிக் கொண்டதும், அதே தருணத்தில் நிகழ்ந்தது. இத்தகைய கணினிப் பரிவர்த்தனைத் தொழில்நுட்பங்களைக் கொண்டவர்களாகத் தங்களை விளம்பிக் கொள்ளும் ஊடகங்கள் கூட, இந்தச் சம்பவத்தைப் பற்றி எதையுமே சொல்லவில்லை என்று காணும்போது இவ்வூடகங்களின் உண்மைத் தன்மை கேள்விக்குறியாகி நிற்கிறது. அதிலும் ஒரு சில ஊடகங்கள் பொதுமக்களுக்கு நன்கு தெரிந்த ஒன்றைப் பொதுமக்கள் முன்னாலேயே மாற்றிச் சொல்லும்போது அவை பொது மக்களிடம் அம்பலமாகிப் போகின்றன. அவ்வாறு அம்பலமாகுமென நன்கு தெரிந்தும், அப்படி அம்பலமாவதை விட தாம் திரிபுபடுத்தித் தெரிவிப்பதே மேலெனஅவர்கள் எண்ணும் நிலைமைக்கு உள்ளாகியிருப்பதுதான் கவலைக்குரியது.

**உண்மையில் புலிகள் கூட இத் தாக்குதலை மேற்கொண்டதை நிராகரிக்கவில்லை. பி.பி.ஸி தமிழோசையில் புலிகள் தரப்பில் பேட்டியளித்த செம்மணன், இத் துப்பாக்கிப் பிரயோகத்தைத் தாமே மேற்கொள்ள நேரிட்டதெனவும், காயமுற்று கிளிநொச்சி மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்ட மீனவர் விரைவில் திருப்பியனுப்பப்படுவாரெனவும் தெரிவித்திருந்தார். ஆனால், இக் குடாநாட்டுப் பத்திரிகைகளோ, இச் சம்பவம் ஏதோ பாலைதீவு மீனவர்களுக்கும் குருநகர் மீனவர்களுக்கும் நடந்த மோதலென வலிந்து திரிபுபடுத்த முற்பட்டன.**

முன்னைய காலத்தில் இலங்கை அரசாங்கத்தின் செய்தி மையமாக 'லங்கா புவத்' என்ற நிலையம் செய்திகளைத் தெரிவித்து வந்தது. அவற்றின் செய்திகள் நிகழ்ந்த சம்பவங்களின் உண்மைத் தன்மைக்கு அப்பட்டமாக மாறாக இருக்கும். அரச படைகள் குண்டுத் தாக்குதல் நிகழ்த்தி பச்சிளங் குழந்தைகளும், முதியோரும் கொல்லப்பட்டாலும் அது பயங்கரவாதிகள் கொல்லப் பட்டனரென ஒலிபரப்பும்.

ஒரு மோதலில் கொல்லப்பட்ட போராளிகளின் தொகையை இரு மடங்காகக் கூட்டியும் இராணுவத்தினரின் தொகையை சொற்பமாகக் குறைத்தும் அறிவிக்கும். இதனால் தமிழ் மக்கள் மட்டுமன்றி சிங்கள மக்கள் கூட நாளடைவில் இச் செய்திகளை நம்ப மறுத்தனர். தமிழ் மக்கள் மத்தியில் 'லங்கா புவத்' என்பதற்குப் பதிலாக 'லங்காப் பொய்' என்ற பட்டப் பெயரே இதற்கு விளங்கலாயிற்று.

மக்களுக்கு நன்கு தெரிந்த உண்மைகளில் கூட பொய் கூற முற்பட்டால் அந்த ஊடகங்கள் செய்தி கூறும் அருகதையை இழந்துவிடும். யாழ். பத்திரிகைகளும் அவ்வாறு நடந்துகொண்டதால்தான் பாதிக்கப்பட்ட மக்களின் விசனத்துக்குள்ளாயின.

பொதுவாகவே தற்காலத் தமிழ் ஊடகங்கள் ஒரு பக்கச் சார்பாகவே செயற்படுவதைக் காணக் கூடியதாக உள்ளது. கட்சிகளுக்கு இடையிலான விடயங்களில் அவர்கள் மாற்றுத் தமிழ்க் கட்சிகளுக்குக் காட்டிவந்த மாற்றாந்தாய் மனப்பான்மை வெளித் தெரிந்தாலும், அவை குறித்துப் பெரிய அளவில் எதிர்ப்புக் காட்டப்படவில்லை. ஆனால் தற்போதைய சம்பவம் கட்சிகளுக்கு மீதானதாக அல்லாமல், பொதுமக்கள் மீதானதாகவே அமைந்துவிட்டது தான் இங்குள்ள வேறுபாடு. தமக்கு நேர்ந்த ஒன்றைக் குறித்து இப் பத்திரிகைகள் எவ்வாறு செயற்படுகின்றன என்பதை நேரில் கண்டபோதுதான் அவர்களுக்கு விழிப்பும் விசனமும் ஏற்பட்டது. இந்த விழிப்புணர்வு ஒரு ஆரம்பமே. ஊடகங்கள் தொடர்ந்தும் தமது அதே போக்கைக் கடைப்பிடித்தால் அது பொதுமக்களால் இலகுவாகவே அடையாளம் காணப்பட்டுவிடும்.

ஊடகங்கள் உண்மையில் மக்களின் சார்பிலிருந்து செயலாற்றக் கற்றுக்கொள்ள வேண்டும். மக்களுக்கு ஏற்படுகின்ற இன்னல்கள் யாரால் ஏற்பட்டாலும் அவற்றின் உண்மைத் தன்மையை எடுத்தியம்பவும், சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு இடித்துரைக்கவும் அவர்கள் முன்வர வேண்டும். மாறாக, மூடி மறைக்கவோ, திரிபுபடுத்தவோ செய்வாளர்களானால் மக்கள் தங்களுக்கான தகவல்களுக்கு இந்த ஊடகங்களைச் சார்ந்திருக்க மாட்டார்கள்.

---

# ஜனாதிபதியின் நம்பிக்கையும் புதிய நகர்வும்

**அ**ண்மையில் நிகழ்ந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய மகாநாட்டின்போது ஜனாதிபதி பேச்சுவார்த்தை களையிட்டு தனது புதிய நம்பிக்கையை வெளியிட்டார். அவர் லண்டன் சென்று திரும்பியதையடுத்து வெளியிட்ட இந்த நம்பிக்கையில் புலிகள் பேச்சுவார்த்தைக்கு வருவார்களென்று முன்னதைவிட உறுதியான நம்பிக்கை தனக்கு ஏற்பட்டுள்ளதென்று தெரிவித்தார். தான் முன்னர் எப்போதும் இப்படியான நம்பிக்கையைத் தெரிவிக்கவில்லை என்றும் கூறி, இந் நம்பிக்கையில் பிரத்தியேகத் தன்மை ஒன்று இருப்பதைச் சுட்டிக் காட்டியிருந்தார்.

அவ்வாறான நம்பிக்கை தந்த விடயம் என்ன என்பதுதான் புரியவில்லை. அவருக்கு நம்பிக்கை கொடுக்கக்கூடிய எதுவும் வெளிப்படையாக நிகழ்ந்ததாகத் தெரியவில்லை. உண்மையில் பேச்சுவார்த்தை குறித்து அசைய முடியாத முட்டுக்கட்டை நிலையே தற்போது நிலவி வருகிறது. புலிகள் இடைக்கால நிர்வாக அதிகார சபை என்ற வரைபொன்றை முன்வைத்து அது பற்றி மட்டுமே முதலில் பேச முடியும் என்கின்றனர். ஜனாதிபதி சமகாலத்தில் நிரந்தர அரசியல் தீர்வு பற்றியும் பேச வேண்டுமெனக் கோரியிருந்தார். இந்தக் கோரிக்கை புலிகளால் நிராகரிக்கப்பட்டுள்ளது. இடைக்கால நிர்வாக சபை குறித்து முடிவு கண்டுவிட்டு அதன் பின்னரே நிரந்தரத் தீர்வு குறித்த பேச்சுவார்த்தைகளை ஆராயலாமெனப் புலிகள் வலியுறுத்துகின்றனர்.

இதேவேளை அரசாங்கத்தின் அங்கமான ஜே.வி.பி. இடைக்கால நிர்வாக அதிகார சபையை முன்னிறுத்திப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதை எதிர்க்கிறது. இவ் இடைக்கால நிர்வாக அதிகார சபை தனிநாட்டுக்கு வழிகோலும் முதற் படியென அது எச்சரிக்கிறது.

இந்த அரசாங்கமானது ஜே.வி.பி. இன்றித் தனித்தியங்க முடியாத ஒன்று. இந் நிலையில் ஜே.வி.பி.யை இணங்க வைக்காது இடைக்கால நிர்வாக அதிகார சபை குறித்துப் பேச்சுவார்த்தை நடத்த முடியாது.

இதேவேளை அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் கட்சிகளான நு.ஆ மற்றும் அமைச்சர் அதாவுல்லாவின் அணியினர் ஆகியோரும் இடைக்கால நிர்வாக அதிகாரசபையில் முஸ்லிம்களின் அபிலாசைகள் உள்ளடக்கப்படவில்லையென்ற கருத்தைக் கொண்டிருக் கிறார்கள். அரசாங்கம் இவர்களையும் அனுசரிக்க வேண்டியுள்ளது.

**லண்டனில் புலிகளின் அரசியல் ஆலோசகர் தங்கியுள்ளார். அவருடன் பேச்சுவார்த்தை ஏதும் இரகசியமாக நடத்தப்பட்டதா என்றும், அத்தகைய பேச்சுவார்த்தைகளில் புலிகள் பேச்சுவார்த்தைக்கு முன்வரக்கூடிய நம்பிக்கைகள் எவையும் ஈட்டப்பெற்றதாவென்றும் ஊகங்கள் கிளம்பியுள்ளன.**

இந்தக் கருத்து முஸ்லிம் காங்கிரஸுக்கும் உள்ளது. அவர்கள் பேச்சுவார்த்தையை நிராகரிக்காவிட்டாலும், பேச்சுவார்த்தையில் முஸ்லிம்களின் தனிப் பிரதிநிதித்துவத்தை வலியுறுத்துகிறார்கள். இதனைப் புலிகள் இதுவரை அங்கீகரிக்கவில்லை.

இதேவேளை பாராளுமன்றத்தில் 9 ஆசனங்களுடன் அங்கம் வகிக்கும் ஹெல உறுமய கட்சியும் இடைக்கால நிர்வாக சபைக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது.

இந் நிலையில் வெளிப்படையான எந்த மாற்றங்களும் ஏற்படாதபோது ஜனாதிபதி எப்படி இத்தகைய நம்பிக்கையைத் தெரிவிக்கிறார் என்பது சற்று ஆச்சரியமாக உள்ளது.

அவர் அண்மையில் மேற்கொண்ட லண்டன் விஜயத்தில் ஏதும் மர்மம் இருக்குமோவெனவும் சில வட்டாரங்களில் சந்தேகம் எழுந்துள்ளன. லண்டனில் புலிகளின் அரசியல் ஆலோசகர் தங்கியுள்ளார். அவருடன் பேச்சுவார்த்தை ஏதும் இரகசியமாக நடத்தப்பட்டதா என்றும், அத்தகைய பேச்சுவார்த்தைகளில் புலிகள் பேச்சுவார்த்தைக்கு முன்வரக்கூடிய நம்பிக்கைகள் எவையும் ஈட்டப்பெற்றதாவென்றும் ஊகங்கள் கிளம்பியுள்ளன.

ஜனாதிபதியின் இத்தகைய நம்பிக்கை குறித்து புலிகளின் அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் அளித்த பேட்டியில், புலிகள் பேச்சுவார்த்தைக்கு எப்போதும் தயாராகவே உள்ளனர். சந்திரிகா அம்மையார்தான் பேச்சுவார்த்தை மேசையில் வந்து அமர வேண்டியதாக உள்ளதெனத் தெரிவித்திருந்தார். இது வழமையாக அரசாங்கம் மீதான அவநம்பிக்கைத் தெரிவிக்கும் நிலைமையிலிருந்து சற்று மாறுபட்ட ஒன்றாகத் தெரிகிறது.

இதேவேளை தற்போது சர்வதேச சமூகம் பேச்சுவார்த்தைகள் மற்றும் யுத்த நிறுத்த மீறல்கள் பற்றி, மிகுந்த முனைப்புடன் ஈடுபாடு காட்டத் தொடங்கி யுள்ளமையையும் எடுத்து நோக்க வேண்டியுள்ளது. அவர்களின் பின்னணிச் செயற்பாடுகள் நிலைமையில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளனவா என்பது மற்றொரு ஊகமாக உள்ளது.

இதேவேளை புலிகளுடன் பேசுவதற்கு முன்னதாக, சர்வ கட்சிப் பேச்சுவார்த்தையொன்றை நடத்தவுள்ளதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார். இது இத்தகைய பேச்சுவார்த்தைக்கு ஒரு பொது அங்கீகாரம் காணும் அணுகுமுறையாகத் தெரிகிறது. அதேவேளை பேச்சுவார்த்தையில் அனைத்துத் தரப்பையும் ஈடுபாடு காட்டச் செய்யும் வழிமுறையாகவும் அமைகிறது. அத்துடன் சர்வதேச சமூகத்துக்கு ஏற்புடைய ஒரு அரசியல் அணுகுமுறையொன்றைக் கடைப்பிடிப்பதாகவும் உணர்த்த விழைவதாக உள்ளது. எது எப்படியானாலும் இறுதியில் பூனைக்கு மணி கட்டுவது எப்படி என்ற பிரச்சினை இருக்கத்தான் செய்கிறது. இடைக்கால அதிகாரசபை குறித்து என்ன முடிவு என்ற கேள்விதான் அது. பொறுத்திருந்து பார்க்கலாம், இதன் முடிவை!

# கூட்டமைப்புக்கு புதிய கட்டளைகள்

இரண்டு தசாப்த காலத்துக்கு மேலாக யுத்தத்தினாலும் 2002ஆம் ஆண்டு பெப்ரவரி இரண்டாம் திகதியிலிருந்து இன்றுவரையுமான யுத்த நிறுத்த காலத்திலும் இலங்கையில் வாழ்கின்ற தமிழ் மக்களின் அவலம் தொடர்கதையாகிவிட்டிருக்கிறது.

மேற்குறிப்பிட்ட இரண்டு காலப்பகுதிக்குமிடையிலான வேறுபாட்டை மக்கள் உணர்ந்துகொள்ள முடியாதபடி இன்னும் நாட்டின் ஒவ்வொரு இடங்களிலும் நடந்துவரும் படுகொலைகளும், வன்முறைகளும் பதற்றத்தைத் திட்டமிட்டு நிலவ விட்டுள்ளன. ஆயுதம் தாங்கிய போராட்டம் ஒன்றை நடத்தும் அவசியத்தை பேரினவாத அரசே ஏற்படுத்தியது என்பதை எவரும் மறுக்க முடியாது. இதையே காரணமாகக் கொண்டு தமிழ் மக்களை மேலும் அடிமைகளாக வைத்திருப்பது நியாயமாகாது என்பதை தமிழர் தரப்பும் சிங்கள தரப்பும், சர்வதேசமும் இன்று புரிந்துகொண்டுள்ளன. வடக்குக் கிழக்குப் பகுதிகளிலிருந்து தமிழர்கள் இடம்பெயர்ந்து வடக்குக் கிழக்குக்கு வெளியே குறிப்பாக கொழும்பிலேயே அதிகமாக வாழ்ந்து வருகின்றனர். உண்மையிலேயே தமிழர்களை எதிரிகளாகக் கருதிப் பழிவாங்கும் மனோபாவம் சிங்கள அரசுகளுக்கு இருந்திருந்தால் வடக்குக் கிழக்குக்கு வெளியே நாட்டின் எப் பாகத்திலும் தமிழர் வாழ்ந்திருக்க முடியாது.

சரி பிழைகளுக்கு அப்பால் கடந்தகாலத் தவறுகள் உணரப்பட்டுள்ளதுதான் பிரதான காரணம். ஆனால் தமிழர் தரப்பில் இன்னும் தவறுகள் உணரப்பட்டதாக இல்லை.

தமிழ் மக்களை சிங்கள தேசத்துக்கு எதிரானவர்களாக - சிங்கள அரசுக்கு எதிரானவர்களாக வழிநடத்துவதன் ஊடாக போராட்ட குணங்களுக்கும் காட்டு வாழ்க்கைக்கும் நியாயம் தேடுகின்ற முயற்சி தொடர்கிறது. சிங்கள தேசம் என்று கூறுவதனூடாகவோ, சிங்கள அரசு என்று கூறுவதனூடாகவோ, தமிழீழம் பிரிந்து ஆட்சி புரியப்படுவதாகக் காட்டிவிட முடியாது. தமிழ் மக்கள் இவ்வளவு யுத்த வடுக்களைச் சுமந்தும் இலங்கையின் பிரசைகளாகவே வாழ்கின்றனர். இலங்கை அரசின் அங்கீகாரம் இல்லாமல் எதையும் செய்துகொள்ள முடியாது என்பதைப் புரிந்துகொண்டுள்ளனர்.

இந்த நிலையிலிருந்து தமிழ் மக்களை தொடர்ந்தும் தனிமைப்படுத்தி வைத்திருப்பது எப்படி என்பதுதான் இப்போது நடந்துகொண்டிருக்கும் சூட்சுமங்கள். அரசாங்க உதவிகள் தமிழ் மக்களுக்கு நேரடியாகக் கிடைப்பதைத் தடுப்பதும், அதற்கான வழியை மூடி விடுவதும்தான் இதில் பிரதானமானது. உதாரணமாக,

பாராளுமன்றத் தேர்தல் மூலமாகப் பெறப்பட்ட பாராளுமன்றப் பதவியை பேரம் பேசும் சக்தியாக மாற்றி, அமைச்சுப் பொறுப்பைப் பெற்றுக்கொண்டு, அழிந்த வட கிழக்கைப் புனரமைக்கவும், அன்றாடம் மக்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கவும் பாடுபட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சிகள், போராட்டத்தைச் சொல்லி வாழ்க்கை நடத்தி வந்தவர்களுக்குப் பெரும் பின்னடைவாக இருந்தது. அடிப்படையான தமிழர் பிரச்சினைகள் நிரந்தரமாக, கௌரவமாகத் தீர்க்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தும் அதேவேளை, மக்கள் முகங்கொடுக்கும் அன்றாடப்

**அடிப்படையான தமிழர் பிரச்சினைகள் நிரந்தரமாக, கௌரவமாகத் தீர்க்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தும் அதேவேளை, மக்கள் முகங்கொடுக்கும் அன்றாடப் பிரச்சினைகளையும் தீர்க்க வேண்டும் என்ற டக்ளஸ் தேவானந்தாவின் வாதத்தை அப்போது விமர்சித்தவர்கள், பின்னர் எம்.பி. பதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் பற்றி வாய் கிழியக் கத்தினார்கள்.**

பிரச்சினைகளையும் தீர்க்க வேண்டும் என்ற டக்ளஸ் தேவானந்தாவின் வாதத்தை அப்போது விமர்சித்தவர்கள், பின்னர் எம்.பி. பதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் பற்றி வாய் கிழியக் கத்தினார்கள். டக்ளஸ் தேவானந்தா பெற்றுத் தந்தால் அது சலுகை என்றும், தாம் பெற்றுத் தந்தால் உரிமை என்றும் இப்போதும் கூறிவருவதில் அப்படி என்ன தமிழ் உணர்வு இருக்கிறதோ! மக்களுக்கே வெளிச்சம்.

மக்களைத் திசைதிருப்பவும், அரசு வழங்கும் உதவிகளைத் தடுக்கவும் எடுக்கப்பட்ட முதல் நடவடிக்கைதான் புலிகளின் ஆதரவுடன் தமிழ்க் கூட்டமைப்பு அமைக்கப்பட்டது. அப்போதும் இரு ஆசனங்களைப் பெற்றுக்கொண்ட ஈ.பி.டி.பீ. அப்போதைய யூ.என்.பீ. அரசோடு இணைந்திராததால் எதையும் செய்யவில்லை. மறுபுறத்தில் புலிகளுடன் இணக்கப்பாடு கண்டிருந்த தமிழ்க் கூட்டமைப்பும் யூ.என்.பீ.யைப் பயன்படுத்தி எதையும் தமிழ் மக்களுக்குச் செய்து கொடுக்கவில்லை.

பின்னர் 2004ஆம் ஆண்டு ஏப்ரல் நான்காம் திகதி நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் மிக மோசமான முறைகேடுகளை நடத்தி புலிகளின் விருப்புக்குரியவர்கள் மட்டுமே எம்.பீ.க்களாக வர வேண்டும் என்பதில் அதிக கவனம் எடுக்கப்பட்டது. இவற்றைத் தகர்த்து மக்கள் துணிந்து வாக்களித்து மீண்டும் டக்ளஸ் தேவானந்தாவைத் தங்கள் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்தனர்.


இது புலிகளுக்குப் பெரும் தலையிடியாக அமைந்தது. ஆனாலும் இருபத்திரண்டு பாராளுமன்றப் பிரதிநிதிகளைக் கொண்டிருக்கும் தமிழ்க் கூட்டமைப்புக்கு ஒரேயொரு ஆசனத்தைக் கொண்டிருக்கும் ஈ.பி.டி.பீ. சவால் விடுமா எனப் பல வினாக்கள் தொடுக்கப்பட்டன.

இன்று நடந்துகொண்டிருப்பது என்ன? நான்கு மாதங்கள் கழிந்த நிலையிலும் மேற்படி இருபத்திரண்டு எம்.பீ.க்களாலும் எவ்வித அபிவிருத்தித் திட்டங்களோ, அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான அரசியல் ரீதியிலான திட்டங்களோ முன்னெடுக்கப்படவில்லை. சிறுபான்மை அரசுடன் பேச முடியாது என்று குறை கூறும் புலிகள், தாமே அந்தப் பலத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மறந்து பேசுகின்றனர் என்று அவதானிகள் கூறினர்.

அரசியலில் பேரம் பேசும் சக்தியாக இல்லாத புலிகள், ஆயுதக் கொள்வனவு மூலமாகவும், படை பலம் மூலமாகவுமே தீர்வை எட்ட முடியும் எனக் கூறிவருவதை சர்வதேச சமூகம் அவதானித்து வருகிறது.

இதற்கிடையே கடந்த ஆகஸ்ட் 30ஆம் திகதி கிளிநொச்சியிலுள்ள புலிகளின் நடுவப் பணிமனையில் தமிழ்ச்செல்வன் தமிழ்க் கூட்டமைப்பு எம்.பீ.க்களைச் சந்தித்திருக்கிறார். இச் சந்திப்புக்கு முன்னைய நாட்களில் கூட்டமைப்புக் குறித்து தமிழ் மக்கள் மத்தியில் பலத்த விமர்சனங்கள் எழுப்பப்பட்டு வந்தன. இச் சந்திப்பின்போது தமிழ்த் தேசியத்துக்கு எதிராகவும், இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைக்கு எதிராகவும் நாட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் பிரசாரங்கள் தொடர்பில் பல மட்டத்தவர்களுக்கும் விளக்கமளிக்க நான்கு குழுக்கள் அமைக்கப்பட்டதுதான் பிரதானமாகிறது. இக் குழுக்கள் பாராளுமன்றத்துக்குள்ளும், தென்பகுதி மக்களுக்கும், மலையக மக்களுக்கும், முஸ்லிம் மக்களுக்கும், சர்வதேச சமூகத்திற்கும் புலிகளின் நிலைப்பாட்டையும் இடைக்கால அதிகார சபை குறித்தும் விளக்குவதற்காக அமைக்கப்பட்டது.

இக் கூட்டம் முடிந்ததும் இருபத்திரண்டு எம்.பீ.க்களும் விளக்கமளிக்கும் நோக்கத்தோடு முதல் விஜயமாக திருகோணமலைக்குச் சென்றுள்ளனர். இதுவரை மக்கள் அதை விரும்புகிறார்கள்; இதை விரும்புகிறார்கள் என்று கூறி வந்தவர்கள், இப்போது தமிழ் மக்களுக்கே முதலில் விளக்கமளிக்கப் புறப்பட்டிருப்பது எதை உணர்த்துகிறது? இதுவரை காலமும் ஏகப்பிரதிநிதிகளின் கருத்துக்களே மக்களின் கருத்துக்களாக வெளியுலகுக்குத் தெரிவிக்கப்பட்டு வந்தன. வடக்குக் கிழக்கில் வாழும் மக்கள் தமது வாக்குகளையே சுதந்திரமாக அளிக்க முடியாத சூழலில் சுதந்திரமாகக் கருத்துச் சொல்கிறார்கள் என்பதுதான் வேடிக்கையானது. இந்த உண்மை



ஆர்.சம்பந்தன்

இப்போது சர்வதேச சமூகத்துக்கு மிகத் தெளிவாகப் புரிந்துள்ளது.

ஆங்கில நாளிதழ் ஒன்றின் தரவுப்படி,

1. பாராளுமன்றத்தில் புலிகளின் நிலைப்பாட்டை விளக்குவோர்.
ஆர்.சம்பந்தன்,
கே.சிவாஜிலிங்கம்,
என், ரவிராஜ்,
கே.துரைரெட்ணசிங்கம்.

2. தென்பகுதி மக்களுக்கு விளக்கமளிக்கப் புறப்பட்டிருப்பவர்கள்.
சுரேஸ் பிரேமச்சந்திரன்,
சிவநாதன் கிஷோர்.
எஸ்.கனகரெட்னம்,
நி.கனகசபை, வீநோதாரலிங்கம்.

3. இராஜதந்திரிகளுக்கு விளக்கமளிக்கப் போவோர்கள்.

அலசுவது
- மதியூகி -

பொ.கஜேந்திரகுமார், ஜோசப் பரராஜசிங்கம், செல்வம் அடைக்கலநாதன்,
எஸ்.கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன்.

4. தமிழ் மக்களிடம் விளக்கவுள்ளவர்கள்.
மாவை சேனாதிராஜா,
ஜெயானந்தமூர்த்தி, கே.பத்மநாதன்,
கே.ஈழவேந்தன், கே.சிவநேசன்,
சிவசக்தி ஆனந்தன்,
ஏ.அரியநேந்திரன், க.தங்கேஸ்வரி.

மக்களின் விருப்பங்களுக்கு மதிப்பளிக்காமல் தமது தீர்மானங்களை விளக்குவதாக திணிக்க முற்படும் கூட்டமைப்பு எம்.பி.க்களின் தந்திரங்கள் பலிக்குமா என்பது கேள்விக்குறிதான்.

---

## அதிரடி அய்யாத்துரை



**ஜனாதிபதி** பேச்சுவார்த்தை பற்றி நம்பிக்கை தெரிவிச்சுப் பேசியிருக்கிறாரெல்லே. ரெண்டெழுத்தார் பேச்சுக்கு வருவினமெண்டு தனக்கு நம்பிக்கை இருக்குதெண்டும் அப்பிடியான ஒரு நம்பிக்கையை இப்பதான் தான் உறுதியாச் சொல்லுறதாயும் பேசியிருந்தா. நம்பிக்கை தெரிவிக்கிறது வழக்கம்தான். ஆனால் இந்தத் தடவைதான் இவ்வளவு உறுதியாச் சொல்லுறதா அவ சொன்னதுதான் சம்திங் டிபரெண்டாக் கிடக்குது. லண்டனால வந்துதான் இப்பிடிச் சொல்லுறா. அப்ப லண்டனில யாரும் நம்பிக்கை குடுத்துச்சினமோ. அங்க அவவின்ர பிள்ளைகள் இருக்கினம். அவைய விடுங்கோ. வேற யார்.....? ஆ! ரெண்டெழுத்தாற்ர ஆலோசகர் அங்கயெல்லே இருக்கிறார்! அப்ப அங்கயேதும் திரைமறைவில நம்பிக்கைகள் பரிமாறப்பட்டிருக்குமோ? எனக்கொண்டும் தெரியாது. 1+2, 2+3....எண்ட கணக்கா கல்க்குலேஷன் போடுது அரசியல் வட்டாரம். என்னவோ, யார் குத்தியாவது அரிசியானாச் சந்தோசம்தான்.

**"ரெண்டெழுத்தார்** பேச்சுவார்த்தைக்கு வருவார்கள்" எண்டு ஜனாதிபதி சொல்ல, "இல்லை, நாங்கள் எப்பவோ பேச்சுக்கு ரெடி. மேசையில எப்பவே வந்து இருந்திட்டம். ஜனாதிபதிதான் வந்து கதிரையில இருக்க வேணும்" எண்டு ரெண்டெழுத்து அரசியல் பொறுப்பாளர் பதில் சொல்லியிருக்கிறார். அட, இப்பிடி ஆள முந்தி ஆள், "நான் ரெடி. நீங்க ரெடியா" எண்டு பாடுற அளவில மெட்டர் 'துறா' வெண்டால், ஏனாம் இத்தகுதிக்கு ஒண்டும் நடக்கேல்லையெண்டதுதான் வியப்பாக் கிடக்குது. மாப்பிள்ளை மணவறையில, கூறையுடுத்தினபடி பொண்ணும் பக்கத்திலயெண்டால் ஏன் இன்னும் தாலி ஏறேல்லையெண்டதுதான் விளங்கேல்லை. ஒருவேளை சீதனப் பேச்சில சிக்கலோ! வெயிட் அண்ட் ஸீ!

**நடந்து** முடிஞ்ச ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின்ர மாநாட்டில ஒரு நல்ல விஷயத்தச் சொல்லியிருக்கிறார் சுற்றுலாத்துறை அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க. பேச்சுவார்த்தை பற்றி தங்கட கட்சிக்குள்ள ஜனாதிபதி மட்டும் கருத்துச் சொல்லட்டும். ஆளாளுக்கு அபிப்பிராயம் சொல்லிக்கொண்டிருக்க வேண்டாம். கருத்து ஒரே கருத்தாவே இருக்க வேணும் எண்டு சொல்லியிருந்தார். மெத்தச் சரி. ஆளாளுக்கு ஒவ்வொண்டைப் பேசினால் குழப்பத்திலதான் முடியும். நம்பகத் தன்மையும் கெட்டுப் போகும். கருத்துச் சொல்லுறவர் செயற்படுத்தக் கூடியதாயும் இருக்க வேணும். ஜனாதிபதியோடயே விஷயத்தை விட்டிடுறது நல்லது. டு மெனி குக்ஸ், ஸ்பொயில் த சூப்!

**வன்னிக்கும்** போய் அரசியல் பொறுப்பாளரைப் பேட்டிகண்ட தனியார் தொலைக்காட்சித் தம்பிரான் ஒருவர் கூட்டமைப்புக்காறரைப் பற்றி சரியாப் போட்டுக் குடுத்திட்டுவந்தாராம். நீங்கள் நம்பித் தெரிஞ்சு அவை வெறுமனே பாராளுமன்ற சுகபோகங்களை அனுபவிச்சபடி சொகுசாயிருக்கினமே தவிர, உருப்படியா எதையும் செய்த பாடில்லை. அமெரிக்கா போன சம்பந்தனார் உச்சிப் போட்டார்; கஜேந்திரகுமாரர் சொதப்பிப் போட்டார் எண்டு நல்லாப் போட்டுத் தாக்கியிருக்கிறாராம். தன்ர நிகழ்ச்சிக்காக எங்களக் கூப்பிட்டுப் பேட்டியெடுத்துப் போட்டு எங்களுக்கே அள்ளி வைக்கிறாரெண்டு கூட்டமைப்பு வட்டாரத்துக்குள்ள குமைச்சலாம். தங்கள் எல்லாரையும்விட தான்தான் ஏதோ அக்கறையா இருக்கிறதாக் காட்டிக்கொள்ளத்தான் ஆள் வில்லங்கப்படுகிறாரெண்டு கூட்டுப் பிரமுகரொருவர் குமுறினராம். முந்தியும் ஒஸ்லோ பேச்சுக்காலத்தில நோர்வே போய் பாலசிங்கத்தைப் பேட்டி காணக்கையும் இப்பிடித்தான் கூட்டமைப்பார் வேலை செய்யினமில்லையெண்டு மூட்டிக் குடுக்கப் போய் "நீ ஏன் தம்பி அவைக்குப் பின்னால அலையிறீர்? அவையில வேலையில்லை. "நாங்கள்தான் எல்லாத்தையும் தீர்மானிக்கிறது" எண்டு ஆலோசகரிட்டக் கழட்டு வாங்கினவர், இன்னும் அதே வேலைய விட்ட பாடாயில்லைப் போல. "போட்டுத் தாக்கு! போட்டுத் தாக்கு.....ஹிட்டு ஸோங்கொண்டு...... சொறி, பெட்டிஷன் ஒண்டு போட்டுத் தாக்கு!"

**ஆர் அவண்டிச்சினமோ** தெரியேல்லை, ஈழத்து வேந்தனாருக்கும் கடைசியா எங்கட விநாயகத்தாற்ர கதிதான் போல. என்னதான் மிடுக்காப் பேசினாலும், ஆங்கில அகராதியக் கரைச்சுக் குடிச்சுக் கக்கினாலும், உன்னால சுழியோடிறவை சுழியோடினால் உள்ளதையும் கெடுத்த நொள்ளிக் கண்ணாய்த்தான் ஆக வேண்டியிருக்கும் போல. வேந்தனாருக்கு வாராது வந்த தேசியப் பட்டியல் ஆசனத்திலயிருந்தும் யாரோ காலவாரிக் கவிட்டுக் கொட்டப் பாக்கினம். பாவம் அந்தாள். ஏதோ கொஞ்சம் அறளைப் பேச்சைத் தவிர ஆள் அண்டு தொட்டு இண்டு வரை ஒண்டே சொன்னவர். ஆனால் பிரிவினையெண்டு சொல்லித் தமிழ்ழக் கோரிக்கையை நிராகரிச்சவையும், கட்சிப் பெயரிலகூட அகில இலங்கையெண்டு அழுத்தம் திருத்தமாப் பதிஞ்சு கொண்டவையும், ஏன் குட்டிமணி, தங்கதுரையெல்லாம் பயங்கரவாதிகளெண்டு சொல்லி வழக்குப் பேச மறுத்தவையும் இப்ப தமிழ் மறவரெண்டு மார்தட்டிக்கொண்டு முன்னுக்கு நிக்கினம். எல்லாம் காலத்தின்ர கோலந்தான். ஐ பீல் வெரி சொறி .. போர் வேந்தன்!

**தொண்டாவும்** அரசாங்கத்தில சேந்திட்டார் கடைசியா. இதோட அரசாங்கத்தைக் கவுக்கிறதுக்கு இருந்த கடைசிக் கதவும் அடைபட்டுப் போச்சுது. இப்பதான் கூட்டமைப்புக்காறருக்கு ஏதோ ஞானம் பிறந்திருக்கு. ஏதோ, தங்களாலதான் எல்லாம் ஆக்கவும் முடியும்; அழிக்கவும் முடியும் எண்ட நிலமையை வைச்சிருக்கவும் அதைக் காட்டி அரசாங்கத்தை விரும்பின மாதிரி ஆட்டிப் படைக்கவும் கனவு கண்டிச்சினம். கவிண்டு போச்சுது. கனவில இருந்த காலத்தில, மலையகக் கட்சிகளுக்குள்ள ஏட்டிக்குப் போட்டியாத் தூண்டி, ஒருத்தரைத் தூக்கியும் மற்றவரைத் தாழ்த்தியும் விளையாடிப் பாத்திச்சினம். தொண்டாவைத் துரோகி எண்டு சொல்லாக்குறையாக் கெண்டம் பண்ணிச்சினம். இப்ப விஷயம் தலைக்கு மேல போவிட்டுதெண்டவுடன பிளேட்டை மாத்திக் கதைக்கினம். நாங்கள் அவரையும் அரவணைச்சுத்தான் போயிருக்க வேணும் எண்டு செல்வத்தார் இப்பதான் சப்புக் கொட்டுறார். வட் டு டு? இற் இஸ் ரு லேற்!

**குருநகர்ப்** பிரச்சினையில மாத்தியெழுத வெளிக்கிட்ட யாழ்ப்பாணப் பத்திரிகையொண்டு நல்லா மூக்குடைபட்டுப் போச்சுதாம். யாழ்ப்பாணத்தில நடந்த விஷயம் எல்லாருக்கும் என்னவெண்டு தெரிஞ்ச விஷயம். இதயே போய்த் தலைகீழா எழுதிவைச்சால், இவை எழுதிற எதைத்தான் நம்பப் போகுது சனம்? இந்தச் சாதாரண பத்திரிகை உணர்வு கூட இல்லாமல் பச்சை பச்சையாப் பக்கச்சார்பு காட்டப் போய், அம்பலமானதுதான் மிச்சம். ஆத்திரப்பட்ட குருநகர்ச் சனம் பத்திரிகை ஆபீஸ்க்குள்ள பூந்து கேட்ட கேள்வியில நாக்கப் பிடுங்கிக்கொள்ள வேணும் போல இருந்துச்சுதாம். "நாங்கள் சூதாடினால் தெரியுது. வாதாடினால் தெரியுது. இப்பிடியொரு சூடு விழுந்து, படகு எரிஞ்சு, ஆக்கள் கடத்தப்பட்ட சம்பவம் உங்கட கண்ணில படேல்லையோ" எண்டு கொலரைப் பிடிக்காத குறையாக் கேட்டிருக்கினம். பாவம் றிப்போட்டர்மார். தாங்கள் செய்திய எழுதிக் குடுத்தாலும் மனேஜ்மென்ட் மாட்டனெண்டுது எண்டு ரகசியமாக் குசுகுசுக்கினம். சனத்துக்குள்ள திரியுற அவைக்குத்தானே சனத்தை முகங்குடுக்க வேண்டிய நிலமை. பத்திரிகை தர்மம் வாழ்க!

# மலையகம் விழித்தெழும் காலம் வந்துவிட்டது!

மலையகத்தில் பரபரப்பாக வந்த பொதுத் தேர்தலையடுத்து அமைதியாக நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தலுக்குப் பின் வாக்கைப் பெற்றவர்கள் கிணற்றில் போட்ட கல்லைப் போல அமைதியாக இருக்க, வாக்களித்தவர்கள் அவர்களின் போக்கைக் கண்டு எல்லை மீறிய கோபத்துடன் இருக்கிறார்கள்.

மாகாண சபைத் தேர்தலின்போது வேட்பாளர்கள் பலர் பாதையோரங்களில் கற்களை கொண்டுவந்து குவித்தார்கள். மின்சார வசதி செய்து கொடுப்பதாகக் கூறி மின்சாரக் கம்பங்களையும் சேர்த்து பாதையோரங்களில் போட்டு தோட்டத் தொழிலாளர்களின் உள்ளத்தில் உவகையைத் தோற்றுவித்தார்கள். காடுமோடான பாதைகள் சரிசெய்யப்படும், மின்சார இணைப்பு கிடைக்கும் என்றெல்லாம் சந்தோசப்பட்டார்கள் மக்கள். மேலும் மலையக மாகாண சபைப் பிரதிநிதித்துவமும் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் வாக்குகளை அள்ளிக் கொடுத்து, போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்களையும் வெற்றிபெறச் செய்தார்கள். உதட்டில் வெள்ளைச் சிரிப்பும் உள்ளத்தில் கள்ளப் புன்னகையும் வைத்து வாக்கு கேட்டவர்களுக்கும் தோட்டத் தொழிலாளர்கள் தவறாமல் வாக்களித்தார்கள். ஆனால் நடந்தது என்ன? மக்கள் விடுதலை முன்னணியில் போட்டியிட்டு வெற்றியீட்டியவர்கள் எந்தவித ஆடம்பரமும் இல்லாமல் நடந்து சென்று மக்களுக்கு நன்றி கூற, மலையகத்தின் தலைவர்களென்று சொல்லிக் கொள்ளும் சிலர் திறந்த வாகனங்களில் பயணம் செய்து கை காட்டிவிட்டுச் சென்றுவிட்டார்கள்.

பாதையோரங்களில் குவித்து வைக்கப்பட்டிருந்த கற்களில் புல் வளர்ந்துவிட்டது. மின்சாரக் கம்பங்கள் அப்புறப்படுத்தப்பட்டுவிட்டன. பாதை ஏன் போடவில்லை; மின்சார இணைப்புக்கு என்னவானது எனக் கேட்க, வாக்களித்தவர்கள் வெற்றிப் பெற்றவர்களைத் தேடினால், அவர்கள் ஆட்சியாளர்களுக்கு முட்டுக் கொடுத்து நாற்காலிகளில் அமர்வதற்காக ஓடித் திரிகிறார்கள். வாக்களித்தவர்களைக்கூடக் கேட்காமல் ஆட்சியாளர்களுக்கு ஆதரவு கொடுக்க நினைக்கும் இவர்களிடம் அதைப் பற்றிக் கேட்டால் மக்களுக்காக - மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்காக - அவர்களை ஆதரிக்கிறோம். அதற்கு யாரையும் அபிப்பிராயம் கேட்கத் தேவையில்லையென்கிறார்கள்.

இப்போது மலையகப் படித்த இளைஞர்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. பத்தனை ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியில் ஏற்பட்ட பிரச்சினைகளினால் கொதித்தெழுந்த இளைஞர்கள் தங்களின் எதிர்ப்பினைக் காட்ட ஊர்வலம் சென்றார்கள். அங்கே அவர்கள் தாக்கப்பட்டபோது பதவியிலிருந்தவர்கள் எதுவுமே செய்யவில்லை. தேர்தலின்போது தேர்தலை புறக்கணித்து தங்களின் எதிர்ப்பைக் காட்டினார்கள். தொடர்ந்து சேவைகள் எவற்றையும் செய்யாமல் தங்களின் தேவைகளுக்காக மட்டுமே பதவியில் ஒட்டிக்கொண்டிருப்பவர்களை விரட்டியடிக்க அவர்கள் தீர்மானித்துவிட்டார்கள். மலையகம் விழித்தெழும் நேரம் ஆரம்பித்துவிட்டதனால் இவர்களின் அழிவும் நிச்சயமாகிவிட்டது.

-பாலாசங்குப்பிள்ளை, ஹற்றன்.

---

ஆகஸ்ட் 30ஆம் திகதி குருநகர் மீனவர்கள் தொழிலில் ஈடுபட்டிருந்தபோது, அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இவ்விவகாரம் குறித்து குருநகர் மக்களால் நடத்தப்பட்ட உரிமைப் போராட்டம் குறித்த செய்திகளை இலங்கை ஊடகங்கள் இருட்டடிப்புச் செய்ததால் தினமுரசுக்கு எமது இரு துண்டுப்பிரசுரங்களை அனுப்பிவைக்கிறோம். தினமுரசாவது எமது உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் என நம்புகிறோம்.

இவ்வாறு முரசுக்கு எழுதப்பட்ட கடிதமும், துண்டுப்பிரசுரங்களும் கிடைத்துள்ளன. நியாயமான பிரச்சினைகளுக்கு முரசு என்றும் துணை இருக்கும் என்பதால் குருநகர் மீனவர் சமூகத்தின் இவ் வேண்டுகோளையும் முரசு ஏற்றுக்கொள்கிறது. மேற்படி துண்டுப்பிரசுரத்தில் எவ்வித மாற்றங்களும் மேற்கொள்ளப்படாமல் அவை இங்கு பிரசுரிக்கப்படுகிறது என்பது குறிப்பிடத் தக்கது.

## நாள்தோறும் செத்துப் பிழைக்கும் கடல் வாழ்வில் மீனவரைப் புலிகளும் பலி எடுக்கத் தயாராகிவிட்டார்களா?

பேரினவாதிகளின் யுத்த நடவடிக்கையில் கடல் வலயத் தடைச் சட்டத்தால் பாதிப்புற்றும், தொழிலை இழந்தும் இடர்ப்பட்ட எமது வாழ்க்கையின் துயரம் கொஞ்ச நஞ்சமா? 1995 இடப் பெயர்வில் தொழிலை மறந்தது மாத்திரமல்ல, எமது பாரம்பரிய மீன்பிடித் தொழிலையே கைவிட நேர்ந்து, எமது கலாசார பண்பாட்டு விழுமியங் களையும் இழந்து மீனவர் சமூகத்தின் வாழ்க்கை சிதறடிக்கப்பட்டது.

நாள்தோறும் உயிரைப் பணயம் வைத்துத் தொழில் நடத்தும் எமது வாழ்க்கை என்றும் வறுமையிலும் கண்ணீரிலும் கலங்கிக் கிடக்கும் நிலை ஏன்?

நாட்டின் பொருளாதார நிலையா? பொருட்களின் விலை யேற்றமா? இல்லை. நாள்தோறும் எமது கடுமையான உழைப்பில் நாம் பெறும் அற்ப சொற்ப வருமானத்திலும் வரி எனச் சுரண்டும் தமிழ் ஈழ விடுதலைப் போர்.

தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பம் முதல் மீனவர்களின் தியாகமும் அர்ப் பணிப்பும் எண்ணிக்கையில் அடக்க முடியாதது. ஆனால் இன்று எமது நாளாந்தச் சீவியமே வரி என்ற போராட்டத்தில் அடங்கிக் கிடக்கிறது.

ஆயுதப் போர் அல்ல, பேச்சுவார்த்தையே தமிழினத்தின் விடுதலைக்கான தீர்வுகாணும் வழி என்று இன்று சமாதானப் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டுள்ள நிலை யிலும், மீனவர்களின் வாழ்க்கை வரி என்ற விலங்கில் சிறைப்பட்டுக் கிடக்கிறது. இந்தச் சீரழிவுக்கு எதிராக எம்மால் கையைத் தானும் உயர்த்த முடிந்ததா?

இதற்கும் மேலாக இன்று அடக்குமுறையின் உச்சமான துப்பாக்கிக் குண்டுகளையே எம் மேல் பிரயோகிக்கும் நிலையை நாம் அனுமதிக்கலாமா? இன்று எமது மீனவனின் உயிர் போகவில்லை என்பதிலே நாம் திருப்தியடைந்துவிட முடியுமா?

பத்திரிகைகளோ வேறு எந்த ஊடகமோ விடுதலை என்ற பெயரில் நடக்கும் அராஜகத்திற்குக் கைகட்டிச் சேவகம் செய்பவர்களே. மக்களுக்காக எந்த ஊடகமும் செயற்படவில்லை. அவர்கள் எமது பிரச்சினையை வெளிப்படுத்துவார்கள் என நாம் பார்த்திருக்க முடியாது.

எமது பலம் நாங்கள் மட்டுமே.

விடுதலைப் போரில் மீனவர் சமூகம் அழிந்துபட இடம்தராதீர்கள்.

மீனவர் சமூகம் தலைநிமிர்ந்து வாழ ஒன்றுபடுவோம்! போராடுவோம்!

**குருநகர் மீனவர்களின் இதயக்குமுறல்**

## குருநகர் வாழ் மக்களே! விடுதலையின் பெயரிலான அடக்குமுறைகளை எதிர்ப்போம்!!

எங்கள் உழைப்பையே உறிஞ்சி எடுத்துக்கொண்டு எம்மை அவர்கள் அழிக்க முற்படுவதை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

எமது இறால், நண்டு, மீன்களை அற விலைக்குப் பறித்து விடுதலையின் பெயரால் கொள்ளை இலாபம் அடிக்கும் நீங்கள் எல்லா வகையிலும் எம்மை இம்சித்து இறுதியில் எமது உயிரையே பறிக்கத் துப்பாக்கிச் சூட்டினை நடத்தியுள்ளீர்கள். அந்நியப் படையினரே அட்டூழியங்கள் செய்கிறார்கள் எனக் கூறிக்கொண்டு எம் தொழிலாளர்களைத் தாக்கியதுடன் மீன்பிடி றோலர் படகு மற்றும் தொழில் உபகரணங் களையும் தீயிட்டுள்ளீர்கள்.

இந்த அநியாயங்களைத் தட்டிக் கேட்க வேண்டிய எம் மதத் தலைவரான ஆயர் போன்றவர்களும், எமது கடற்றொழிலாளர் சங்கத் தலைவர்களும், எம்மைக் கள்ள வாக்குப் போடவைத்த நபர்களும், அந்தக் கள்ள வாக்கு மூலம் வென்று பாராளுமன்றம் சென்றுள்ள பிரதிநிதிகளும் மௌனமாக இருப்பதுடன், இக் கொடுமையைப் புரிந்தவர்களுக்காக வக்காலத்து வாங்குவது மனிதாபிமானத்திற்கும் இறை நீதிக்கும் அப்பாற்பட்ட காட்டுமிராண்டித் தனமான கொடுமையிலும் கொடுமையாகும்.

இவ்வாறான நடவடிக்கைகள் கடந்த இருபது வருடங்களாக விடுதலையின் பெயரால் தொடர்ந்த வண்ணமே உள்ளன. இவ்வாறான நடவடிக்கைகளுக்கு எதிராக ஒன்றுபட்டுச் சிந்தித்து முடிவுகாண வேண்டிய காலம் வந்துவிட்டது.

கடத்தப்பட்ட எமது ஆட்களையும் படகுகளையும் உடனடியாக ஒப்படைக்க வேண்டும்.

தேசியத்தின் பெயரிலான அடாவடித்தனத்தை எதிர்ப்போம்.


எமது உழைப்பைச் சுரண்டும் அடாவடித்தனத்தை விரட்டியடிப்போம்.

சமாதானத்தின் பெயராலான மனித உரிமை மீறல்களை வன்மையாகக் கண்டிப்போம்.

வாய் கிழியக் கத்தும் வெகுஜன அமைப்புக்களே! இவைகளுக்கு வாய்மூடி மௌனமாயிருப்பதேன்?

எமது பிரச்சினைக்களை வெளிப்படுத்தாது உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிடும் பத்திரிகைகளை (உதயனை) நிராகரிப்போம்.

**விழிப்புற்ற குருநகர் கடற்றொழிலாளர்கள்**

### என்னிடம் கைரேகை பார்க்க வருபவர்கள் என்ன கூறுகிறார்கள்

அமைதியாகவும் ஆறுதலாகவும் பேசிக் கைரேகை பார்க்க வருபவர்களின் பிரச்சினைகளை உள்வாங்கிக் கொண்டு, நாங்கள் எதை கைரேகையின் மூலம் எதிர்பார்க்கின்றோமோ அந்த எதிர்பார்ப்பினைப் பூர்த்தி செய்து, எமக்கு இருக்கும், வரப்போகும் பிரச்சினைகளையும் எமக்கு எதிர்காலத்தில் அமையவிருக்கும் வாழ்க்கையினையும் கூறுவதோடு, அதற்கான வழிமுறைகளை கூறுவது மனதிற்கு ஆறுதலாகவும், திருப்தியாகவும் இருப்பதோடு, வாழ்க்கை பற்றிய தன்னம்பிக்கையும் பிறக்கின்றது.

நான் கூறும் இராசி பலனை ரூபவாஹினி 'ஐ' அலை வரிசையில் ஞாயிறு காலை 8.30 மணிக்கும் மித்திரன் பத்திரிகையிலும் கேட்டு படித்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

மன வள ஜோதிட ஆலோசகர்
K. கங்காதரன் (M.A) J.P
28, மேபில் ரோட், கொழும்பு-13
தொ.பே.இல: 0777 388860, 2342463

### மட்டக்களப்பு மாந்திரீகம்

உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கு, மட்டக்களப்பு மாந்திரீக வசியம் செய்து கொள்வதற்கு பரம்பரை வைத்திய மனோதத்துவ நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள். இரகசியம் வெளியாகாது.

DR. A.P.S. KUTTY
50, THEATRE ROAD,
NINTHAVUR-21,
SRI LANKA.
067-2250349



### சிங்கப்பூரில் திருமண சேவை

சிங்கப்பூரில் திருமணம் செய்ய வருவோருக்கும் விடுமுறையைக் கழிக்க வருவோருக்கும் சகல வசதிகளும் கொண்ட வீடும் மற்றும் திருமணத்துக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் குறைந்த செலவில் திருப்திகரமாகச் செய்து தருவோம். மேலும் எங்கள் இடம் 'குட்டி இந்தியா' என்று அழைக்கப்படும் இடத்தில் இருப்பதால், வேண்டிய பொருட்களை நடந்து சென்றே வாங்கலாம். மேலும் வீரமறிய எந்த நேரத்திலும் தொடர்புகொள்ள வசதியாக

கை தொலைபேசி எண். : 0065 97514941,
தொலை நகல். : 0065 64816144.

படத்தில் காணும் அப்புவிடம் தொடர்பு கொள்ளவும்.

சிங்கப்பூருக்குள் வர அனுமதி கிடைக்காமல் திரும்பிப் போவதைத் தடுப்பதற்கு 2 கிழமைக்கு முன்பே எங்களுடன் தொடர்புகொள்ளவும்.

Lingam Wedding Services,
10.Anson Road #15 -14 International Plaza, Singapore 079903.

### தெய்வீக மருத்துவம்

சர்வதேச சமூக மாந்திரீக மருத்துவ தெய்வீக சேவை
Goverment Approved Charity Regd No - HA/4/BT/219

டாக்டர் பாலுசோதிடர் S.A.M.P.J.P.(SL)

கிரக தோஷம் காலப்பகையால் பிரிந்த காதலர்கள், கணவன் – மனைவி ஒன்று சேர, வெறுத்த உறவினர்கள், வேண்டியவர்கள் அன்பாக இருக்க, காதல் திருமணம் எல்லோருடைய சம்மதத்துடன் நிறைவேற மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனநோய், தாழ்வு மனப்பான்மை, கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித் தடை, குடும்ப வாழ்க்கையில் சந்தோஷமின்மை, வெளியில் சொல்ல வெட்கமான பிரச்சினைகள், தீய பழக்கம், மனிதத் தீமை, மருந்தீடு போன்ற தீமைகளில் இருந்து விடுபட்டு சந்தோஷமாக வாழ, பிரச்சினைகளுக்குரிய காரணத்தை காண்டம் இறைச்சக்தியால் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ புனித புராதன தீங்கற்ற மஹா மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தி அளிக்கப்படுகிறது.

நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சினையை எழுதினால் அல்லது தொலைபேசி, ஃபக்ஸ் மூலம் தொடர்பு கொண்டு உடன் பயன் தரும் தெய்வீக மருத்துவப் பொருட்களை விசேட தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக்கொள்கிறார்கள். (இரகசியம் பாதுகாக்கப்படும்.)

Theiveegam Srilanka
Head Office
Batticaloa
Tele/Fax 065-2224825,00940777032844

தெய்வீக ஸ்ரீலங்கா
தலைமையகம்
மட்டக்களப்பு


Balu Sothidar @ hotmail.com.

"வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்"
"DISPEL DARKNESS LIFE AND LET LIGHT SHINE"

### மலையாள மாந்திரீகம்







கை கண்ட பலன் பெற வாருங்கள்

எம்மால் வெற்றி பெறுவது என்பதாலேயே வாங்கும் பணத்திற்கு திட்டவட்டமாக ரசீது வழங்குகிறோம்

தினந்தோறும் எம்மிடம் வந்து குவியும் மடல்கள்

வசீலா, கெகிராவ.

டாக்டர் ஐயா அவர்களுக்கு!

என் கணவர் சலீம் (05.04.1954) பாடசாலை ஒன்றில் ஆசிரியராக இருந்தபோது அந்தப் பாடசாலையில் படித்த ஜரீனா என்ற பெண்ணோடு தொடர்புகொண்டு இருந்தார். 2002ஆம் ஆண்டு ஐயா அவர்களிடம் வந்து பரிகாரம் செய்து எனது கணவனை வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்தேன். இப்பொழுது அவர் மீண்டும் இங்கு வருகிறார். அவர் வந்தவுடன் பழைய தொடர்பு தொடராதிருக்க ஐயா அவர்கள் காவல் செய்ய வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். மேலும் ஐயாவிடம் செய்த பரிகாரத்தால் எனது மகன் திருமணம் செய்து வெனிநாட்டில் உள்ளார். ஐயாவின் ஆசீர்வாதத்தால் எனது மகனின் வாழ்கை சுபீட்சமாகி விட்டது.

என்றும் எமக்கு உங்கள் ஆசீர்வாதங்கள் வேண்டும்

புஸ்ரீனா, கொழும்பு -12

அன்புள்ள **P.K. SAMY** ஐயா அவர்களுக்கு நாங்கள் துன்பத்தில் இருந்த பொழுது உங்களைத் தேடி வந்தோம். குடும்பத்தில் இருந்த பிரச்சினைகளால் நான் படிப்பில் அவ்வளவாகக் கவனம் செலுத்தவில்லை. அப்பொழுது அன்பான ஐயா அவர்களே! உங்கள் உதவியால் மாந்திரீக சக்தியுடனும், கடவுளின் உதவியுடனும் எனது **EXAM** நல்லபடியாக நடந்து **BEST RESULTS** எடுத்தேன்.

நீங்கள் என்னை **BLESSING** செய்தீர்கள். உங்கள் அன்பாலும் கடவுளின் உதவியாலும் **EXAM** செய்யும்போது எனக்கு ஒரு புதிய தெம்பும் தன்னம்பிக்கையும் வந்தது. என் தாய் எனக்காகப் படுகின்ற எல்லாக் கஷ்டத்திற்கும் நான் இன்று என் கல்வியில் முதலாம் இடத்தில் இருக்கிறேன். ஐயா உங்களின் அன்பும் ஆசீர்வாதமும் எனக்கும் என் குடும்பத்திற்கும் எப்போதும் இருக்கட்டும்.

Prof. Dr. P. K. Samy (J.D.G.A.N) J.P.
No: 162, Kotahena Street, Mayfield Road, Colombo-13

Sri-Lanka CLI-No- 0094(11)2342463, 42470615, 3431137, 2344832-2449110, Hotline-CLI No:- 0094-(11)-4613133, 4613124,4613127,
Fax-0094112344831
Email-drpksamy@sltnet.lk

நுவரெலியாவில் : Tel Cli No : 052-2222508, 2235097, 223093

வெளிநாட்டவர்களுக்கு எம்மிடம் பிரத்தியேக விசேட சேவைப் பிரிவுண்டு. (இங்கு தீய வேலைகளுக்கு இடமில்லை. இரகசியங்கள் பாதுகாக்கப்படும்)

**'த சண்டே லீடர்' என்ற ஆங்கில வாரப் பத்திரிகையில் கடந்த ஐந்தாம் திகதி சுரனிமல என்பவர் எழுதிய கட்டுரையிலிருந்து சில பகுதிகள் இங்கே தரப்படுகின்றன.**

## இன்னொருவர் பார்வையில்

# யுத்த நிறுத்த ஒப்பந்தம் மீதான புலிகளின் எதிர்த் தாக்குதல்

சமாதான வழிமுறைகள் நம்பிக்கை எதுவுமின்றித் தடைப்பட்டு நிற்கின்றன. அத்துடன் பதில் பாதுகாப்பமைச்சர் ரத்னசிறி விக்ரமநாயகா விடுத்திருந்த தந்திரமான அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் யுத்த நிறுத்த மீறல்கள் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன. இந்த நிலையில் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறுவதாகவும், கொலைகளைப் புரிவதாகவும் திடுக்கிடும் குற்றச்சாட்டுகளுடன் புலிகள் கடந்த வாரம் அரசாங்கத்தின் மீது சண்டையைத் தொடுத்துள்ளனர்.

கொழும்பிலும் கிழக்கிலும் இடம்பெற்றுவரும் கொலைகளுக்காகப் புலிகள் இராஜதந்திரிகளின் குற்றச்சாட்டுகளுக்கு இலக்காகியுள்ளனர். இந்த நிலையில் புலிகள்தான் கொலைகளைப் புரிகிறார்களென்று குற்றஞ்சாட்டுபவர்கள் மீதே குற்றங்களைச் சுமத்தி உண்மையான குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்துமாறு கோருவதற்குப் புலிகள் தீர்மானித்துள்ளார்கள் போல் தோன்றுகிறது. இப்படிச் செய்வதன் மூலம் பழியை மற்றவர்கள் மேல் போட அவர்கள் தீர்மானித்துள்ளனர்.

பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகர் ஸ்டீபன் எவான்ஸ், நெதர்லாந்துத் தூதுவர் சுஜான் பிளாங்கார்ட், ஐரோப்பிய யூனியனின் பொறுப்பதிகாரி வூற்றர் வில்சன் ஆகியோர் புலிகளை ஆகஸ்ட் மாத மத்தியில் சந்தித்தபோது, சகல கொலைகளையும் நிறுத்துமாறும், பிள்ளைகளைப் படையணிகளுக்குச் சேர்த்துக்கொள்வதை நிற்பாட்டுமாறும் கோரிக்கை விடுத்திருந்தனர். இதற்குப் பின்னர் புலிகள் மீது கடுமையான கண்டனம் தெரிவித்து, ஐரோப்பிய யூனியன் அறிக்கையொன்றினை விடுத்திருந்தது. இதன் பின்னர் அரசாங்கத்துக்கெதிரான யுத்தத்தை சர்வதேச சமூகத்தின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தீர்மானித்துள்ளார்.

சர்வதேச ரீதியாக மதிக்கப்படுகின்ற சமாதானச் செயலகப் பணிப்பாளர் நாயகம் ஜயந்த தனபால, புலிகள் மேற்கொள்ளும் தொடர்ச்சியான யுத்த நிறுத்த மீறல்களைத் திரைமறைவில் வெளிப்படுத்தும் வேலைகளை மேற்கொண்டார். அதேவேளை, அரசாங்கம் தனது சொந்த இராஜதந்திரச் செயற்பாடுகளைப் புலிகளுக்கு எதிராக ஆரம்பித்தது. இந்நிலையில் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கும், புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்கான 4.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை வடக்குக்கு மட்டுமல்ல, தெற்குக்கும் வழங்குவதற்கும் இடைஞ்சலாக இருக்கும் தரப்பெனப் புலிகளைக் காட்டுவதற்கும் அரசாங்கம் முனைந்துள்ளது.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் வெளிப்படையாகவே செயற்பாடுகளை மேற்கொள்கின்றார். இதற்கு மாறாக ஜயந்த தனபால மென்மையான, ஆனால் காத்திரமான இராஜதந்திர நடவடிக்கைகளில் ஈடுபட்டார். இதனால்தான் சர்வதேச சமூகம் முரண்பாடான அறிக்கைகள் பலவற்றை விட வழிவகுத்ததென்பது புலிகளின் அபிப்பிராயமாகும். இதனால்தான் இறுதியில் பிரபாகரன் அரசாங்கம் மேற்கொண்டுவரும் பிரசாரங்களை, அரசின் தலையிலேயே சுமத்திவிடுவதற்கும், ஜனாதிபதி சந்திரிகாவுக்கு பக்கச்சார்பாக சர்வதேச சமூகம் நடந்து கொள்கிறதெனக் குற்றஞ்சாட்டுவதற்கும் தீர்மானித்தார்.

புலிகளே குற்றவாளிகளெனக் காட்டும் பாரிய நோக்கோடு கொழும்பிலும் கிழக்கிலும் இடம்பெற்றுவரும் கொலைகளுக்குப் பின்னணியில் அரசாங்கமே உள்ளதென்பதுதான் புலிகளின் நிலைப்பாடாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்கள் சர்வதேச சமூகத்துக்குச் சொல்ல வேண்டியதெனப் புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவர் எஸ்.பி. தமிழ்ச்செல்வன் ஆகஸ்ட் முப்பதாம் திகதி திங்கட்கிழமை கூறிய தெளிவான செய்தி உண்மையில் இதுதான். நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்முக்கு புலிகளின் பிரதான பேச்சாளர் அன்டன் பாலசிங்கம் லண்டனில் செப்டெம்பர் 3ஆம் திகதி கூறிய செய்தி இதைவிட வித்தியாசமானதல்ல.

இடைக்கால சுயாட்சி அதிகார சபை யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கத் தயாரெனக் கூறுவதன் மூலம் அரசாங்கத்தின் வெற்றுப் பேச்சுக்கு பதிலளிப்பதாகப் புலிகள் நம்பிக்கொண்டிருக்கின்றனர். அரசாங்கத்துக்குள் இருக்கின்ற உள் முரண்பாடுகளின் காரணமாகப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு இடைஞ்சலாக ஜனாதிபதியே இருக்கின்றாரென்று காட்டுவதற்கும் புலிகள் முயற்சிக்கின்றனர்.

இடம்பெற்றுவரும் கொல்லைகள் குறித்தும், இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனைகள் குறித்தும் மேற்கொள்ளப்பட்டு வரும் இயக்கத்துக்கு எதிராகப் பிரசாரங்களை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் மேற்கொள்ளுமாறு பிரபாகரன் கேட்டுக்கொள்கிறாரென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்களை தமிழ்ச்செல்வன் சந்தித்தபோது முக்கியமாக எடுத்துக் கூறப்பட்டது.

"படுகொலைகளுக்கு எந்தவகையிலும் பொறுப்பேற்க நாம் தயாரில்லை. இவற்றில் நாம் எவ்விதத்திலேனும் சம்பந்தப்படவில்லை. இக் கொலைகள் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நடைபெறுவதாலும் இங்கு சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு அரசாங்கமே பொறுப்பென்தாலும் குற்றவாளிகளைக் கண்டுபிடித்துச் சட்டத்தின்முன் நிறுத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். இப்படிச் செய்வதன் மூலம் மட்டுமே இக் கொலைகளில் நாம் சம்பந்தப்படவில்லையென்று எடுத்துக் காட்ட முடியும். இக் கொலைகளுக்கும் யுத்த நிறுத்த மீறல்களுக்கும் நாம் பொறுப்பாளிகள் அல்லர்" என்று தமிழ்ச்செல்வன் கூறியிருந்தார். "இக் கொலைகளுக்குப் பின்னால் அரசாங்கமே இருக்கிறதென்று நாம் நம்ப வேண்டியவர்களாக உள்ளோம். எம் மீது சர்வதேச அழுத்தம் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதற்காகவே புலிகள் மீது கொலைக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. உள் முரண்பாடுகள் காரணமாக சமாதான வழிமுறைகளை முன்னெடுக்க முடியாத தமது கஷ்டங்களை மறைப்பதற்காகவே, அரசாங்கம் இவ்வாறு குற்றஞ் சுமத்துகிறது. எனவே, தமது சொந்தப் பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதற்கான தந்திரமாகவே கொலைகள் மற்றும் யுத்தநிறுத்த மீறல்கள் பற்றிய குற்றச்சாட்டுகள் எம்மீது சுமத்தப்படுகின்றன" என்றும் தமிழ்ச்செல்வன் கூறியிருந்தார். பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்குமாறு சர்வதேச சமூகம் எம்மீது அழுத்தம் செலுத்துவதை விடுத்து அரசாங்கத்துக்கே அழுத்தம் கொடுக்க வேண்டுமென்றும் தமிழ்ச்செல்வன் கூறியிருந்தார். இதனையடுத்து புலிகளின் செய்தியை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் முன்னெடுத்துச் செல்வதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்களை உள்ளடக்கிய நான்கு கமிட்டிகள் உருவாக்கப்பட்டன.

இதனையடுத்து 24 மணித்தியாலங்கள் கழித்து எரிக் சொல்ஹெய்மையும் நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரையும் லண்டனில் சந்தித்த அன்டன் பாலசிங்கம் தமிழ்ச்செல்வன் கூறிய அதே கருத்துக்களையே கூறியதோடு, இராணுவப் புலனாய்வாளர்களே கொலைகளைச் செய்கிறார்களென்றும் குற்றஞ்சாட்டினார். புலிகள் மீது குற்றஞ்சாட்டப்படும் வன்செயல் நடவடிக்கைகளுக்கு முடிவுகட்ட அரசாங்கம் காத்திரமான செயற்பாடுகளை மேற்கொள்ளத் தவறினால் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பது குறித்துப் பேசுவது பற்றிக் கூடச் சிந்தித்துப் பார்ப்பது கஷ்டமானது என்றும் பாலசிங்கம் தெரிவித்தார். தம்மைப் பொறுத்தவரை சந்திரிகா குமாரதுங்க மீது நம்பிக்கை வைப்பதென்பது மிகப் பாரதூரமான விடயமென்றும் குறிப்பாக ஐ.தே.க. ஆதரவளிக்கும் பின்னணியில் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு பேச்சினை ஆரம்பிக்க அரசாங்கம் தயாரெனக் கூறும் திட்டவட்டமான அறிக்கையை ஜனாதிபதி வெளியிட வேண்டுமென்றும் பாலசிங்கம் கூறினார்.

இச் சந்திப்பு இடம்பெற்று 24 மணித்தியாலங்களுக்குப் பின்னர் எம்.பி.க்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலமும், ஜோசப் பரராஜசிங்கமும் பிரெஞ்சுத் தூதரக அதிகாரிகளைச் சந்தித்துப் பேசியபோது புலிகளின் நிலைப்பாட்டை வலியுறுத்தினர். இச் சந்திப்பின்போது பிரெஞ்சுத் தூதரக அதிகாரிகள் படுகொலைனள், படையணிகளுக்குச் சிறுவர்களைச் சேர்த்துக்கொள்ளுதல் மற்றும் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதில் இருக்கும் தாமதம் ஆகியவற்றுக்குப் புலிகளே காரணமெனத் தெளிவாகக் கூறினர். இன்றைய நிலைமைக்குப் புலிகளே முக்கிய காரணமென்று அவர்கள் எடுத்துரைத்தனர். ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகள், தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசிய பின்னர் தெரிவித்த அதே கருத்துக்களையே பிரெஞ்சுத் தூதரக அதிகாரிகளும் தெரிவித்தனர்.

சிறுவர்களைப் புலிகள் தமது படையணிகளில் சேர்த்துக்கொள்கிறார்களென்ற குற்றச்சாட்டுப் பற்றியும் பிரெஞ்சுத் தூதரக அதிகாரிகளுக்கு கஜேந்திரகுமார் பொன்னம்பலமும், ஜோசப் பரராஜசிங்கமும் விளக்கினர். அதுவொரு பாரிய சமூகப் பிரச்சினை. மிக மோசமான வறுமை காரணமாக வாழ வழியின்றியே சிறுவர்கள் புலி இயக்கத்தில் சேர்கின்றனர் என்று எம்.பி.க்கள் கூறினர். ஐரோப்பிய யூனியனின் அறிக்கையை முற்றுமுழுதாக நிராகரிப்பதாகக் கூறிய எம்.பி.க்கள், அது ஒருபக்கச் சார்பானதென்றும் அரசாங்கத்தின் யுத்தநிறுத்த மீறல்கள் பற்றி எதுவும் கூறப்படவில்லையென்றும் அவர்கள் குற்றஞ்சாட்டினர். எனவே, ஐரோப்பிய யூனியனின் உண்மையான நோக்கங்கள் குறித்துச் சந்தேகங்கள் இருப்பதாகவும் அரசாங்கம் மேற்கொள்ளும் கொலைகள் பற்றியோ அல்லது சமாதான முன்னெடுப்புகள் குறித்து அரசாங்கம் நிலைப்பாடுகளை மாற்றுவது பற்றியோ ஒரு வார்த்தையேனும் அறிக்கையில் தெரிவிக்கப்படவில்லையென்றும் அவர்கள் கூறினர்.

ஜனாதிபதி ஏற்றுக்கொண்டால், இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை பற்றிப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கத் தயாரென்று கூறும் அதேவேளை, எந்தவொரு கொலையிலும் நாம் சம்பந்தப்படவில்லையென முழுமையாக மறுப்பதுமே புலிகளின் நிலைப்பாடாகும். இக் கொலைகளுக்கு அரசாங்கமே பொறுப்பென்றும், இல்லையென்றால் தம்மீதான குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும்படியும் புலிகள் சவால் விடுக்கின்றனர். புலிகளின் இந்தச் செய்தியுடன்தான் நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் 13ஆம் திகதி கொழும்பு வருகின்றார்.


**எந்தவொரு கொலையிலும் நாம் சம்பந்தப்படவில்லையென முழுமை யாக மறுப்பதுமே புலிகளின் நிலைப்பாடாகும். இக் கொலைகளுக்கு அரசாங்கமே பொறுப்பென்றும், இல்லையென்றால் தம்மீதான குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும்படியும் புலிகள் சவால் விடுக்கின்றனர். புலிகளின் இந்தச் செய்தியுடன்தான் நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் 13ஆம் திகதி கொழும்பு வருகின்றார்.**

**இச் சந்திப்பு இடம்பெற்று 24 மணித்தியாலங்களுக்குப் பின்னர் எம்.பி.க்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலமும், ஜோசப் பரராஜ சிங்கமும் பிரெஞ்சுத் தூதரக அதிகாரிகளைச் சந்தித்துப் பேசியபோது புலிகளின் நிலைப்பாட்டை வலியுறுத்தினர். இச் சந்திப்பின்போது பிரெஞ்சுத் தூதரக அதிகாரிகள் படுகொலைனள், படையணிகளுக்குச் சிறுவர்களைச் சேர்த்துக்கொள்ளுதல் மற்றும் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப் பதில் இருக்கும் தாமதம் ஆகியவற் றுக்குப் புலிகளே காரணமெனத் தெளிவாகக் கூறினர். இன்றைய நிலைமைக்குப் புலிகளே முக்கிய காரணமென்று அவர்கள் எடுத்துரைத்தனர். ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகள், தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசிய பின்னர் தெரிவித்த அதே கருத்துக்களையே பிரெஞ்சுத் தூதரக அதிகாரிகளும் தெரிவித்தனர்.**

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

மொத்தத்தில் என் முன்னேற்றத்திற்கு காலம் ஒரு முட்டுக்கட்டை போடுவது போலவே நான் உணரலானேன். திரும்பவும் ஸ்ரீரங்கம் வந்து நாடகம் போடும் வேலையில் இறங்கினேன். உடம்பைத் தேற்றிக்கொண்டு, சென்னைக்குப் போகலாம் என்று என் தந்தையார் செய்த உபதேசமும்



இதற்கொரு காரணம்.

படவுலக வாய்ப்புக் கிடைத்தும் என் உடல்நலக் குறைவால் அந்த முயற்சியில் ஒரு தொய்வு விழுந்துவிட்டதே என்று எனக்கு நெஞ்சு கொள்ளாத துக்கம்.

"டேய் வாலி! எல்லாம் சரியாபோயிடும். இந்தா, இந்தப் புஸ்தகத்தை எடுத்துண்டு போயி, வீட்ல உக்கார்ந்துண்டு கார்த்தாலயும் சாயந்தரமும் வாயை விட்டுப்படி...." என்று என்னிடம் கையடக்கமான சின்னப் புத்தகம் ஒன்றைக் கொடுத்து என் மனக் கிலேசத்தைப் போக்க முயன்றார் திரு.எம்பார் விஜயராகவாச்சாரியார்.

எம்பார் இப்போது இல்லை. இருப்பினும், அவரது எளிமையும் புலமையும் என்பால் அவர் காட்டிய பாசமும் பரிவும் அவரை ஓர் உயர்ந்த உத்தம ஜீவனாக என் உள்ளத்தில் உட்கார்த்தி வைத்திருக்கிறது. ஆம். எம்பார் இன்னமும் என் உணர்வுகளெங்கும் வியாபித்துத்தான் இருக்கிறது. நித்தமும் நான் பாராயணம் செய்வதற்காக எம்பார் கொடுத்த புத்தகம், தருமபுரம் ஆதீனம் வெளியிட்டதும், அருள்மிகு அபிராமி பட்டர் அருளிச் செய்ததுமான அபிராமி அந்தாதியாகும்.

ஆத்தாளை எங்கள் அபிராம
வல்லியை அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம்பூ
நிறத்தாளை, புவியடங்கக்
காத்தாளை அங்கையில்
பாசாங் குசமும் கருப்பு வில்லும்
சேர்த்தாளை; எங்கள்
முக்கண்ணியைத் தொழுவார்க்கு
ஒரு தீங்கில்லையே!

அன்றாடம் இந்தப் பாடலை நான் உச்சரிக்க என் உள்ளமும் உடலும் உறுதி பெற்றன. தெய்வத் தமிழ் என்பது சக்தி மிக்கது. இறைவன் இந்தத் தமிழிற்கு இசைகிறான். அதனால்தான் 'ஏழிசையாய்; இசைப்பயனாய்' என்றெல்லாம் காடுடைய சுடலைப் பொடி பூசியவனை நாயன்மார்கள் நாவாரப் பாடியிருக்கிறார்கள். பாரதிதாசன் போன்ற பகுத்தறிவாளர்கூட தெய்வத் தமிழைப் புறந்தள்ளியதில்லை. தனது கருத்துக்கு அவை ஒவ்வாதனவாக இருந்தபோதும் கூட, தெய்வ மாகவி கம்பன் பாடிவைத்த ராமகாதையில் மற்றவர் கைவைத்துக் கூட்டவும் கழிக்கவும் செய்ததை பாரதிதாசன் ஒருபோதும் ஏற்றதில்லை. மாறாக அத்தகையோரை, இடைச்செருகல் என்று சில பாடல்களை நீக்கம் செய்த ரசிகமணி டி.கே.சி. போன்றவர்களை, பாரதிதாசன் வெகுண்டெழுந்து ஒரு பிடி பிடித்திருக்கிறார். அது குறித்து பாரதிதாசனார் சீற்றத்தைச் செப்பும் பாடல் இதோ:

கம்பனார் பதினாயி
ரம்பாட்டில்
முக்காலும் கழித்துப் போட்டு
நம்பினால் நம்புங்கள்
இவைதாம் கம்பன்
செய்யுள் என்றச் சிட்டு
வெம்புமா றளிக்கையிலும்
மேவாத
செயல் இதனைச் செய்ய
இந்தக்
கொம்பன் யார்? எனக் கேட்க
ஆள் இல்லையா?
புலவர் கூட்டம் தன்னில்?

இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் சென்ற நூற்றாண்டு வரை தமிழ், தெய்வத்தையே பேசியிருக்கிறது







இலங்கையில் அண்மைக்காலமாக இடம்பெற்று வருகின்ற படுகொலைகளை அவதானித்து வந்திருந்தால் ஒரு உண்மை தெரிந்திருக்கும். அரசியல் எதிரிகளைக் குறிவைத்துப் படுகொலை செய்யும் அதேவேளை, அரச படைகளுக்குத் தமது இயக்கம் குறித்த தகவல்களை வழங்கியவர்கள் எனச் சொல்லப்படுபவர்களும் கொல்லப்படுகிறார்கள். இதில் அரசியல் எதிரியைக் கொன்றுவிட்டு அதை மறைப்பதற்காக உட்கட்சிப் பூசல் காரணமாக அந்தந்தக் கட்சிகளே மாறி மாறிக் கொலைகளில் ஈடுபடுகின்றார்கள் என்று முழுப் பூசணிக்காயை மறைத்தாலும், உளவாளிகளாக இனங்காணப்பட்டு சுடப்படுபவர்களுடைய படுகொலைகளுக்கு என்ன நியாயம் சொல்வது என்று தெரியாமல் எல்.ரீ.ரீ.ஈ இயக்கம் தடுமாறுவது அண்மைக்காலப் பரபரப்புக்குக் காரணம்.

இதேவேளை அரச படைகளும் தமக்குத் தகவல்களை வழங்குவோரைப் பாதுகாப்பதில் தவறிவிடுகின்றன. அதாவது உளவாளிகளாக இருப்பது அரச தரப்புக்கு மிக முக்கியமான தேவையாகும். ஆனால், அரசு உளவுத் தகவல்களைப் பெறுவதில் காட்டும் அக்கறையை, தகவல்களை வழங்குவோரின் பாதுகாப்புக் குறித்து காட்டுவதில்லை என்று பரவலான குற்றச்சாட்டும் நிலவுகிறது. உதாரணமாக உளவுத் தகவல்களை வழங்கியவர்கள் எனக் கூறப்பட்டு கொழும்பில் சுட்டுக் கொல்லப்பட்ட புளொட் மோகன், வெள்ளவத்தையில் சுடப்பட்ட சுப்பையா குகநாதன், பெப்பிலியானவில் சுடப்பட்ட ஏஸ்.என். சுரேந்திரன் என்பவர்களின் மரணங்கள் படைத் தரப்புக்குப் பல புதிய பாடங் களைக் கொடுத்துள்ளன. இதன் பக்க விளைவாக படைத்தரப்புக்குத் தகவல் கொடுப்போர் இருப்பதைப. போல படைத் தரப்பு தொடர்பான தகவல்களை வழங்குபவர்களும் இருக்கத்தானே செய்வார்கள். அவர்களை இனங்காண்பதில் படைத் தரப்புக்குச் சிரமம் உண்டு. ஏனெனின் எல்.ரீ.ரீ.ஈ தகவல்களை வழங்குகிறார்கள் என்று எவரையும் சுட்டுவிடும் அதிகாரம் அரச படைகளுக்கு இல்லை. அவர்களைக் கைதுசெய்தால் பொது மக்களைக் கைதுசெய்கிறார்கள் என்று கோசமெழுப்புவார்கள். தவிரவும், கடை உரிமையாளர்கள், கூலி வேலையாட்கள், தங்கு விடுதி உரிமையாளர்கள், வியாபாரிகள் மூலமாகத் தகவல்களை எடுத்துக்கொள்ளும் எல்.ரீ.ரீ.ஈ மேற்படி நபர்களுக்குத் தெரியாமலே அவர்களைப் பயன்படுத்தியும்கொள்கின்றனர். இவை எல்லாவற்றையும் விட அச்சுறுத்தல், மிரட்டல்கள், உயிர்ப் பயம் காரணமாகவே புலிகளின் பணிப்புரை களுக்கு இணங்க வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாக வேண்டிய சூழல் நிலவுவதாகவும் தெரியவருகிறது. இப்படியாக உளவாளிகள் குறித்த பலதரப்பட்ட வினாக்களைச் சுமந்து கொண்டிருக்கும் இச் சூழலில் உளவு பார்த்தலின் அவசியம், நன்மை, தீமை, எவ்வாறெல்லாம் உளவு பார்த்தல் நடைபெறுகிறது, யார் யார் உளவு பார்த்தலை செம்மையாகச் செய்வர், உளவு பார்த்தலின் ஆரம்பப் புள்ளி எப்படி உருவானது என்பதை முரசு வாசகர்களுக்காகத் தரவுள்ளோம். விறுவிறுப்பு நிறைந்த உளவாளிகள் தொடர் அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். எதிர்பாருங்கள்! அடுத்த வாரம் "உளவாளிகள்" உலா வருவார்.

# குறைந்த வயதுடைய பெண்கள் குழந்தை பெற்றுக்கொள்வது மரணத்துடன் விளையாடும் செயல்

ஒரு குழந்தையை ஈன்றெடுப்பது என்பது மிகவும் சுலபமான காரியமல்ல. அதிலும் குறிப்பாக குறைந்த வயதில் கர்ப்பம் தரிக்கின்ற பெண், ஒரு குழந்தையைப் பிரசவிப்பதானது மரணத்துடன் போராடக்கூடிய அதிபயங்கர விளையாட்டாகும். அபிவிருத்தியடைந்துள்ள நாடுகளில் 15க்கும் 19க்கும் இடைப்பட்ட வயதுகளைக் கொண்ட கர்ப்பிணித் தாய்மார்களது மரண விகிதாசாரம் மிகவும் அதிகரித்துக் காணப்படுவதாக உலக குழந்தைகள் காப்பு அமைப்பு 2004ஆம் ஆண்டு விடுத்துள்ள 15ஆவது வருடாந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

"உலகிலுள்ள மிகவும் குறைந்த வயதுகளைக் கொண்ட கர்ப்பிணிகளின் குழந்தை பெற்றுக்கொள்ளும் கனவானது அநேகமாக துன்பகரமான துரதிர்ஷ்டத்திலேயே முடிவடைகின்றது. சில வேளைகளில் அது பிறக்கின்ற குழந்தையின் மரணத்துடன் முடிவடைகின்றது அல்லது தாயும், குழந்தையும் மரணிக்கும் நிலையில் அது முடிவடைகின்றது" என்கிறார் உலக சுகாதார அமைப்பின் சுகாதார ஆலோசகர் மேரி என்பவர்.

அறிக்கைகளின்படி உலகம் முழுவதிலும் உள்ள குறைந்த வயது கர்ப்பிணிகளின் வருடாந்த இறப்பானது 70,000 ஆகின்றது. உரிய வயதுடைய கர்ப்பிணிகளுடன் ஒப்பிட்டுப்பார்க்கும்போது இவ்விகிதாசாரம் மிகவும் உயர்மட்டத்திலேயே காணப்படுகின்றது. குறைவயதுடைய கர்ப்பிணிகள் பெற்றெடுக்கின்ற குழந்தைகள் இறக்காது உயிர் பிழைத்தாலும்கூட அவை பல்வேறுபட்ட பாதிப்புகளுக்கு உட்பட்டு பலவீனமான சுகாதார நிலையைப் பெற்றுக்கொள் வதாகவும் அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

குறைந்த வயதுடைய தாய்மார்களது இறப்புக்குப் பெரும்பாலும் வறுமைநிலை. உரிய சுகாதார வசதிகளைப் பெறாமை மற்றும் உரிய கல்வி அறிவின்மை என்பனவே காரணமாவதாகக் குழந்தைகள் காப்பு அமைப்பு தெரிவிக் கின்றது.

உரிய வயதுடைய கர்ப்பிணிகளைவிட குறைந்த வயதுடைய கர்ப்பிணிகளின் குழந்தைகள் 50 சதவீதம் இறக்கின்றன எனத் தெரிய வருகின்ற அதேவேளை, உலகம் முழுவதிலுமுள்ள குறைந்த வயதுடைய ஒரு மில்லியன் தாய்மார்களது முதல் குழந்தைகள் பிறப்பின்போதே இறந்துள்ளன என ஆய்வுகள் கூறுகின்றன.

தற்போதைய ஆய்வுகளின்படி உலகில் 10 நாடுகளைச் சேர்ந்த பெண்கள் குறைந்த வயதிலேயே திருமணம் செய்து கொள்கின்றனர் என்றும் அநேகமாக இவர்கள் 15க்கும் 19க்கும் இடைப்பட்ட வயதுகளைக் கொண்டவர்கள் என்றும் தெரிய வந்துள்ளது.

திருமணம் முடித்த மறுகணமே குழந்தையொன்றைப் பெற்றுக்கொள்ளத் தயாராகும் இவர்களது எதிர்பார்ப்பு அநேகமாக மரணத்தையே கொண்டு தருகின்றது. இவ்வாறான குறைந்த வயதுடைய தாய்மார்கள் பெரும்பாலும் ஆபிரிக்கக் கண்டத்துக்கு உட்பட்ட நாடுகளில் காணப்படுகின்றனர். இதில் நைஜீரியா, லைபீரியா மற்றும் மாலி போன்ற நாடுகளைச் சேர்ந்த கர்ப்பிணிப் பெண்களதும் குழந்தைகளதும் மரண விகிதாசாரங்கள் மிக அதிகமாகும். இவற்றைத் தவிர, ஆப்கானிஸ்தான், உகண்டா, மல்லாவி, கினியா, மொஸாம்பிக் மற்றும் மத்திய ஆபிரிக்க நாடுகளில் குழந்தைகளது மரண விகிதாசாரங்கள் உயர்ந்து காணப்படுவதாக அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

பங்களாதேஷ், நேபாளம், யேமன் போன்ற ஆசியக் கண்ட நாடுகளிலும் கர்ப்பிணித் தாய்மார்களதும் குழந்தைகளினதும் மரண விகிதாசாரங்கள் உயர் நிலையைக் கொண்டிருக்கின்ற அதேவேளை, நிக்கரகுவா மற்றும் குவாதமாலா போன்ற நாடுகள் இதில் முன்னணி வகிக்கின்றன.

பெரும்பாலும் இந்த நாடுகளில் காணப்படுகின்ற பயங்கர வறுமை நிலை, கல்வியறிவு குறைவு மற்றும் கர்ப்ப காலத்தில் உரிய மருத்துவ ஆலோசனைகள், சிகிச்சைகள் என்பன பெறப்படாமை போன்றவை காரணமாக மேற்கூறிய மரண விகிதாசாரத்தை குறைக்க இயலாதுள்ளதாக உலக சுகாதார அமைப்பு கூறுகின்றது.

தற்போது இந்த நாடுகளைச் சேர்ந்த அனைத்து குறைந்த வயதுகளையுடைய தாய்மார்கள் பெற்றெடுக்கின்ற மூன்று குழந்தைகளில் இரண்டு குழந்தைகள் இறந்துவிடுகின்றன. 2015ஆம் ஆண்டாகும்போது இந்த நிலை நான்கு குழந்தைகளுக்கு மூன்று என்ற நிலையை எட்டிவிடும் என்று சுகாதார அமைப்பு எச்சரிக்கை செய்துள்ளது.

அறிவு வளர்ச்சி குன்றிய நாடுகளில் அதிகமாகப் பெண்கள் மிகவும் குறைவான மதிப்பையே பெற்று வருகின்றனர். இந்த நாடுகளில் பெண்கள் திருமணம் முடிப்பதற்கும் குழந்தைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் மாத்திரமே படைக்கப்பட்டிருக்கிறார்கள் என்றொரு கருத்தியல் நிலவிவருகின்றது.

இவ்வாறான நாடுகளைச் சார்ந்த பெண்களுக்கு உரிய கல்வி வசதிகள் கிடைப்பதில்லை என்பதுடன் ஒரு பெண் பூப்பெய்திய உடனேயே திருமணம் முடித்துக் கொடுக்கப்படு கின்றார். 15க்கும் 19க்கும் இடைப்பட்ட வயதுகளில் இப் பெண்கள் குழந்தைகளைப் பெற்றுக்கொண்டபோதிலும் குழந்தைகள் தொடர்பில் அவர்களுக்கு உரிய தெளிவுகள் இல்லாததால் இவர்கள் மருத்துவ ஆலோசனைகளை ஏற்றுக் கொள்ளுவதுமில்லை.

உரிய கல்வியறிவு இன்மையால் குழந்தைகளுக்கு இடையிலான இடைவெளிகளைப் பேணுவதற்கான உரிய குடும்பத்திட்ட முறைகள் குறித்து இவர்களுக்கு புரிந்துணர் வுகள் இல்லை. இவ்வாறான புரிந்துணர்வுகளைப் பெறாததால் எச்.ஐ.வி. கிருமிகள் தொற்றக் கூடிய வாய்ப்புகள்கூட அதிகம் இருப்பதாகவும், இதைப் பற்றி எல்லாம் இவர்கள் கவனத்தில் கொள்ளாததே நிலைமை மிகவும் மோசமாவதற்குக் காரணமாக இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

உலகம் முழுவதிலுமாக பாடசாலை செல்லக்கூடிய வயதுகளில் உள்ள பிள்ளைகளில் 115 மில்லியன் பிள்ளைகள் பாடசாலை செல்வதில்லை என அறியப்பட்டுள்ளது. இவர்களில் மூன்றில் இரண்டு மடங்கு பெண்களாவர். இந்த நிலையில் பெண் பிள்ளைகளது கல்வித் தராதரம் குறித்து அனுமானித்துக் கொள்ள இயலும் என குழந்தைகள் காப்பு அமைப்பு கூறுகிறது.

உரிய கல்வியறிவு இன்றிய குறைந்த வயதுடைய தாய்க்குப் பிறக்கின்ற குழந்தை கூட அநேகமாக தனது தாயைப் போலவே துன்பகரமான வாழ்க்கைக்கு உட்படுகின்ற அதேவேளை, இக் குழந்தைகள் பெண் குழந்தைகள் எனில் உரிய கல்வியறிவு பெறாமலேயே குறைந்த வயதுகளில் திருணமும் முடித்துக்கொள்கின்றன. இந்த சூழல் நிலையானது மிகவும் வேதனைக்குரியதாகும் என அவ்வமைப்பு மேலும் தெரிவிக்கின்றது.

"தனக்கொரு நல்ல தாய் கிடைத்திருந்தால் கல்வியறிவை விருத்தி செய்துகொள்ள தனக்கு வாய்ப்பிருந்திருக்கும்" எனப் பல குழந்தைகள் கூறுகின்றன. ஆனால் பெரும்பாலான குழந்தைகளுக்கு அப்படியான வாய்ப்புகள் கிடைப்பதில்லை என்கிறார் மேரி என்பவர்.



கட்டுப்பாட்டுத் திட்டங்கள் தொடர்பில் போதிய அறிவின்மையாலேயே மூன்றாம் உலக நாடுகளில் குழந்தைகளது மரண விகிதாசாரம் அதிகரித்துக் காணப்படுகின்றது. நேபாள நாட்டில் குறைந்த வயதுடைய 100 திருமணமான ஜோடிகளில் 36 ஜோடிகளுக்கு குடும்பக் கட்டுப்பாடு என்றால் என்ன என்பதே தெரியாது. ஹைட் நாட்டில் இந்த விகிதாசாரம் 58 ஆகும்.

உலக சுகாதார அமைப்பும், குழந்தைகள் காப்பு அமைப்பும் இணைந்து இந்த நிலையைக் கட்டுப்படுத்தும் முகமாக, பெண்கள் திருமணம் முடிக்கக் கூடிய ஒரு வயதைத் தீர்மானிக்கும்படி யோசனை முன்வைத்துள்ளபோதிலும் ஒரு சில நாடுகளில் நிலவுகின்ற மத மற்றும் சமூகப் பின்னணிகள் காரணமாக அந் நாடுகளிலுள்ள பெண்கள் 16க்கும் 18க்கும் இடைப்பட்ட வயதுகளில் திருமணம் செய்துகொள்கின்றனர். இதனால் இந்த வேதனை தரத்தக்க நிலை மேலும் அதிகரித்து வருவதைத் தடுக்க இயலாதுள்ளது.

பெண் பிள்ளைகளுக்கு உரிய கல்வியறிவைப் பெற்றுக் கொடுப்பதன் மூலமும், குறைந்த வயதில் கர்ப்பம் தரிக்கின்ற பெண்களுக்கு உரிய சுகாதார பழக்க வழக்கங்கள், கர்ப்பிணித் தன்மை, குழந்தையைப் பெற்றெடுக்கும்போது பின்பற்றக்கூடிய நடைமுறைகள் போன்ற தொடர்பில் உரிய ஆலோசனைகளை வழங்குவதன் மூலமும் இந்த நிலையைக் கட்டுப்படுத்திக் கொள்ளலாம் எனக் குழந்தைகள் காப்பு அமைப்பு கூறுகின்றது.

முன்னர் இங்கு குறிப்பிட்ட மூன்றாம் உலக நாடுகளில் வளர்ச்சியடையாத நாடுகளில் மட்டுமன்றி, அபிவிருத்தியடைந்த நாடுகளிலும் கூட குறைந்த வயதில் திருமணமான பெண்கள் பிரசவிக்கும் குழந்தைகளின் மரண விகிதாசாரம் உயரிய மட்டத்தையே கொண்டிருப்பதாகப் புதிய அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

அமெரிக்க ஐக்கிய இராச்சியம், கனடா, அவுஸ்திரேலியா, மேற்கு மற்றும் வடக்கு ஐரோப்பிய நாடுகளிலும் குறைந்த வயதுகளையுடைய பெண்கள் பிரசவிக்கின்ற குழந்தைகள் அதிகமாக இறந்துவிடுவதாகவும், இதனைக் கட்டுப்படுத்த இயலாது எனவும், இதற்கான ஒரே தீர்வு உரிய வயதையடையும் முன்பதாக கர்ப்பம் தரிப்பதை தவிர்த்துக் கொள்வது மாத்திரமே ஆகும் எனவும் வைத்தியர்களால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரை யுத்தகால சூழ்நிலைகள் ஏற்பட்டதன் பின்னர் குறிப்பாக வட-கிழக்கு மாகாணங்களில் குறைந்த வயதுகளையுடைய பெண்கள் திருமணம் செய்து கொள்வதும், குழந்தைகளைப் பெற்றுக்கொள்வதும் மிகவும் அதிகரித்துள்ளன என்றே கூற வேண்டியுள்ளது.


-பாருக்

# மனித மிருகங்கள்


ரஷ்யாவில் தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு உள்ளான பாடசாலையின் காட்சிகள்

செச்சினியப் பிரிவினைவாதப் பயங்கரவாதிகளின் தாக்குதலுக்கு இலக்காகி இறந்தவர்களின் எண்ணிக்கை 400ஐத் தாண்டியுள்ளது. மூன்று நாட்களாக அன்னம், தண்ணீயின்றித் தவித்த சிறுசுகளின் எண்ணிக்கை இருநூறுக்கும் அதிகமாக இருக்கலாமென்று ஊர்ஜிதப்படுத்தப்படாத தகவல்கள் கூறுகின்றன. அப்பாவிச் சிறுவர்களைப் பணயக் கைதிகளாக மூன்று நாட்கள் பிடித்து வைத்திருந்த பயங்கரவாதிகள் அவர்களுக்கு தண்ணீர் கூடக் கொடுக்க அனுமதிக்கவில்லையென்பது குறிப்பிடத் தக்கது. ரஷ்யப் படையினர் பயங்கரவாதிகள் மீது நடத்திய அதிரடித் தாக்குதலில் 27 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுவிட்டனர். சிலர் கைது செய்யப்பட்டிருப்பதாக பெஸ்லான் நகரப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். ரஷ்யாவின் தென்பகுதியிலுள்ள பெஸ்லான் நகரப் பாடசாலையை கடந்த முதலாம் திகதி செச்சினியப் பயங்கரவாதிகள் முற்றுகையிட்டனர். மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் உட்படச் சுமார் ஆயிரம் பேர் ஐம்பது மணித்தியாலங்களுக்கு மேலாகப் பணயக் கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டிருந்தனர். பணயக் கைதிகள் கொல்லப்படப் போகிறார்களென்ற ஆதங்கத்துடன் அவசரமாகச் செயலில் இறங்கிய ரஷ்ய அதிரடிப் படையினர் நன்கு திட்டமிட்டு இத் தாக்குதலை நடத்தாத காரணத்தாலேயே பெருந் தொகையானோர் உயிரிழக்க நேர்ந்ததென்று விமர்சனங்களுக்கு மத்தியிர் ரஷ்யா முழுவதுமே இரண்டு நாட்கள் தேசிய துக்க தினமும் அனுஷ்டிக்கப்பட்டது. ரஷ்யத் தொலைக்காட்சிகளில் கேளிக்கை நிகழ்ச்சிகள் காண்பிக்கப்படவில்லை.

சுமார் பத்து மணித்தியாலங்களாக செச்சினியப் பயங்கரவாதிகளுக்கும் ரஷ்ய அதிரடிப் படையினருக்குமிடையில் துப்பாக்கி மோதல்கள் நடைபெற்றிருக்கின்றன. பயங்கரவாதிகள் குண்டுகளை வெடிக்க வைத்ததால் பாடசாலைக் கட்டடமே தரைமட்டமாகியுள்ளது. இந்த இடிபாடுகளுக்குள் சிக்கி இறந்துபோன சிறுவர்களின் சடலங்கள் இன்னமும் இருக்கலாமெனச் சந்தேகிக்கப்படுகிறது. பயங்கரவாதிகளின் இத் தாக்குதலை உலக நாடுகளும் தலைவர்களும் வன்மையாகக் கண்டித்துள்ளனர். வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் விடுத்திருக்கும் அனுதாபச் செய்தியில் "இலங்கையும் பயங்கரவாத நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட நாடு. பயங்கரமான அநுபவங்கள் எமக்கும் கிடைத்துள்ளன என்று தெரிவித்துள்ளார். மனிதநேயமும் மனிதாபிமானமும் அற்றவர்களே பயங்கரவாதிகள். அவர்கள் இலங்கையர்களாக இருந்தாலென்ன, ரஷ்யர்களாக இருந்தாலென்ன அராபியர்களாக இருந்தாலென்ன, ஒட்டுமொத்தத்தில் அவர்களை மனித மிருகங்களென்று வர்ணிக்கலாம். இவர்கள் அனைவருக்கும் இருக்கக்கூடிய ஒரேயொரு குணாம்சம் பயங்கரவாதம் மட்டுமே. தமது இலக்குகளுக்கு குறுக்கே நிற்பவர்களை மட்டுமல்ல, எவ்வித நோக்கமுமின்றி அப்பாவிகளைப் பலியெடுப்பது இந்த மனித மிருகங்களின் பயங்கரமான செயற்பாடாகும். அரச பயங்கரவாத சக்திகளாலும் விடுதலையென்ற பெயரில் இயக்கங்கள் மேற்கொண்ட பயங்கரவாதச் செயல்களினாலும் இலங்கையில் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட உயிர்கள்




**பயங்கரவாதிகள். அவர்கள் இலங்கையர்களாக இருந்தாலென்ன, ரஷ்யர்களாக இருந்தாலென்ன அராபியர்களாக இருந்தாலென்ன, ஒட்டுமொத்தத்தில் அவர்களை மனித மிருகங்களென்று வர்ணிக்கலாம். இவர்கள் அனைவருக்கும் இருக்கக்கூடிய ஒரேயொரு குணாம்சம் பயங்கரவாதம் மட்டுமே. தமது இலக்குகளுக்கு குறுக்கே நிற்பவர்களை மட்டுமல்ல, எவ்வித நோக்கமுமின்றி அப்பாவிகளைப் பலியெடுப்பது இந்த மனித மிருகங்களின் பயங்கரமான செயற்பாடாகும்.**


காவு கொள்ளப்பட்டிருக்கின்றன. இலங்கையில் இடம்பெற்ற இரண்டு தசாப்த காலத்துக்கு மேற்பட்ட யுத்தத்தின் விளைச்சல்கள் இவை. பெஸ்லான் நகரில் அப்பாவிச் சிறுவர்கள் அநியாயமாகப் பலியெடுக்கப்பட்டதைப் போன்று காத்தான்குடி, ஏறாவூர், கொக்கட்டிச்சோலை, வவுனியா, யாழ்ப்பாணம் என்று அங்கிங்கென்று இல்லாதபடி மோதலில் ஈடுபட்டுள்ள இரு தரப்புப் பயங்கரவாதிகளாலும் அப்பாவிகள் பலியெடுக்கப்பட்டிருக்கிறன.

பயங்கரவாதிகள் எப்போதுமே ஒருவரில் ஒருவர் தங்கி நிற்பவர்களாவர். சிங்களவர்களையும் முஸ்லிம்களையும் ஏன் மாற்றுக் கருத்துக்கொண்ட தமிழர்களைக்கூட எதிரிகளாகக் கருதி வேட்டையாடிய விடுதலை வீரர்கள் இன்னமும் இந்த மண்ணில் இருக்கிறார்கள். அதைப் போன்று அப்பாவித் தமிழர்கள் எல்லோரையும் புலிகளாகக் கருதி வேட்டையாடிய அரச படையினரும் இருக்கிறார்கள். இன, மத ரீதியிலான அடக்குமுறைக்கு எதிராக ஆயுதப் போராட்ட இயக்கங்கள் தோன்றுவது வரலாற்று நியதி. விடுதலைப் போராட்ட இயக்கங்களுக்கு உரமாக அமைவது மாற்றுத் தரப்பினரின் அடாவடித்தனங்களும் அக்கிரமங்களும் தான். ஆனால் இன, மத ரீதியான பயங்கரவாத இயக்கங்கள் இறுதியில் தமது அழிவுக்கான புதைகுழிகளைத் தாமே வெட்டிக்கொள்கின்றனர் என்பதும் யதார்த்தம். என்னதான் இருந்தாலும் செச்சினியப் பயங்கரவாதிகளின் இயக்கப் பெயரையே சொல்லத் தெரியாத சின்னஞ்சிறுசுகளைப் பலியெடுத்த மனித மிருகங்களைக் கண்டிக்கும் அதேவேளை இரத்தம் சிந்தி இறந்துபோன அப்பாவிகளுக்காக மனிதநேய சக்திகள் இரத்தக் கண்ணீர் வடிக்கின்றன.

---

## 7ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்: 24 ❀ 03 ❀ 1961 | ஈசன் அடியில்: 11 ❀ 09 ❀ 1997



தோழனே! எங்களை விட்டுப் பிரிந்து ஏழு ஆண்டுகளா? நம்பமுடியவில்லை. நாம் விடும் இடைவெளியே எதிரிக்கு வாய்ப்பளிக்கும்.

இப்படி எப்போதும் விழிப்பூட்டும் உன் நினைவுகளை என்றும் சுமக்கிறோம்.

உடலால் உங்களை சாய்த்தாலும் உணர்வுகளால் எங்களோடு பயணிக்கிறாய்

உங்கள் பிரிவால் துயருறும் தோழர்கள்


## தம்பிராசா வடிவேல்
## (தோழர் ராஜு)

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அகிலத்தில் 22 ❐ 11 ❐ 1955



அழிப்பில் 10 ❐ 08 ❐ 2004

## ஆத்மலிங்கம் ரமணி

### தோழர் பாண்டியன்

பாசத்தின் உறைவிடமே! பண்பு மிகு காவலனே! மக்களுக்காக வாழ்ந்த உங்களை மரணப் பேய் வீழ்த்தியதோ!

பாச முகங் காணபிள்ளைகள் ஏங்குகிறார்கள்!

உங்களை இழந்து நாங்கள் தவிக்கிறோம். எத்தனை பேர் எங்களோடு பேசினாலும் உங்களுக்கு நிகர் யாருண்டு!

நல்ல கணவனாகவும் பாசமிகு தகப்பனாகவும் மக்களுக்காகவும் வாழ்ந்தீர்களே! உங்களைச் சுட்ட துப்பாக்கி தூக்கிய மிருகம் எதைச் சாதிக்கப் போகிறது.

மரணித்தும் மகத்துவமானவரே!

எங்கள் மனங்களில் என்றும் வாழ்வீர்கள்!!

என் கணவர்/எங்கள் அப்பா சுடப்பட்ட செய்தி கேட்டு இன்னல்களுக்கும் இடையூறுகளுக்கும் முகங்கொடுத்து ஓழ்வந்து எங்களோடு துக்கத்தில் ப்ங்கு கொண்ட அனைத்துப் பிரியமானவர்களுக்கும் எங்கள் நன்றிகள்!

உங்கள் பிரிவுத்துயரில் கண்ணீர் சொரியும்
மனைவி, பிள்ளைகள்.



சக்தி சக்தி என்றே செய்தால்
தானே செய்கை நேராகும்
சக்தி சக்தி என்றால் 'அஃது
தானே முக்தி வேராகும்.

சுப்பிரமணிய பாரதியார்-



# அறிவற்ற ஆமையின் கதை

ஒரு குளத்தில் ஓர் ஆமை வசித்து வந்தது. அதற்கு இரண்டு வாத்துக்கள் நண்பர்களாக இருந்தன. ஒரு வருடம் மழை பெய்யவில்லை, ஆதலால் குளத்திலுள்ள நீர் வற்றத் தொடங்கியது.

"இந்தக் குளம் சீக்கிரம் வற்றிவிடும். அதனால் நாம் வேறு இடத்திற்குப் பறந்து செல்ல வேண்டும்" என்று ஒரு வாத்து கூறியது.

"வா! நாம் செல்வதற்கு முன்பு நமது நண்பனிடம் சொல்லிவிட்டுச் செல்வோம்" என்று மற்றொரு வாத்து கூறியது.

தனது நண்பர்கள் தன்னை விட்டுப்பிரிந்து செல்வதைக் கண்டு ஆமைக்கு மிகுந்த வருத்தம் உண்டாகியது.

"நீங்கள் உண்மையில் நமது நட்புக்கு மதிப்பளிப்பவர்கள் என்றால், உங்களுடன் என்னையும் அழைத்துச் செல்ல வேண்டும். அப்போதுதான் எனக்கு மரணம் நேராது" என்று ஆமை கூறியது.

"ஆனால் உன்னால் பறக்க முடியாதே! உன்னை எவ்வாறு எங்களோடு அழைத்துச் செல்ல முடியும்?" என்று கேட்டது ஒரு வாத்து.

"உண்மைதான். என்னால் பறக்க முடியாது. ஆனால் எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. ஒரு குச்சி ஒன்றினை எடுத்து வாருங்கள். அதன் மையப் பகுதியை நான் என் வயினால் கவ்விக்கொள்கிறேன். நீங்கள் இருவரும் உங்கள் அலகுகளால் குச்சியின் முனைகளைப் பற்றிக்கொண்டு என்னைத் தூக்கிச் செல்லுங்கள். நாம் எல்லோரும் தண்ணீர் இருக்கும் வேறோரு குளத்திற்கு ஒன்றாகப் பறந்து செல்வோம்" என்று ஆமை சொன்னது.

"நல்ல யோசனைதான்! ஆனால் அதில் ஒரு ஆபத்து இருக்கிறது. வானில் பறந்து கொண்டிருக்கும் பொழுது நீ வாயைத் திறந்து பேச



பாப்பா முரசு சிறுகதை

ஆரம்பித்தால். உனது பிடி நழுவி நீ கீழே விழுந்து இறக்க நேரிடும்". என்று மற்றொரு வாத்து எச்சரித்தது.

"கவலை வேண்டாம்! அவ்வளவு முட்டாள்தனமாக நான் வாயைத் திறக்க மாட்டேன்" என்று சொன்ன ஆமை "வானில் பறந்துகொண்டிருக்கும்பொழுது நான் ஒரு வார்த்தை கூடப் பேசமாட்டேன்" என்று உறுதி கூறியது.

அதனால், வாத்துக்கள் ஒரு குச்சியை எடுத்துவந்து அதன் இரு புறங்களையும் தங்கள் அலகுகளால் பற்றிக்கொள்ள, ஆமை குச்சியின் நடுப் பகுதியைத் தனது வாயினால் கவ்விக் கொண்டது.

அவை மூன்றும் வானில் பறந்து சென்றன. வாத்துக்கள், உயர உயர பறந்து பல இடங்களில் தண்ணீர் தேடி அலைந்தன.

அவை ஒரு கிராமத்தின் மேல் பறந்துகொண்டிருக்கும்பொழுது, சில ஆண்களும் பெண்களும், குழந்தைகளும் வானத்தைப் பார்த்து, தாங்கள் பார்த்ததை தங்கள் கைகளால் சுட்டிக் காட்டினர்.

"அதே பார்!" என்று ஒரு பையன் கத்தினான்.

"இதென்னடா ஆச்சரியம்!" என அவன் நண்பன் கூறினான்.

இந்தக் கூச்சலைக் கேட்டு ஆமையின் மனம் குறுகுறுத்தது. "அவர்கள் எதை சுட்டிக் காட்டிப் பேசிக்கொண்டிருக்கின்றனர்?" என்று அது பொறுமையின்றி வாத்துக்களிடம் கேட்க வாயைத் திறந்தது.

தனது வாயைத் திறந்த உடனே, அந்த அறிவற்ற ஆமை தனது பிடி நழுவிக் கீழே விழுந்து இறந்தது. வானில் பறந்துகொண்டிருக்கும்பொழுது, குச்சியைக் கவ்விக்கொண்டிருப்பதால் அது வாயைத் திறந்து பேசக் கூடாது, என்று அதனுடைய நண்பர்கள் எச்சரித்ததை அது மறந்துவிட்டது.!

"அதனால் நல்ல அறிவுரையைக் கேட்காவிட்டால் என்ன நேரிடும் என்பதைப் பார்த்தீர்களா? அதே சமயம் அறிவுரைப்படி நடந்திருந்தால் இப்படியொரு ஆபத்து நிகழ்ந்திருக்குமா? ஆகவே குறிக்கோளில் நீங்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 15.09.2004.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 561
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 559

பரிசுக்குரியவர்:
எம். ஏ. எம். இம்ரத்,
இல 72, வெஸ்டன் சோர்டன் வீதி, புத்தளம்

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| மு. அ.பா. மஸ்ரியா. ஆதம்போடி ஹாஜியார் ஒழுங்கை, காத்தான்குடி -05. | செ. தெய்வீகன், பிரதான வீதி, புளியங்குளம், திருமலை. |
| ஆர். பேர்ட்டி மெட்டோ சர்வதேச பாடசாலை, வெள்ளவத்தை. | சி. லக்ஸ்சிதா, திருமால் வீதி, திருகோணமலை. |
| த. சிவாஜினி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி. | பா. சிறீகுகன், யாழ்ப்பாணக்கல்லூரி, வட்டுக்கோட்டை. |
| அஸ்வின் சரத்சந்திரன், நொத்தாரிஸ் ஒழுங்கை, மட்டக்களப்பு. | முஸ்தாக் அ.்.மட், தெல்தெனிய முஸ்லிம் வித்தியாலயம், பலகொள்ள. |
| யாதவராம் சந்திரக்குருக்கள், பதுளை. | சிவசுந்தரம் கௌசிகா, சார்லிமன் வீதி, வெள்ளவத்தை. |

# தாத்தாவும் பேரனும்



### தாத்தா

சோற்று மூட்டை கட்டிக் கொண்டு
தோளில் ஏட்டைச் சுமந்து கொண்டு
ஆற்றைக் கூடக் கடந்து சென்று
அடுத்த நகரில் படித்து வந்தேன்.

காட்டு வழியைக் கடந்து சென்று
கனத்த மழையில் நனைந்து கொண்டு
வீட்டை நோக்கி இரவில் வருவேன்
விளக்கே இல்லா வீதி வழியே

எண்ணெய் விளக்கை ஏற்றி வைத்து
எழுத்தைத் தேடித் தேடிப் பிடித்துக்
கண்கள் எரிய இரவு நேரம்
கல்வி தன்னைக் கற்று வந்தேன்.

அரிசி வாங்கப் பணமும் இன்றி
அடுப்பு மூட்ட வழியும் இன்றி
இருந்த போதும் சம்ப ளத்தை
எப்ப டியோ கட்டி வந்தேன்

ஐந்து வகுப்புப் படிப்பதற்குள்
அதிகத் தொல்லை அடைந்த தாலே
அந்த வகுப்பில் தேர்வு பெற்றும்
அந்தோ! படிப்பை நிறுத்தி விட்டேன்

அந்தக் காலம் – அது
அந்தக் காலம்

### பேரன்

அதிக தூரம் நடந்தி டாமல்
அருகி லுள்ள பள்ளி சென்று
மதிய உணவு உண்டு விட்டு
மகிழ்ச்சி யோடு கற்று வருவேன்

சீரு டையை அணிந்து கொண்டு
செல்வர் என்றும் ஏழை என்றும்
வேறு பாடே ஏதும் இன்றி
விருப்ப மோடு படித்து வருவேன்


இலவ சமாய்க் கல்வி உண்டு
இருந்து படிக்க வசதி உண்டு
கலக்க மின்றி கவலை யின்றிக்
கல்வி கற்றுத் திரும்பி வருவேன்.

பென்சில், நோட்டு, தேவை யான
புத்த கங்கள் போன்ற வற்றை
அன்ப ளிப்பாய்ப் பெற்று நானும்
ஆர்வத் தோடு கற்று வருவேன்

இன்னும் நிறையக் கல்வி கற்று
இனிய முறையில் தொழிலும் கற்று
நன்மை செய்வேன், நமது நாடு
நன்கு வளர, நானும் வளர்வேன்.

இந்தக் காலம் – இது
இந்தக் காலம்.

# அதிசய உலகம்



## வீசனப் பறவை

வீசனம் என்று அழைக்கப்படும் இந்தப் பறவை இனத்தில் மூன்று வகை உண்டு. பொன் வீசனம், வெள்ளி வீசனம், கொண்டை வீசனம் ஆகியவை.

இப் பறவை இனம் இலங்கையில் இல்லை. இமயமலையிலும் அதற்கு வடக்கே உள்ள திபேத், சீனா முதலிய நாடுகளிலும் இது மிகுதியாக உண்டு.

இதில் மயிலைப் போல ஆண் பறவைதான் மிக அழகானது. சிவப்பும், மஞ்களும் நீலமும் பச்சையும், ஊதாவும் கண்ணுக்கு ரம்மியமாக இருக்கும். இது மயிலுக்கும் கோழிக்கும் மிகவும் நெருங்கிய உறவானது. இதைச் 'சிங்கார கோழி' என்றும் கூறுவார்கள்.

இது இரவில் ஆபத்தில் இருந்து தப்ப மரக் கிளைகளில் தூங்கும். மயிலுக்கும் இவ்வழக்கம் உண்டு.

இதன் இறைச்சி உண்பதற்கு மிகவும் சுவையானதாம். சீனாவில் காணப்படும் பொன் வீசனத்திற்கு• ஆணின் முதுகு முழுவதும் பொன் நிறம். அடியில் கண்ணுக்குப் பகட்டான கருஞ்சிவப்பு.

வெள்ளி வீசனத்தின் ஆணுக்கு முதுகில் வெள்ளி நிறமும், அதில் வளைந்த கோடுகளும் அடியில் ஊதா நிறமும் இருக்கும்.

பெண் பறவைக்கு சிவந்த கபில நிறமும், பச்சை நிறமும், கறுப்புப் பட்டைகளும் கலந்திருக்கும்.

கொண்டை வீசனத்திற்கு மயிலைப் போல தலையில் கொண்டையும் உண்டு.

இதன் நிறம் பிரகாசமான மரகதப் பச்சை நிறமும் அதனோடு சிவப்பு பொன்னிறமும் கலந்திருக்கும்.

வீசனப் பறவையில் மேலே குறிப்பிட்ட மூன்று வகை தவிர 'நூறு கண் வீசனமும்' உண்டு.

இது மலேசியாவிலும் சுமாத்திராவிலும் இருக்கிறது. இதற்குக் கண்கள் போன்ற வெண்மையும், கருமையான புள்ளிகள் வாலிலும், சிறகுகளிலும் இருக்கும்.

ஆண் வீசனம் சிறகுகளை விரித்து அவைகளில் உள்ள கண்களைக் காட்டி ஆடும் ஆடும்போது காணும் புள்ளிகளினாலேயே இதற்கு "நூறு கண்" வீசனம் என்று பெயர்.

# உங்கள் பொது அறிவு எப்படி?


1. மொறீஷியஸ் தீவின் முக்கிய ஏற்றுமதிப் பொருள் எது?
   **சீனி**
2. நியூஸிலாந்தில் உற்பத்தி செய்யும் மூன்று முக்கிய பொருட்கள் எவை?
   **கம்பளி, பாலுணவுப் பொருள்கள், இறைச்சி.**
3. ரூபி கற்களுக்கு புகழ் மிக்க ஆசிய நாடு எது?
   **பர்மா.**
4. அதிகம் கரும்பு பயிரிடப்படும் நாடு எது?
   **கியூபா.**
5. தென்னமெரிக்காவில் பெரிய வாவி எது?
   **ரீரீக்காகா வாவி**
6. சர்வதேச வீடமைப்பு ஆண்டு எது?
   **1987**
7. இலங்கையில் வீடமைப்பு பிரகடனம் என்ன?
   **2000 ஆண்டில் எல்லோருக்கும் வீடு.**
8. புகழ் பெற்ற சிங்கள நாவலாசிரியர் யார்?
   **மாட்டின் விக்கிரமசிங்க**
9. இலங்கையில் உள்ள குடாநாடு எது?
   **யாழ் குடாநாடு.**
10. ஒசுசல என்பது யாது?
   **இலங்கை மருந்தாக்கற் கூட்டுத்தாபனம்**

# தகவல் பெட்டி

## நகம் அளவுடைய பைபிள்

இதுதான் உலகின் மிகச் சிறிய பைபிள். ஜேர்மனியில் போட்ஸ்டெம்மில் அண்மையில் காட்சிக்கு வைக்கப்பட்டது. ஒருவரின் கைப் பெருவிரலில் வைத்து படம்பிடிக்கப்பட்ட புகைப்படத்தையே இங்கு காண்கிறீர்கள்.






## புகைப்படத்தில் கோளறா?


"ரோல கோஸ்டரி"ல் பயணம் செய்வது என்பது ஒரு திகிலான அநுபவம். அவ்வநுபவத்திற்கு அபூர்வமான ஆச்சரியம் ஒன்றை இணைத்த நொடியே இது. ஜேர்மனியின் ரஸ்ட் நகரத்தில் அண்மையில் இந்த ரோல கோஸ்டரில் 500 இரட்டையர் ஜோடிகள் பயணம் செய்து உல்லாசம் அநுபவித்த காட்சியே இது.

## கோஷமெழுப்பும் பன்றி



பென்சில்வேனியாவிலுள்ள தானியக் களஞ்சியத்தில் கொழுத்த பன்றியொன்று ஆட்டுக்கும் கோழிக்கும் இடையில் தனது 'உரிமையை' நிலைநாட்ட முயற்சிக்கிறது. பன்றியின் கோரிக்கைக் குரலுக்கு மதிப்புக் கொடுக்கும் இத் தன்னடக்கம் இங்கு மனிதருக்கில்லை என்பதுதான் கவலை.

## பறவையின் ஜிம்னாஸ்டிக்



சிவப்பு சிறகுகளைக் கொண்ட கறுப்பு நிறப் பறவையொன்று இங்கிலாந்தில் ஜிம்னாஸ்டிக் விளையாட்டைக் காட்டுகிறது. தன் இரண்டு கால்களிலும் இரண்டு கரும்புகளைப் பிடித்துக் கொண்டு இருக்கும் காட்சி இது.

## நீண்ட காதுகள்



உலக சாதனை படைத்து கின்னஸில் இடம்பிடித்த நாயொன்றை இங்கே காணலாம். சாதனை என்ன தெரியுமா? 29.2 சென்ரி மீற்றர் நீளமான காதுகளைக் கொண்டதுதான். எந்த நாட்டு இராஜதந்திரத்தை ஒட்டுக் கேட்டதோ தெரியவில்லை.

## நீண்ட மோட்டார் சைக்கிள்



ஜேர்மனியைச் சேர்ந்த அன்டி லேட்மனினால் நிர்மாணிக்கப்பட்ட இந்த அபூர்வ மோட்டார் சைக்கிளின் நீளம் 13 அடி. 24 மின்சார வீல் என்ஜின்களால் வலுவூட்டப்பட்ட இம் மோட்டார் சைக்கிள் மணித்தியாலயத்திற்கு 160 மைல் வேகத்தில் பயணம் செய்யக்கூடியது.

# சினி விசிட்

இயக்குநர்கள் ஒருபுறம் நடிகர்களாகிக்கொண்டிருக்க, சத்தம்போடாமல் தயாரிப்பாளர்கள் சிலரும் நடிக்க ஆரம்பித்துவிட்டார்கள். 'குஸ்தி' என்ற படத்தில் நடிக்கிறார் ரோஜா கம்பைன்ஸ் காஜா முகமது.


அமோகா

பிரஷாந்திற்கு புதிய மனேஜருக்காக ஒரு நேர்காணலே நடத்தி வருகிறார் தியாகராஜன்.

'உயிரோசை' என்ற படத்தின் ரிலீஸ் அன்று அப்படத்தில் பணிபுரிந்த அனைவரும் ஏவி.எம்.மில் இரத்ததானம் செய்தனர்.

தாய் தேவிகாவின் மறைவுக்குப் பிறகு ரொம்பவே மாறிவிட்ட கனகா, தன்னை முழுநேர ஆன்மீகத்தில் ஈடுபடுத்திக்கொண்டுள்ளார்.

'கூட்டாளி' படத்தின் தயாரிப்பாளர் சவுந்தர பாண்டியன் கார்த்திக்கிற்கு மனேஜராக பொறுப்பேற்றுள்ளார்.

"சாண்டில்யன் நாவலை மெகா சீரியலாக தயாரித்தால் அதில் நடிக்கத் தயார்" என்று ஸ்டேட்மென்ட் விட்டுள்ளார் மீனா.

## ராசி நல்ல ராசி!

ஒரு காலத்தில் ராசியில்லாத லொகேஷனாக கருதப்பட்ட புதுச்சேரி, இன்று தமிழகத்தில் இருந்து போகின்றவர்கள் எல்லோருக்குமே ஒட்டுமொத்த ஷூட்டிங் ஸ்பாட்டாகி இருக்கிறது. படப்பிடிப்புக்கான கட்டணம் மிக மிகக் குறைவு என்பதாலும், புதுச்சேரியில் எடுத்த படங்களும் நன்றாகப் போவதாலும் 'புதிய வாழ்க்கை' என்ற படம் புதுச்சேரியிலேயே பூஜை போட்டு தொடங்கப் பட்டிருக்கிறது.

## அவரேதான்!

விஜய் நடிப்பில் உருவான 'திருமலை' இப்போது தெலுங்கில் 'கவுரி' என்ற பெயரில் உருவாகிறது. படத்தில் காதல் ஜோடிகளாக நடிப்பவர்கள் சுமந்த்-சார்மி.

சார்மி? நம்ம 'காதல் அழிவதில்லை' படத்தின் அறிமுக நாயகி சார்மியேதான்.

## அப்படி போடு!

கிரணின் கிளுகிளு பாடலை 'நியூ' படத்தில் பிட்டு ரேஞ்சுக்கு இணைக்க முயன்றார் எஸ்.ஜே.சூர்யா. அதற்கு தணிக்கைக் குழு அனுமதி தரவில்லை. இது மோதல் வரை போனது. ஆனாலும் அந்தப் பாடலை மக்களிடம் கொண்டுபோய் சேர்த்தே தீருவேன்! என்று ஒற்றைக் காலில் நிற்கிறார். அதுவும் எப்படியாம்?

'டெலிசாய்ஸ்' என்று புதுப் பெயரிட்டு நேரடியாக டிவி சேனலில் விலை பேசி தள்ளிவிடத் திட்டம். தனது இந்தப் புத்திசாலித்தனததை தானே சொல்லி மெச்சி வருகிறார் சூர்யா. கிரண் பாடலுடன் வேறு சில பாடல் காட்சிகளையும் எடுத்து ஒரு அரைமணி நேர நிகழ்ச்சியாக சேனலுக்கு தள்ளிவிடப் போகிறாராம் சூர்யா.

இனி முழுக்க தெலுங்குப் படங்களிலேதான் கவனம் செலுத்தப் போவதாக சொல்லி, ஜெயம் ரவியுடன் நடிக்க வந்த வாய்ப்பையும் உதறிவிட்டார் த்ரிஷா.


விந்தியா

## நிறம் மாறிய ரோஜாக்கள்!

தென் மாவட்ட காவல்துறையை முந்தானை முடிச்சில் வைத்திருந்த பொலிஸ் அழகி ஜெயலட்சுமியின் கதையை கோலிவுட்காரர்கள் படமாக்கப்போகிறார்கள். ஒன்றல்ல....இரண்டு படங்கள்.

ஏதாவது சூடான நிகழ்கால டாபிக் கிடைத்தால் அதைப் படமாக்கிவிடுவது அவ்வப்போது நடக்கிறது. ஆட்டோ சங்கரை வைத்து 'நூறாவது நாள்' வந்தது. சந்தனக் கடத்தல் வீரப்பனை வைத்து 'கேப்டன் பிரபாகரன்' உருவானது.

இப்படி இப்போது மதுரைக்கு இந்தாண்ட மற்றும் அந்தாண்ட உள்ள மாவட்டங்களைக் கலக்கி வரும் ஜெகஜால ஜெயலட்சுமியின் கதையும் படமாகப்போகிறது.

இந்தக் கதையின் நாயகியாக மும்தாஜை நடிக்க வைக்கவும் திட்டம் வைத்துள்ளனர். படத்திற்கு பெயர் 'கிரிமினல் லேடி'.

இப்போது 'வீராச்சாமி' படத்தில் டி.ராஜேந்தருக்கு ஜோடியாக 15 கிலோ வரை தனது உடல் எடையைக் குறைத்து நடித்துக்கொண்டிருக்கிறார் மும்தாஜ். அப்படியே 'கிரிமினல் லேடி' யாகவும் வேஷம் கட்டப்போகிறாராம்.

இதற்கிடையே ஜெயலட்சுமியின் கதையையே 'நிறம் மாறிய ரோஜாக்கள்' என்ற பெயரில் படமாக்க நீலாவதி ராஜன் என்ற தயாரிப்பாளர் திட்டமிட்டுள்ளார். இவர் தமிழ்த் திரைப்பட பாதுகாப்புக் கழகத்தின் தலைவரான கே.ராஜனின் மனைவியாவார்.

இது குறித்து நிருபர்களிடம் பேசிய நீலாவதி.

பெண்களின் அவமானச் சின்னமாக ஜெயலட்சுமி காட்சியளித்துக்கொண்டிருக்கிறார். காவல்துறை, அரசுத் துறைகளில் எத்தனை கறுப்பு ஆடுகள் உள்ளன என்பதையும் இந்த விவகாரம் வெளிக் கொண்டுவந்துவிட்டது. இந்தச் சமுதாய சீரழிவைச் சுட்டிக்காட்டுவதொடு, இன்னொரு ஜெயலட்சுமி உருவாகாமல் தடுப்பதே நாங்கள் எடுக்கப்போகும் படத்தின் நோக்கம்.

அதே நேரத்தில் ஜெயலட்சுமியை நேரடியாகக் குறிப்பிடாமல், அவரது கதையை பின்புலமாக வைத்துப் படம் எடுக்கப்போகிறோம்.

அதே போல காவல்துறையால் விபசாரியாகச் சித்திரிக்கப்பட்ட ஒரு பெண் எப்படி வாழ்க்கையில் படிப்படியாக முன்னேறி வருகிறார் என்ற கிளைக் கதையும் படத்தில் இருக்கும். இவரும் நிஜ பாத்திரம்தான். ஆனால், யார் என்பதை இப்போது வெளியிட முடியாது.

"ஒரு பெண் எப்படி வாழக் கூடாது என்பதை ஒரு கேரக்டரும், எப்படி வாழ வேண்டும் என்பதை இன்னொரு கேரக்டரும் பேசும்" என்றார்.

இந்தப் படத்துக்கான நடிகை, நடிகர்கள் இன்னும் முடிவு செய்யப்படவில்லை. அடுத்த இரு வாரங்களில் நடிகர்கள் தேர்வை முடித்து சூட்டிங்கை 35 நாட்களில் முடிக்கத் திட்டமிட்டுள்ளார்களாம்.

யார் இந்த ஜெயலட்சுமி?

## பதற்றம்!

ஷங்கர் இயக்க, விக்ரம் நடித்து வரும் 'அந்நியன்' படத்தின் கதையும், அமீர்கான் இயக்க, ஜீவா நடித்து வரும் 'ராம்' படத்தின் கதையும் ஒன்றுதான் என்கின்றனர். இதன் விளைவு: ரிலீஸ்க்கு யார் முந்துவது என்ற பதற்றம் ஷங்கர்-அமீர்கான் இருவரிடையேயும் ஏற்பட்டுள்ளது.

ஏற்கெனவே ஷங்கருக்கு ஒரு மோசமான அநுபவம்... 'பாய்ஸ்' படத்தை இவர் இங்கே தொடங்க, அதே கதையுடன் 'துள்ளுவதோ இளமை' வெளிவந்து தூள்கிளப்பிவிட்டது. இப்போது 'அந்நியனு'க்கு எதிராக 'ராம்' அல்லது ராமுக்கு எதிராக 'அந்நியன்' என்கிற நிலை ஏற்பட்டுள்ளது.


மதுர
விஜய் - தேஜாஸ்ரீ - ரக்சிதா

## ஹெலிகொப்டரில் இருந்து குதித்த ஸ்ரீகாந்த்

பெங்களூரில் நடந்த 'போஸ்' படப்பின்போது உயரத்தில் பறந்த ஹெலிகொப்டரில் இருந்து தவறுதலாகக் குதித்த ஸ்ரீகாந்த் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்.

ஸ்னேகாவுடன் ஸ்ரீகாந்த் நடிக்கும் 'போஸ்' படத்தின் சூட்டிங் பெங்களூர் விமானப் படைத் தளத்தில் நடந்து வருகிறது. இதில் இராணுவ கேப்டனாக நடிக்கிறார் ஸ்ரீகாந்த். கிர்கிஸ்தான் உள்ளிட்ட பல இடங்களில் சூட்டிங்கை முடித்துவிட்டு, இப்போது சில சண்டைக் காட்சிகள் பெங்களூரில் படமாக்கப்பட்டு வருகின்றன.

இராணுவத்தின் அனுமதியுடன் இராணுவ ஹெலிகொப்டரும் படத்தில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதில் ஒரு காட்சிப்படி, பறந்துகொண்டிருக்கும் ஹெலிகொப்டரில் இருந்து ஸ்ரீகாந்த் குதிக்க வேண்டும்.

இதற்காக டூப் நடிகரை டைரக்டர் பயன்படுத்தத் திட்டமிட்டார். ஆனால், தானே இந்தக் காட்சியில் நடிப்பதாக ஸ்ரீகாந்த் கூறிவிட்டார். இதையடுத்து இராணுவ மேஜர் ரவி என்பவரிடம் பயிற்சியும் பெற்றார் ஸ்ரீகாந்த்.

படத்தில் அந்தக் காட்சியின்போது, ஹெலிகொப்டர் குறைவான உயரத்தில் பறக்கும். அப்போது ஸ்ரீகாந்த் கீழே குதிக்க வேண்டும். ஆனால், குறைவான உயரத்தில் பறக்க வேண்டிய ஹெலிகாப்டரை விமானி அதிக உயரத்தில் இயக்கினார்.

பின்னர் ஸ்ரீகாந்த் குதிப்பதற்கு வசதியாக அதன் உயரத்தைக் குறைக்க ஆரம்பித்தார். ஆனால், குதிப்பதற்கான உயரத்தில்தான் ஹெலிகொப்டர் பறப்பதாக நினைத்த ஸ்ரீகாந்த் அதிலிருந்து குதித்துவிட்டார்.

மிக அதிக உயரத்தில் இருந்து ஸ்ரீகாந்த் கீழே குதிப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்த படக் குழுவினர் அலறியடித்துக்கொண்டு அவரை நோக்கி ஓடினர்.

ஒரு வழியாக இலாவகமாகத் தரையில் விழுந்து ஸ்ரீகாந்த் தப்பிவிட்டார். அந்த உயரத்தில் இருந்து சுதாகரிக்காமல் விழுந்திருந்தால் கை, கால் முறிவு ஏற்பட்டிருக்குமாம்.

படத்துக்காக இராணுவ முகாமில் தங்கியிருந்து பல பயிற்சிகள் எடுத்து, உடலை வலுவாக்கி வைத்திருந்ததால் ஸ்ரீகாந்த் தப்பினாராம்.

## அசோசியேட் ஆகிறார் அகர்வால்!

செல்வராகவன் திருமணம் செய்துகொள்ளப் போவதாகக் கிசுகிசுக்கப்படும் சோனியா அகர்வால், புதுப் படங்களில் நடிக்கக் கேட்டுவரும் வாய்ப்புகளை மறுத்துவிடுகிறார். எப்போதும் செல்வராகவனை வால் பிடித்துக்கொண்டே திரிகிறார் அகர்வால். இனிமேல் படங்களில் நடிக்கக் கூடாது என்றும், தன்னிடமே அகர்வாலை அசோசியேட் டைரக்டராக சேர்த்துக்கொண்டிருக்கிறார் செல்வராகவன். தான் அடுத்து இயக்கும் 'டாக்டர்ஸ்' படத்தின் அசோசியேட் அகர்வால்தான் என்று செல்வராகவனே சொல்லி வருகிறார்.



## ஐஸ்வர்யா ராயின் பிளஸ் பாயிண்ட்!

உலக அழகிகளிலேயே மிகப் பிரபலமானவர் என்கிற பெருமையைப் பெற்றுள்ளார் ஐஸ்வர்யா ராய். அவரைப் பற்றிய செய்திகளோடு 17 ஆயிரம் வெப்-சைட்டுக்கள் உள்ளன. அமெரிக்கப் பத்திரிகையான 'டைம்' நடத்திய சர்வேயில் உலகின் மிகப் பிரபலமான நூறு பேரில் ஒருவராக ஐஸ்வர்யாராயும் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார். ஐஸ்வர்யா ராயின் பிளஸ் பாயின்ட்டுகளில் மிக முக்கியமானது அவரது அழகிய கண்கள். அந்தக் கண்களை, தன் இறப்புக்குப் பிறகு தானம் செய்துள்ளார் ஐஸ்வர்யா.

இதுவரை பிறந்தநாள் கொண்டாடாத கஸ்தூரி ராஜா. இந்த வருடம் ஒரு நட்சத்திர ஹோட்டலில் பத்திரிகையாளர்களுடன் தனது பிறந்த நாளைக் கொண்டாடினார்.



கலாபவன் மணி

## தமிழுக்கு வரும் ரேணுகா மேனன்

மலையாளம், தெலுங்குப் படங்களில் ஒரு ரவுண்ட் முடித்துவிட்டு, 'ராஸ்கல்' படம் மூலம் தமிழில் ஆஜராகியுள்ளார் ரேணுகா மேனன். 'ராஸ்கல்' படத்தில் இவருக்கு ஜோடியாக ரவி,நடிக்கத் தலையாட்டியுள்ளார். லக்ஷ்மி மூவி மேக்கர்ஸ் தயாரிக்கும் இந்தப் படத்தில் ரவிக்கு ஜோடியாக ரேணுகா மேனன் என்ற கேரளப் பெண் அறிமுகமாகிறார். இவர் நடித்த 'நம்மல்' என்ற படம் மலையாளத்தில் சூப்பர் ஹிட். இதனால் தெலுங்குப் படவுலகம் இவரை வாரி எடுத்துக்கொண்டது.

ஹைதராபாத்திற்கும் திருவனந்தபுரத்திற்கும் மாறி மாறிப் பறந்துகொண்டிருந்தவரை 'ராஸ்கல்' படத்திற்காக சென்னையில் தரையிறங்க வைத்துள்ளார்கள். எல்லாக் கேரள அறிமுகங்களைப் போலவே, கவர்ச்சியான வேடங்களில் நடிக்கமாட்டேன் என்று கூறிவருகிறார். கையில் படம் எதுவும் இல்லாதபோது இப்படிக் கூறுவாரா என்று தெரியவில்லை.

'ராஸ்கல்' படத்தில் ரவி, ரேணுகா மேனனுடன் பெப்சி விஜயன், வடிவேலு, சீதா, மோனிகா மற்றும் கும்தாஜ் நடிக்கிறார்கள்.

ஜாலியாகப் போய்க்கொண்டிருக்கும் ஒரு கல்லூரி மாணவனின் வாழ்க்கை, காதல் வந்ததும் எப்படி சவால் நிறைந்ததாக மாறிப்போய்விடுகிறது என்பதுதான் படத்தின் ஒன்லைன் ஸ்டோரி. 'அண்ணாமலை' டி.வி. தொடருக்கு திரைக்கதை, வசனம் எழுதிய பாபு யோகேஸ்வரன், இந்தப் படத்திற்கு கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்குநராக அறிமுகமாகிறார்.

## தேவயானி போடும் கண்டிஷன்!

டிவி சீரியலில் நடிக்க தன்னை அணுகிவரும் தயாரிப்பாளர்களிடம் சம்பளம், கண்டிஷன்ஸ் பேசியவுடன் பேச்சை முடித்துக்கொள்வதில்லை தேவயானி! சீரியலில் நடிக்கிறேன் என்றவுடன் என்னை அழுது வடிய விடக் கூடாது, தன்னை புரட்சிகரமான பெண்ணாகக் காண்பிக்க வேண்டும் என்றும் கண்டிஷன் போடுகிறார். அதன்படிதான் அவர் நடிக்கும் சீரியல் அமைக்கப்படுகிறது.

## வடிவேலு கனவு பலிக்குமா?

ஹீரோவாக விவேக் நடிக்க ஆரம்பித்திருப்பது வடிவேலுக்கு முழு சந்தோஷம்! தனக்கு இருக்கும் ஒரே போட்டியான விவேக், காமெடியன் ஸ்தானத்தை நழுவ விட்டுவிடுவார் என்பது வடிவேலுவின் கணிப்பு. அதற்கப்புறம் கருணாஸ், வையாபுரி, மயில்சாமியை எல்லாம் ஈஸியாக ஊதித் தள்ளிவிட்டு தானே தனி ராஜ்யமாக இருக்கலாம் என்கிற எதிர்பார்ப்புடன் இருக்கிறார் வடிவேலு.

'கூட்டாளி' படத்தின் தயாரிப்பாளர் சவுந்தர பாண்டியன் கார்த்திக்கிற்கு மனேஜராக பொறுப்பேற்றுள்ளார்.


தேயிலைத்தூள் விளம்பரத்தைத் தொடர்ந்து, மேலும் சில விளம்பரங்களில் நடிக்கத் தயார் என்ற அறிவித்துள்ளார் அஜித்.

பிரஷாந்திற்கு புதிய மனேஜருக்காக ஒரு நேர்காணலே நடத்தி வருகிறார் தியாகராஜன்.

தன் தந்தையை தன் அலுவலகத்திலேயே தங்க வைத்து பராமரிக்கிறார் விவேக்.

'விருமாண்டி'க்குப் பிறகு தமிழில் பிஸியாவார் என்று நினைத்த அபிராமி, தற்போது கன்னடத்தில் செம பிஸியாகிவிட்டார்.

சக நடிகர் - நடிகைகளுக்கு ரொமான்டிக் எஸ்.எம்.எஸ்., அனுப்பி குதூகல மூட்டுகிறார் சிம்பு.



4 ஸ்டூடண்ட் பரத் - கோபிகா

## இவர் வித்தியாசமானவர்!

ஒளிப்பதிவாளர்கள் டைரக்டராகும்போது, அவர்களே அப் படத்திற்கு ஒளிப்பதிவும் செய்வார்கள். ஆனால், விருதுகள் பெற்ற பிரபல ஒளிப்பதிவாளர் கே.வி.ஆனந்த் இதில் வித்தியாசமானவராக இருக்கிறார். இவர் டைரக்டராக அறிமுகமாகும் ஏ.எம்.ரத்தினத்தின் படத்திற்கு இவர் காமிரா பிடிக்கப் போவதில்லை. பிரசாந்தும், ஸ்ரீகாந்தும் இணைந்து நடிக்கப் போகும் இப் படத்திற்கு, கமலுக்கு விருப்பமான ஒளிப்பதிவாளர் திரு ஒளிப்பதிவு செய்யப் போகிறார்.

## அஜித்தின் உறுதிமொழி!

தொடர்ந்து தன் படங்கள் அடி வாங்கியதால் கதிகலங்கிப் போயிருக்கும் அஜித், கோலிவுட்டில் நம்பர் ஒன் இடத்தை 'லபக்' செய்வதே தன் இலட்சியம் என்று அறிவித்துள்ளார். 'கோடம்பாக்கத்து சினி ரேசில் வின் பண்ணாமல், இனி கார் ரேஸ் பக்கம் போகப்போவதில்லை' என்று உறுதிமொழி ஒன்றையும் எடுத்துள்ளார் அஜித்.

## டைவர்ஸை நோக்கி ரஞ்சிதா!

கோலிவுட்டில் அடுத்த டைவர்ஸுக்கான முஸ்தீபுகள் நடந்து வருகின்றன.

தமிழ் சினிமா நடிகைகளின் காதல் கல்யாணம் சில மாதங்கள் வரைதான் நீடிப்பது வழக்கமாகி வருகிறது. அப்படியே நீடித்தாலும், சில வருடங்களிலேயே வாழ்க்கை கசந்து அல்லது கருத்து வேறுபாடு முற்றிப்போய் மோதலிலும் பின்னர் டைவர்ஸிலும் முடிந்துவிடுவது சமீப காலமாக அதிகரித்து வருகிறது.

கமல்ஹாசன் - சரிகா, பார்த்திபன் - சீதாவில் ஆரம்பித்து சொர்ணமால்யா, சுகன்யா, பாபிலோனா, கௌதமி என வகையாக பல விவாகரத்துக்கள் நடந்து வருகின்றன.

இப்போது இன்னொரு நடிகை விவாகரத்துக்கு ரெடியாகி வருவதாக ஒரு தகவல் கசிகிறது. அது வேறு யாரும் அல்ல, பாரதிராஜாவால் அறிமுகமான ரஞ்சிதாதான். உற்றார், உறவினர் பெற்றோர் பார்த்து கேரளாவைச் சேர்ந்த ஒரு இராணுவ கேப்டனுக்கு ரஞ்சிதாவை திருமணம் செய்து கொடுத்தனர்.

அவரும் சந்தோசமாக வாழ்க்கையை நடத்தி வந்தார். ஆனால் சமீப காலமாக அவருக்கும் கணவருக்கும் கருத்து வேறுபாடு அதிகமாகிவிட்டதாம். இதனால் கணவரிடமிருந்து பிரிந்து சென்னையில் தனி வீடு பார்த்து குடியேறியுள்ளாராம்.

ஜெயா டி.வி.யில் ஒளிபரப்பாகும் 'ரோஜா' தொடரில் தற்போது ரஞ்சிதா நடித்து வருகிறார். தனது அன்றாட வாழ்க்கைச் செலவுகளுக்காக டி.வி. தொடர்களில் அதிகமாக நடிக்கவும் முடிவு செய்துள்ளாராம். இதற்காக தீவிரமாக வாய்ப்புக்களும் தேடி வருகிறார்.

சினிமாவில் அக்கா, அம்மா கேரக்டரில் எல்லாம் நடிக்கமாட்டேன் என்று சில மாதங்களுக்கு முன்பு வரை கூறிக்கொண்டிருந்தார் ரஞ்சிதா. இனி அந்த நிலையிலும் மாற்றம் இருக்குமாம்.

விரைவில் கணவருக்கு டைவர்ஸ் நோட்டீஸ் அனுப்பிவிடுவார் என்கிறார்கள்.






## கனவு

கனவு, கற்பனை
ஆவி என்று
சொல்கின்றார்களே
இவற்றில்
நான் எந்த
உலகத்தில்
இருந்தேனோ?
கனவாக இருக்கலாம்,
அதையும் எப்படி
நிச்சயமாகச் சொல்வது?
எனக்குத்தான்
விழித்திருக்கும் போதே
கனவு காண்பதும்,
கனவு காண்பதை
விழிப்பென்று நினைப்பதும்
வழக்கமாயிற்றே.
ஆனால் நான்
காணும் கனவிலும்
விழிப்பிலும்
அவளின் விம்பமே
தென்படுகின்றதே.

*இரா.கோணேஸ்வரன், நுவரெலியா.*

## பழைய டயறி

பள்ளி நாட்களில்
பார்க்கத் துடித்ததில்லை!
ஆனால் - பாராமல்
இருக்கவும் முடிந்ததில்லை!

நான் காதலை
சொல்லவா? வேண்டாமா? - என்று
தடுமாறிய நாட்கள் அவை!

"நம் விரல்கள் கூட
உரசி விடக் கூடாதே" - என்று
விலகி விலகி நடப்போம்!
இருவரும் கடிதங்களை
பறிமாறிக் கொண்டபோது.....

எனது கேள்விகள் - உன்னிடமும்
உனது கேள்விகள் - என்னிடமும்
பதில்களைத் தொலைத்துவிட்டு
தடுமாறிய அவஸ்தைகள் - அப்பப்பா!....

அத்தனையும்
புதைத்து வைத்திருக்கிறேன்!
பசுமை நினைவுகளோடு
என் டயறியில்!

*–இ.வஷ்னிநாதன், இராஜகிரிய.*

## விம்பங்கள்

மனிதனைக்
காண வேண்டும்.
எப்படி இருப்பான்?
இலக்கணமில்லை......


தேடிப் பார்த்தேன்.
மனிதனின் விம்பத்தில்
உலாவும் உயிரினங்களே
என் விழித்திரையில்
வந்து போயின.....

குணத்தைக் கொண்டுதான்
அளவீடு என்றாலும்
குணத்தைக் கணிக்கவும்
சரியான
அளவுகோலில்லை........

ஆயினும்
ஓர் குத்துமதிப்பிற்கு
அளவிட்டேன்.....
சுருக்கமாய்
விடை வந்தது,
அவன் இப்போது
இல்லை.....

*எம்.சி.எம்.நபீல், பள்ளிவாசல்துறை.*

## ஆசைகள்



என் ஆசைகளைக்
கட்டிப் போடுகிறேன்
எனினும் - அவைகள்
அவிழ்ந்து விடுகின்றன
அதனால் என்
நகங்களைப் போல
வெட்டி விடுகிறேன்
எனினும் என்
நகங்களைப் போல
மீண்டும் மீண்டும்
வளருகிறது!

*-எஸ்.பி.தர்மராஜ், டயகம.*

## அன்புள்ள மனத்திற்கு

மனமே!
இருக்குமிடம் தெரியாத நீ!
சூட்சுமமாய் என்ன வித்தை காட்டுகிறாய்
இரக்க மனம் அரக்க மனம் என
பல பிரிவுகள் கொண்ட நீ!
எப் பிரிவானாலும் முதலிடத்தில்
இருக்க விரும்புகிறாய்.
அனைத்துக் கடவுள்களும் உனை
பக்குவமடைந்துவிடு என்கின்றன.
நீயோ கடவுளுக்கே தண்ணிகாட்டி,
கடவுள் பெயராலேயே,
கொலை, கொள்ளை, கற்பழிப்பு
அத்துமீறல்களுக்கு அடிப்படையாய் நீ!
எப்போ குளிர்ந்து சாந்தியடைவாய்
அதை மட்டும் கூறு!
அப்போது நான் உயிர்க்கின்றேன் மனமே!
இப்படிக்கு நான்.

*–தி.சுதர்மன், மானிப்பாய்.*

## இரகசியம்

அடியே சகியே!
உன்னால் ஏற்பட்ட
காதல் தோல்வியால்;
இன்று நானொரு
கவிஞனாய் உயர்ந்து
நிற்கின்றேன்.
இதுவே என்
வெற்றியின் இரகசியம்.

*–ஜே.எம். ரமேஷ்கண்ணா, கோமாரி.*

## கதையல்ல நிஜம்



இரவும் நானும்
விழித்தே இருந்தோம்
இன்று என்
விழிகளுக்கு
இரவு விடுமுறையில்லை
அவள் நிஜ படத்தை
பத்திரப்
படுத்தியதால்

இரவும்
ஜன்னல் நிலவும்
மௌன மொழியை
கற்றுத் தந்தன அவள்
நினைவில்
குழந்தையான
எனக்கு

என் காதல் திரையில்
காதலி முதல் முடிவு
வரை
நீதான். அது எப்படி
அடுத்த கதைக்கு
நாள் பார்க்கின்றாய்.
உன்மேல் வைத்த
இடைவேளை இல்லாத
காதலினால் நீ
முடிவில் முடிவை
மாற்றிவிட்டாயே!

*–சனுன் மொஹமட், புத்தளம்.*

## ஆசைக்கு வேலி விழுந்த பின்

ப்ரிய,
என்னில்
சுய சிந்தனையைக் கூட
தடவிப் பார்க்கிறார்கள்

என்ன,
நான் அது கூட
இழந்தவனா?

இல்லை,
என் இதயக் கதவுகள்
திறக்கப்பட்டு விட்டன.

அவ்வழியே
உன் உருவமும்
நாளுக்கு நாள்
தூரப்படுவதாக
மனதிலோர் பிரமை

பேராசையில்
மனித மாண்பு
மறந்து விட்டவர்கள்.

சுயம்வரத்திற்கு
அளவு கோல்
சொத்துக்கள்
மாத்திரம்தானா?

ப்ரிய
உன்னைச் சுற்றி
ஆயிரம் வலைப்பின்னல்கள்
அதை பிய்த்தெறிய
சக்தி இல்லாதவிடத்து
பிரிவுத் துயர்
வேண்டியது தானே?


விம்முவாய்
வேதனைப்படுவாய்
நீ மாத்திரம் தானா?

ப்ரிய
உன் நல்வாழ்வே
இவனில் மீதம்

எண்ணக் கனவுகள்
கருகுவதை விட
கொடும் பிரிவு
மேலாயிருக்கலாம்.

தூர நின்று
நிறைவாய்
இருக்கக் கண்டு
நிறைவு பெறத்
துடிக்கும்
பண்பட்ட இதயம்
இது.

*–எம்.ஐ.எம்.அஷ்ரப், சாய்ந்தமருது – 07.*



# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் – கவிஞரும்

கவிதை பல்வேறு மாற்றங்களுக்கூடாக வளர்ந்து, இன்று இதுவரை மறைக்கப்பட்ட வாழ்க்கையையும் உருவியெடுத்துப் பார்வைக்கு வைக்கும் உக்கிர சாதனமாக ஆகியுள்ளது. இதன் ஒரு பகுதியாக பேச்சு–கவிதை என்கிற வடிவங்களுக்கிடையிலான இடைவெளி குறைந்து கவிதை புதிய அர்த்தத்தை உற்பத்தி செய்யும் பேச்சாக உருமாறியும் வந்துள்ளது. அடக்கப்பட்டிருந்தவர்களின் குமுறல் அவர்களது பேச்சு வடிவத்திலேயே கவிதையாகி ஈர்த்துக்கொள்கிறது.

பழைய மதிப்பீடுகள் பரிசீலிக்கப்படுகின்றன. ஆதிக்க வர்க்கத்தின் கருத்தியலை, செயலை விலக்கி வைப்பதும், எதிர்த்துக் கலகம் செய்தலும் இந்தக் கவிதைகளின் உள்ளார்ந்த பண்பாகிறது. இதுகாறும் சில மனிதர்களைக் கீழ் நிலையில் வைத்திருந்து அன்பு காட்டச் சொல்லித் தந்த அகங்காரத்தை, சம மரியாதை தர மறுக்கிற மனநிலையை கவிதைகள் குத்திப் பிளந்து காட்ட ஆரம்பித்துவிட்டன.

இவற்றுக்கு அடையாளமாயுள்ள இளங்கவிஞர் நட. சிவகுமாரின் சில கவிதைகள்.



## இடைவெளி

ஒண்ணாங் கிளாஸில இருந்தே
ஒண்ணாதான் படிச்சோம்
காலேஜில காலுவச்சது வர
சினிமாவுக்கு போவது
சிகரெட் பிடிப்பது
கள்ளு குடிப்பது இதிலெல்லாம்
அப்படி ஒரு ஒற்றுமை நமக்குள்.

ரம்ஸானுக்கு தரும்
அந்த கிண்ணத்து அப்பம்
கார்த்திகை கொழுக்கட்டை
அரிசி பாயாசம்
இப்படி தாயும் பிள்ளையாட்டமாக
நடந்த பரிமாற்றங்கள்
நம் ஆழங்களை
கொஞ்சம் கூட குறைக்காது.

மண்டகாட்டு கொடைக்கும்
பீரப்பா விஷேசத்துக்கும்
நாம பொழிச்ச பொழிப்புக்கள்
இண்ணைக்கும் மறக்காது பாத்துக்க.....

இப்ப எடையில
திருவிழாவுக்கு போனப்ப
புரோட்டா இறைச்சி
உங்க வீட்டுல தான் சாப்பிட்டேன்.
நிகழ்கால அரசியல், அறிவியல், சினிமா
இலக்கியம் இப்படி எல்லாமே
சண்டை பிடிச்சது மாதிரி
சவுண்டு போட்டு பல நாளு பேசியிருக்கோம்.
ஆனா இப்பவெல்லாம்
ஒரு சின்ன கீறல்
நம்ம பேச்சில் தெரியுதே.....

## அம்மா

எம்புட்டு ஆசைப்பட்டேன் தெரியுமா.....
கழுத்தில் தாலி ஏறதுக்கு முன்னால
எங்கோடியாவது ஏறிடணும் ஒரு வேலையில
அப்பதான் வரப்போற மாப்பிள
ஓரளவு காசுகொறைச்சு கட்டிக்கிடுவான்னு
நினைச்சேன்

ஏண்டி முதேவி
நீ படிச்சு கிழிச்சதெல்லாம் போதும்
உனக்கு கலெக்டர் வேலையா கிடைக்க போவுது
இப்படி அடிக்கடி அம்மா கத்தினா கூட
அடுப்படி வேலைய முடிச்சுகிட்டு
ஆளு அனக்கம் எல்லாம் தீர்ந்த பொறவு
நடுச்சாமம் வரை முழிச்சி படிச்சிருக்கேன்.

ஆனா இன்னைக்கு ரொம்ப கஷ்டமாயிருக்கு
நித்தமும் அவியளுக்கு சோறுகட்டி,
அமலா கான்வென்ட் போற
பிள்ளையளுக்கு சோறு கட்டி,
ஆபீசுக்கு போற எனக்கும் சோறு கட்டி
கஷ்டப்படறத விட
கட்டயில போவலாம் போலிருக்கு.

நாசமாட்டு போற பயக்களுக்க
இடி வேற படவேண்டியிருக்கு பஸ்சில
சித்த வெளுப்பாயிட்டு இருந்ததுனால
அவியளுக்கு எம்மேல லேசா ஒரு சந்தேகம்
இத மனசுல வைச்சுகிட்டு
செய்யாத குத்தத்துக்கு எரிஞ்சு விழுவாரு
சவத்த என்னத்த வாழ்க்கை

ராத்திரி படிச்சுகிட்டு இருந்த மவகிட்ட போய்
மக்கா நேரமாச்சில்லா
இனி காலையில படிக்கலாம்
தூங்க வாண்ணு கூப்பிட்டேன்
அதுக்கு அவ சொன்னா
அம்மா – உன்ன மாதிரி
நானும் வேலை பாக்காண்டாமா....

* * *

## அப்பா

கண்டிப்பா
ஆபீசருக்குத்தான்.

அப்புறம்
எதாவது கவர்மென்ட் வேலை.

அதுக்கப்புறம்
ஒரு தனியார் கம்பெனி,

வெறும் மனுசனா
நல்ல பையனா இருந்தா போதும்
இப்படித்தான் அப்பா
இப்போதெல்லாம் சொல்லிட்டே இருக்காரு

அக்காவுக்கு
மாப்பிள்ளை தேடுகையில்.


* * *

## சித்தப்பா

திருச்செந்தூர் விசாகத் திருவிழாவுக்கு
வழிநெடுக்க
வந்த கூட்ட நெரிசல் மக்களுக்கிடையே
இரவு விடிய விடிய சுக்கு கருப்பட்டி, கடலை
இது போன்ற
ஏதாவது வாயில் அரைத்துக் கொண்டு
திருவிழா கடைகளை நாலாபுறமும் சுற்றியபடியே
புதுசா பேண்ட் போட்ட பருவத்தில்
அவருடன் போவது ஜாலியான ஒரு அநுபவம்
மிஞ்சிய ஒன்றிரண்டு முடியும் வெள்ளை
மீதி வழுக்கை தலை
ஒரு சில ஓட்டைகள்
உடுத்திருந்த பாலியஸ்டர் வேட்டியில்
உபயம் சிகரெட்
சின்ன அழுக்கை கூட வெளிச்சம் போடும்
சைனா சில்க் சட்டை

இப்போது
வேலை விசயமாக போயிருந்தேன்
அவர் கூட சென்னைக்கு
உறவுக்காரர்களிடம் வீடுவீடாக ஏறும் போதும்
சிற்றி பஸ்ஸுக்காக
ஒவ்வொருவரிடமும் விசாரிக்கும் போதும்
பேக்கிஸ் பேண்ட் சட்டை போட்ட எனக்கு
ஒரு மாதிரியா இருந்தது
அவர் கூட என்னத்துக்கு போனேன்னு....


## பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி




பெயர் : நா. கஜேந்திரன்
வயது : 22
முகவரி : கைதடி தெற்கு, கைதடி, (வலந்தனை) யாழ்ப்பாணம்.
பொழுதுபோக்கு: பத்திரிகை, கதைப் புத்தகம், தொலைக்காட்சி



பெயர் : ஏ. சி. ஷாகூர்
வயது : 24
முகவரி : 27A, ஆஸ்பத்திரி வீதி, தெகிவளை.
பொழுதுபோக்கு : பேனா நட்பு, பத்திரிகை.



பெயர் : த. கிருபாகரன்
வயது : 21
முகவரி : 46/60 வீட்டுத்திட்டம், மதவுவைத்தகுளம், வவுனியா.
பொழுதுபோக்கு : பத்திரிகை, தொலைக்காட்சி.



பெயர் : என். கிருஷ்ணகுமார்.
வயது : 17
முகவரி : 57, வெலியமுன, ஹெந்தல, வத்தளை.
பொழுதுபோக்கு : வழமையானவை.




# உற்சாகமான வாழ்க்கைக்கு.......

உற்சாகத்தைக் கொடுக்கக்கூடிய ஏணிப் படிகள் என்றால் இதில் ஏறிச் செல்ல நாம் சிறிதளவும் தயங்க வேண்டிய அவசியமில்லை. உணர்ந்து செயற்படுவோம். வளர்ச்சிக்கும் வளமான வாழ்க்கைக்கும் அடித்தளமிடுவோம்.

வாழ்க்கை வாழ்வதற்கே! நாம் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கே! இந்தப் பூமிக்கு வரும்போதே வெற்றியோடும் மகிழ்ச்சியோடும் வாழ்க்கையை வாழவே வந்துள்ளோம்.


நம்மில் பலர் நடந்ததை எண்ணிக் கவலைப்படுபவர்களாகவே இருக்கிறோம். நடக்கப் போவதை எண்ணி, என்ன நடக்குமோ என்று அச்சப்பட்டுக்கொண்டே இருக்கின்றோம். நிகழ்காலத்தில் மட்டும் வாழக் கற்றுக்கொண்டால், வாழ்க்கை முழுமையானதாக அமையும். மகிழ்ச்சியுடனும் முழு மனிதத் தன்மையுடனும் வாழ முடியும். மகிழ்ச்சியான முகத்துடன் இருப்பது வெற்றி பெறுவதற்கு மிகச் சிறந்த வழியாகிறது.

மகிழ்ச்சியான கட்டத்தில் அநேகர் இருப்பதைப் பார்த்திருப்பீர்கள். காரணம், மகிழ்ச்சிதான். மகிழ்ச்சியைப் பரப்ப முடியும். மகிழ்ச்சி என்பது மனநிலை. அது உங்களிடமே இருக்கின்றது. வேறு எங்கும் தேடிப் பணம் கொடுத்து வாங்க வேண்டியதில்லை. போராட வேண்டியதில்லை. உங்களுடன் பிறந்தது அது.

வயது செல்லச் செல்ல, தோல் சுருங்கிவிடும். அது போல, மகிழ்ச்சி குறையக் குறைய வாழ்க்கையும் சுருங்கிவிடும். மகிழ்ச்சியுடன் இருப்பதன் மூலம் ஆயுள் வளர்ந்துகொண்டே போகும். மகிழ்ச்சியுடன் இருந்தால் எந்தக் காரியத்தையும் எளிதாகச் சாதித்துவிடலாம். மகிழ்ச்சி என்பது இனிமையான எண்ணங்களை வைத்திருப்பதாகும். மகிழ்ச்சி என்பது நாமாகப் பெறுகின்ற ஒரு மனோபாவம்.

நீங்கள் ஒரே ஒரு முறைதான் வாழ்கின்றீர்கள். நீங்கள் சோகமாய் இருக்கும் போது இதை நினைவில் கொள்ளுங்கள். உங்களையும் மற்றவர்களையும் மகிழ்ச்சி உள்ளவர்களாக மாற்ற உங்கள் ஆற்றலைப் பயன்படுத்துங்கள். மகிழ்ச்சி உங்களிடமே உருவாகிறது. மகிழ்ச்சியாக இருப்பதாக நீங்கள் கொண்டாலே, மகிழ்ச்சி உங்களிடம் தோன்றிவிடும்.

ஏற்கெனவே உலகத்தில் நிரம்பி இருக்கின்ற கவலைகள் போதும். உங்களுடைய கவலையையும் அதில் சேர்க்க வேண்டாம். உலகம் எப்படி வேண்டுமாயினும் இருக்கட்டும். நான் மகிழ்ச்சியாக இருப்பேன் என்கிற முடிவுக்கு



நீங்கள் வந்துவிட்டால், ஒவ்வொரு நாள் பொழுதும் நல்ல பொழுதாகவே முடியும்.

உற்சாகம் என்பது உடலும், உள்ளமும் சம்பந்தப்பட்ட விஷயம். இது கடையில் காசு கொடுத்து வாங்கும் பொருள் அல்ல. நாமே உண்டாக்கிக்கொள்வதுதான். இதற்கு அடிப்படையாக அமைவது ஒருத்தரை ஒருத்தர் புரிந்துகொள்ளல் என்பதில்தான்.

இன்று எல்லோருமே அவரவர் நோக்கம், குறிக்கோள், பிரச்சினை என்பதிலேயே கண்ணும் கருத்துமாய் இருக்கிறோம். முதலில் குடும்பத்தை எடுத்துக்கொள்வோம். குழந்தைகளை வளர்ப்பதில் இருந்தே ஆரம்பித்துவிடுகிறது. நாம் அந்தக் குழந்தையைச் சிறு வயது முதற்கொண்டு எப்படி வளர்க்கிறோமோ, அதே போல்தான் வளர்ந்த பின்னும் அந்தக் குழந்தை தனது தாய், தந்தையரை நடத்தும். அன்பு என்ற விதையை விதைக்கும்போது, குழந்தைகளின் உள்ளத்தில் பண்பு என்ற செடி தானாக முளைத்து விடுகிறது. இதைப் போல பெற்றோர்கள் செய்வதில்லை.

அடுத்து கணவன், மனைவிக்கிடையே கருத்து வேறுபாடு. இது சில இடங்களில் கணவன், மனைவியை மதிக்காமல் தான் என்ற கர்வத்தில் மட்டந்தட்டுகிறான். சில இடங்களில் மனைவி, கணவனை மட்டந்தட்டுவதிலேயே குறியாக இருக்கிறாள். கணவன், மனைவிக்கிடையில் யார் உயர்ந்தவர்? யார் தாழ்ந்தவர்? என்ற பேச்சுக்கே இடமில்லை. இவருவரும் சமம்தான். இங்கு புரிந்துகொள்ளல் என்பது மிக முக்கிய பங்கு வகிக்கிறது. அடுத்து விட்டுக்கொடுத்தல், இவை இரண்டும் சேரும்போது வாழ்க்கை பூக்கள் நிறைந்த பூஞ்சோலையாகத்தான் இருக்கும். இவை இல்லாவிட்டால்தான் விவாகரத்து என்ற பேச்சே உருவாகிறது.

வீட்டில் வயதானவர்கள் இருந்தால், அவர்கள் தங்கள் வேலைகளை மட்டும் பார்த்துக்கொண்டிருக்க வேண்டும். அனாவசியமாக அடுத்தவர் விஷயத்தில் மூக்கை நுழைக்கும்போது பிரச்சினை பூதாகரமாக உருவெடுக்கிறது. அதுவும் தன்னுடைய மகளுக்கு ஒரு மாதிரி நியாயம், மருமகளுக்கு மற்றொரு விதமாக நியாயம் என்று பேசும்போது, மாமனார், மாமியார், மருமகள் இவர்களுக்கிடையே உறவுப் பாலம் அறுந்துவிடுகிறது. மருமகளும் தன் அப்பா, அம்மா, உடன் பிறந்தோர் என்று எல்லோரையும் விட்டுவிட்டு நம் வீட்டிற்கு வாழ வந்தவள்; அவளும் மனிதப் பிறவி உணர்வோடு உள்ளவள். அவளையும் மரியாதையாக நடத்தினால் முதியோர் இல்லங்களுக்குப் போகும் நிலை ஏற்படாது.


எல்லாவற்றிற்கும் அடிப்படையாக நாம் ஒவ்வொருவரும் அன்பு, பொறுமை, ஒருவரையொருவர் புரிந்துகொள்ளல், விட்டுக்கொடுத்துப் போகும் மனப்பான்மை, அடுத்தவரை மதிக்கும் தன்மை என்று இருந்தால் ஒவ்வொருவர் வாழ்க்கையும் உற்சாகமான வாழ்க்கையாகத்தான் இருக்கும்.

## சுருக்கம் நீங்க....

முகத்தை சோப் போட்டுக் கழுவினாலே போதும் என்று நினைக்க கூடாது. அதையும் முறையாகச் செய்தால் முகம் பொலிவாகத் தெரியும். மிதமான சூட்டில் இருக்கும் நீரை முகத்தில் அடித்து, பின்பு ஹெர்பல் சோப்பினால் கையில் நுரை வரத் தேய்த்து முகம், கழுத்தில் தடவவும். கைகளால் தாடையிலிருந்து மேல் நோக்கியும், முகத்தின் நடுவிலிருந்து காது ஓரங்கள் வரையும் மசாஜ் செய்யவும். ஐந்து நிமிடம் இதே போல் செய்து மிதமான சூட்டில் உள்ள நீரால் முகத்தைக் கழுவலாம்.

தொடர்ந்து சோப் மட்டுமே பயன்படுத்தி வருபவர்களுக்கு சருமத்தில் இருக்கும் எண்ணெய்ப் பசை நீங்கி முகம் வறண்டுவிடும். இதனால் எதிர்ப்புச் சக்தி குறைந்து பருக்கள் வரலாம். அதற்கு 1 கப் தண்ணீரில் 1 தேக்கரண்டி, வினிக்கர் கலந்து, அதைப் பஞ்சினால் முகத்தில் தடவி கழுவாமல் அப்படியே காயவைக்கவும்.

சோப் இல்லாமல் முகத்தைச் சுத்தப்படுத்த பூந்திக்காய் 10, 1 லிற்றர் தண்ணீர் இரண்டையும் கொதிக்கவிடவும். நுரையாக வரும்போது அடுப்பை அணைத்துவிடவும். பின்பு பூந்திக்காயை நன்றாக மசித்து அந்த நீரை வடிகட்டி முகத்தைக் கழுவினால் முகம் பளிச்சிடும். இந்த நீரை மூன்று நாள் வரையிலும் பயன்படுத்தலாம்.



பனிக்காலத்தில் முகத்தின் சொரசொரப்பு நீங்கி முகம் மென்மையாக :-

2 கரண்டி காய்ச்சாத பாலை முகத்தில் தடவி அரை மணி நேரம் ஊறிய பிறகு குளிர்ந்த நீரால் துடைக்கவும்.

1 தேக்கரண்டி தேன், 1 தேக்கரண்டி கிளிசரின் கலந்து பத்து நிமிடம் ஊறிய பிறகு கழுவலாம்.

2 பேரிச்சம் பழங்களை 4 தேக்கரண்டி வெந்நீரில் அரை மணி நேரம் ஊறவைத்து பேஸ்ட்டாக்கவும். அதில் மூன்று துளிகள் தேன் கலந்து முகம் முழுவதும் பூசவும். அரை மணி நேரம் கழித்து குளிர்ந்த நீரில் துடைத்து எடுக்கவும்.

1 தேக்கரண்டி சூரியகாந்தி எண்ணெயை கையில் சூடுபறக்கத் தேய்த்து முகம் மற்றும் கழுத்துப் பகுதியில் நன்றாகத் தேய்க்கவும். பத்து நிமிடம் மசாஜ் செய்து சுத்தமான ஈரத் துணியால் துடைக்கவும்.

2 தேக்கரண்டி கரட் சாறுடன் 2 தேக்கரண்டி உருளைக்கிழங்குச் சாறைக் கலந்து முகத்தில் தடவி பத்து நிமிடம் ஊறிய பிறகு குளிர்ந்த நீரில் கழுவவும்.

1 தேக்கரண்டி அப்பிள் சாறுடன் அரை தேக்கரண்டி முட்டையின் மஞ்சள் கரு. 1 தேக்கரண்டி தேன் கலந்து முகத்தில் பூசி 10 நிமிடத்தில் முகத்தை கழுவவும்.

***ஆவி பிடித்தல் :***

மாதம் இரண்டு முறை முகத்துக்கு ஆவி பிடித்தால் மாசு, மறு இல்லாமல் முகத்தை பார்த்துக்கொள்ளலாம். துளசி இலை, தேயிலைத்தூள், சாமந்திப் பூவின் இதழ்கள் தலா 1 தேக்கரண்டி எடுத்து 2 லிற்றர் வெந்நீரில் போடவும்.

**தொடரும்....**

## சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது* **-ஷோபா-**

### மல்டி பால் பாயசம்

தேவையான பொருட்கள்:

பால் - ஒரு லீற்றர்
சோயா - 150 கிறாம்
உளுந்து - 150 கிறாம்
பாதாம் பருப்பு - 50 கிறாம்
ஏலக்காய் - 6 (தூள் செய்து வைக்கவும்)
தேங்காய்ப் பால் - 2 தம்ளர்,
வெல்லம் - தேவையான அளவு (சிறிது தண்ணீர் சேர்த்து மண் இல்லாமல் வடி கட்டி வைக்கவும்)

**செய்முறை :**

சோயாவை - 6 மணி நேரம் ஊற வைக்கவும். உளுந்து சிறிது நேரத்தில் ஊறிவிடும். பாதாம் பருப்பு - நன்கு ஊறவைக்கவும். அனைத்தையும் தனித்தனியாக அரைத்து எடுக்கவும்.

1. அரைத்த சோயா விழுதைப் பிழிந்து பால் எடுத்து, மீண்டும் வரும் சக்கையில் சிறிது தண்ணீர் சேர்த்துப் பால் எடுத்து வைத்துக்கொள்ளவும். (எஞ்சியிருப்பது சிறிது மட்டுமே. இதைச் சேர்க்கக் கூடாது)
2. அரைத்த உளுந்தை கட்டியில்லாமல் பாலில் கரைக்கவும்.
3. சோயா பால், உளுந்து சேர்த்த பால், அரைத்த பாதாம் விழுது அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்து கட்டிபடாமல் அடுப்பில் வைத்துக் காய்ச்சவும். நன்கு கொதிக்க விடவும். (அடிப்பிடித்து விடாமல் அருகில் நின்று காய்ச்சவும்) கொதித்த பாலில் வெல்லம் சேர்த்து மீண்டும் ஒருமுறை கொதிக்க வைத்து இறக்கவும். இப்பொழுது தேங்காய்ப் பால் சேர்த்து, ஏலப்பொடி தூவவும். அருமையான இந்தப் பால் குடிப்பதனால் பெண்களுக்கும், வளரும் குழந்தைகளுக்கும், அனைவருக்கும் சிறந்த சக்தியைக் கொடுக்கக்கூடியது. இடுப்பு வலி வராமல் தடுக்கும். முடிவளர்ச்சியை அதிகப்படுத்தும். (வீணான சக்கையைக் காயவைத்து செடிக்குப் போடவும்.) (வெல்லம் சேர்க்கக் கூடாது என்பவர்கள் உப்பு சிறிது, மிளகுத்தூள் சிறிது, சீரகத் தூள் சிறிது சேர்த்துச் சாப்பிடவும்). இது உடலுக்கு மிகவும் நல்லது.

## நலமாக வாழ்வோம்

# உட்கட்டாசனம்

நாற்காலியை ஒத்திருப்பதால் அந்த பெயர், கற்பனை நாற்காலி ஆசனம்.


உட்கட்டாசனமும் ஐந்து மைல் நடையும்

இப்போது சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை காலை வேளைகளில் நடப்பதைப் பார்க்கலாம். இது நகரங்களில் இப்போது அதிகமாகப் பார்க்கலாம். நல்ல பழக்கம்தான். ஆனால், எல்லோராலும் தினம் தொடர்ந்து எல்லா நாட்களிலும் நடக்க முடியாது. காரணம் நிறையவே இருக்கிறது.

இரவு வெகு நேரம் கழித்துப் படுக்கைக்குச் சென்றிருக்கலாம். மழை அல்லது பனி பெய்யலாம். காலையில் சீக்கிரம் எழுந்து காரியமாக வெளியில் செல்ல வேண்டி வரலாம். விடியும் நேரம் நடப்பதால் தெருவில் நாய் தொல்லைகள். ஆரம்பத்தில் இருக்கும் ஆர்வம் சிறிது சிறிதாகக் குறைந்து ஆர்வம் இல்லாமல் போகலாம்.

இந்தத் தொந்தரவுகள் எல்லாம் இல்லாமல் நடையின் முழுப் பலனையும் அடைய யோகிகள் நமக்கு வழி சொல்லியுள்ளார்கள்.

சாதாரணமாக 6 மணி நேரம் உட்கார்ந்து தொடர்ந்து வேலை செய்தாலே நம்மவர்களுக்கு மூலரோகம் வந்துவிடுகிறது. ஆனால், பல நாட்கள்



ஒரே இடத்தில் அமர்ந்து தவம் செய்யும் யோகிகளுக்கு மூலரோகம் தாக்குவதில்லை, ஏன்? எல்லாம் யோகாசனங்களின் மகிமையே!

அவர்கள் நம்மவர்கள் மாதிரி மேசை நாற்காலி போட்டுக்கொண்டு அதில் அமர்ந்து தவம் இருப்பதில்லை ஆசன நிலைகளிலேயே இருந்து தவம் செய்யும் காட்சிகளைக் கல்வெட்டுகளில் இன்றும் கண்டு வருகின்றோம்.

உட்கட்டாசனம் செய்வதால் ஏற்படும் பலன்கள் :

1. தோள் பட்டைகளில் ஏற்படும் இறுக்கத்தைப் போக்கும்.
2. கால்களில் ஏற்பட்டுள்ள குறைகளை நிவர்த்தி செய்து வலிமையைத் தரும்.
3. தட்டையான பாதத்தைச் சரி செய்கிறது.
4. உதரவிதானம் மேல் நோக்கி உயர்த்தப்படுவதால் இருதயம் வலிமை பெறுகிறது.
5. நுரையீரல் நன்கு விரிந்து சுருங்குவதால் ஆஸ்துமா நோய்க்கு அதிக பலனைத் தரும்.
6. மூட்டு வலி, இடுப்பு வலி ஆகியவற்றைப் போக்கி அதன் செயல் திறனை அதிகரிக்கும்.
7. மேற்கண்ட பலன்கள் 5 மைல்கள் தொடர்ந்த நடையின் மூலமே கிடைக்கும். இவை அனைத்தும் இந்த ஆசனம் செய்வதால் கிடைத்து விடுகிறது.
8. கால்கள் போதிய இரத்த ஓட்டம் பெற்று பாதங்கள் குளிர்ச்சியாவதைத் தடுக்கிறது.
9. இடது வலது கால்களில் சமஅளவு உடல் பாரம் செலுத்தப்படுவதால் நரம்பு மண்டலம் சமப்படுகிறது.

செய்முறை :

1. விரிப்பின் மீது இரண்டு பாதங்களையும் ஒன்று சேர்த்து வைத்து நிற்கவும்.
2. கைகளை பக்கவாட்டில் கொண்டு வந்து தலைக்கு மேல் நமஸ்காரம் செய்து, கைமுட்டிகளை வளைக்காமல் வைக்கவும்.
3. குதிக்காலை உயர்த்தாமல், கால் முட்டிகளைப் பிரிக்காமல் அப்படியே ஒரு நாற்காலியில் உட்காருவது போல் முதுகுத் தண்டை நேராக வைத்து முன்னால் குனியாமல் பூமியை நோக்கிக் கீழே வரவும்.
4. ஒரு குறிப்பிட்ட நிலைக்கு மேல் குதிக்காலைத் தூக்க வேண்டி வரும் அல்லது கால் முட்டியைப் பிரிக்க வேண்டி வரும். அப்போது அப்படியே அதே நிலையில் இருந்து 15 எண்ணிக்கை எண்ணவும்.
5. எழுந்து நின்ற நிலைக்கு வந்து அப்படியே சிறிது ஓய்வு எடுக்கவும். திரும்பவும் மறுமுறை 15 எண்ணிக்கைகள் செய்யவும். இப்படி 5 முறை செய்ய வேண்டும்.

குறிப்புகள் :

1. 3 மாதம் தொடர்ந்த பயிற்சிக்குப் பிறகே படத்திலுள்ளபடி செய்ய வரும். தொடர்ந்து முயற்சிக்கவும்.
2. மூச்சை அடக்கக் கூடாது. சாதாரண மூச்சு.
3. கண்களை மூடக் கூடாது. நேரே ஒரு பொருளைப் பார்க்கவும்.

**யோகா தொடரும்......**

அதில் 'ஜனநாயகம் வெல்க, புரட்சி ஓங்குக. சர்வாதிகார ஆட்சி ஒழிக' என்று மேலே தடித்த எழுத்தில் எழுதியிருக்க,

கீழே பல வட இந்திய நகரங்களில் எத்தனை பேர் சத்தியாக்கிரகம் செய்து கைதானார்கள்,

என்னென்ன ஊர்களில் என்னென்ன அக்கிரமங்கள் நடந்தன என்பதையெல்லாம் குறிக்கப்பட்டிருந்தது.

ஒரு தினசரி பேப்பர் மாதிரி.

சிலர் அந்தத் தாள்களை எதிர்பார்த்தே வாங்கிக்கொண்டு போனார்கள். அவனை நன்றியோடும், பெருமிதத்தோடும் பார்த்தார்கள்.

பொலிஸ் யாராவது வந்தால், தூரத்திலிருந்து அந்த யுவன் சிக்னல் கொடுத்தான். குருவும் விநியோகத்தை நிறுத்திக்கொண்டான்.

அன்று விநியோகம் முடிந்த பிறகு, ஒரு காப்பிக்காக கியோஸ்க் அருகில் போனார்கள்.

"ஸார், எனக்கு ஒரு பிரச்சினை" என்றான் குரு.

"சொல்லுங்க!"

குரு தயங்கினான்.

யுவன் உடனே, "எதை வேண்டுமானாலும் சொல்லப்பா. நான் ரகசியக்காரன்" என்றான்.

"என்னை ஒரு கொலைக் கேஸ்லே சம்பந்தப்படுத்தறாங்க. வேணும்னு பொலிஸ் இதைச் செய்யறாங்க. உண்மைக் குற்றவாளி தப்பிச்சிக்கிட்டுப் போயிட்டான். என்னை அவங்க துன்புறுத்தாம இருக்க வழி ஏதாவது இருக்கா?"

யுவன் சிரித்தான்.

"அதுக்குத்தானே போராடறோம். சர்வாதிகாரம் இருக்கக் கூடாது. இருந்தா போலிஸ் மட்டுமில்லே, எல்லா அரசாங்க உத்தியோகஸ்தர்களும் சர்வாதிகாரிகளா மாறிவிடுவாங்க. ஜனங்க அவதிப்படுவாங்க. தனி மனிதர் சுதந்திரம் வேணும்கிறதுக்காகத்தான் இந்த இரகசிய நடவடிக்கை நடத்தறோம். உன் பிரச்சினையும் இதிலே அடங்கியிருக்கு" என்று சொல்லி காப்பியை ஒரு மடக்கில் குடித்தான்.



பிறகு நாக்கால் உதட்டைச் சுற்றிக் கொண்டு, "உனக்கு ஏதாவது உதவி வேணுமின்னா அமர்நாத் இருக்காரு அட்வகேட், நான் அனுப்பிச்சேன்னு சொல்லு."

இந்த நகருக்கு வரும்போது அவன் பெரிதும் சலித்திருந்தான். வாழ்க்கை அநாவசியமாய் அவனிடமிருந்து வழுவி விட்டதை நினைத்தான். அது பெரிய துக்கம். அதனால் நலிந்து, மெலிந்து, நடைப்பிணம் ஆகிவிட்டான். வாழ வேணும் என்று குடிசைக்காரி சொன்னது நினைவுக்கு வந்தது. வாழ எங்கே வழி இருக்கிறது?

முனிசிபல் நகரில் வந்த மூன்றாம் நாள் அந்த யுவனுடன் பழக்கம்.

"நண்பா! எனக்கு உதவி செய்வாயா" என்று தூய தமிழில் பேசினான். "துண்டுப் பிரசுரங்களை அங்கங்கே போய் வெவ்வேறு நபர்களிடம் கட்டுக்கட்டாகக் கொடுக்க வேண்டும். மக்களிடை விநியோகிக்கவும் வேண்டும். தினமும் நாலு ரூபாய் கொடுத்தார்கள். தினசரி எப்படியோ ஓட்ட முடிகிறது. எல்லோரும் சந்தோசமா வாழணுங்க!"

அட்வகேட் அமர்நாத் முதல் மாடியில் இருந்தார்.

ஐம்பதானவர். 'திக்' கண்ணாடி போட்டிருந்தார். வேட்டி கட்டியிருந்தார்.

அறையில் பழைய தேசியமும் சுத்தத் தியாகமும் மணந்துகொண்டிருந்தன.




ஒரு நூல் சிட்டம் கழுத்தில் தொங்க, காந்திஜி உட்கார்ந்திருந்தார். நேதாஜி மிலிடரி உடையில் எங்கேயோ பார்த்து ஸல்யூட் பண்ணிக்கொண்டிருந்தார்.

பருமனான லா புத்தகங்கள் நாலு திசைகளிலும் சுவர் வைத்திருந்தன.

"நான் என்ன செய்ய முடியும்?" கையை விரித்தார். தேசத்தையே கேட்டார் போல் இருந்தது.

தொடங்கினார்:

"உன் கேஸ் கேட்டா பரிதாபமா இருக்கு! பழி ஓரிடம், பாவம் ஓரிடம்! அந்தப் பயங்கரவாதியைப் பிடிக்கத் துப்பில்லை. உன்னை விரட்டுகிறார்கள். நீ நியாயத்துக்குப் போராடணும்னு பார்க்கிறே! பொலிஸுக்கு விஷயத்தைப் புரிய வைக்கணும்னு பார்க்கிறே! அரெஸ்ட் ஆனா பெய்ல்ல வரணும்னு பார்க்கிறே! பாடுபட்டாவது நிரபராதின்னு நிரூபிக்கப் பார்க்கிறே!

இதெல்லாம் நடக்கும்! எப்போ நடக்கும்! நாட்டிலே அரசியல் அமைப்பு பாதிக்கப்படாம இருந்து, கோர்ட் கீர்ட்டெல்லாம் ஒழுங்கா நடந்து, அவங்கவங்க மனசைத் திறந்து தங்கள் கருத்துக்களைச் சொல்லலாம்னு உரிமை இருந்த காலத்திலே நடக்கும். எல்லாம் பறிபோச்சு! தனி மனிதன் சுதந்திரம் போச்சு. அரசியல் அமைப்பிலே ஷரத்து 14, 21, 22-ஐ யெல்லாம் தூக்கிட்டாங்க! அரெஸ்ட் பண்ணினா கேட்க நாதி கிடையாது. உள்ளே தள்ளினா தட்டிப்பேச ஆளும் கிடையாது. பத்திரிகையும் கிடையாது. நாடே போச்சு போ!"

"அவனுக்குக் குழப்பமாக இருந்தது. அவர் சொல்வதெல்லாம் புரியுமா தெரியவில்லை. அவன் பிரச்சினை ஒன்றே ஒன்றுதான்! பொலிஸ் அவனைத் துரத்தி வருவது தப்பு! குற்றம் செய்தவன் அவன் அல்ல! அவர்கள் அவனைத் தொடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். வழி இருக்கிறதா?

"உன் கேஸ் முதல்லே மிசாவிலே போயிடும். உள்ளே கொண்டு தள்ளிடுவான்.

நீ சொல்றதை அப்படியே நம்பிடுவாங்கன்னு நிச்சயமா சொல்ல முடியாது. ஒருவேளை தகுந்த ருசுவோடு நீ உன்னைக் குற்றவாளியில்லைன்னு நிரூபிக்க முடியல்லேன்னு வச்சுக்கோ! உன் கதி என்ன? சாதாரண காலமா இருந்தா என்னை மாதிரி வக்கீல் வாதாடி கேஸை உடைச்சுப் போட்டுடலாம். இப்போ அது நடக்காதுங்கறேன். உன்னை ஆயுசுவரை ஜெயில்லே போட்டாலும் கேள்வி கேட்பான் கிடையாது. அங்கேயே கொன்னு போட்டாலும் கேள்வி கேட்பவன் கிடையாது. இன்.'பாக்ட் சிறைச்சாலைகள்லே என்னெல்லாமோ நடக்குதுன்னு கேள்விப்படறேன். ஆட்களின் அட்ரஸ்களே தெரியறதில்லை."

அப்போதும் புரிந்துகொள்ள முடியவில்லை. அவர் சொல்லும் அரசியல், சட்ட நுணுக்கங்கள் அவனுக்குத் தெரியாது. ஒன்று மட்டும் தெரிந்தது. அரசியலில் எமர்ஜென்ஸி மூலம் நடந்த மாறுதல்கள் அவனைப் போன்ற சாதாரண மனிதர்களின் சுதந்திரத்தைப் பாதித்துவிட்டது. சட்ட உரிமைகளைப் பாதித்துவிட்டது.

இப்போதுதான் ஏன் பலர் பல இடங்களில் அரசாங்கத்துக்கு எதிராகத் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து வருகிறார்கள் என்று தெரிந்தது.

விநியோகம் முடிந்து திரும்பும் இரவு!

வழியில் பொலிசுக்காக ஒரு சந்துக்குள் திடீரென்று திரும்பினான். நடமாட்டமான சந்து இரண்டு பஜார்களுக்குமிடையே குறுக்கு வழி.

அணைந்திருந்த விளக்குக் கம்பம் சௌகரியமாக இருந்தது.

அக்கம்பத்தை ஒண்ணரைக் கண்ணால் பார்த்து நிற்கும்போது,

யாரோ அவன் மீது கை வைத்தார்கள்.

முற்றிலும் புதுசானவன். 'டீக்'காக உடை பண்ணி, 'டீக்'காக இருந்தான். லாண்டிரியிலிருந்து ட்ரை வாஷில் வந்தது போலிருந்தான்.

ஒரு வேளை பாண்டித் தெரு பிராண்டோ! அவர்கள்தான் இப்படி டீக்காக.....

"நேரா என்னோட வந்துடு. விவகாரம் வச்சுக்காதே!"

"யார் நீ?"

"தெரிய வேணாம்."

"எங்கே வரணும்?"

"பின்னோட வா! அங்கே இங்கே போகப் பார்த்தியானா கூச்சல் போடுவேன்."

விஷயம் தெரிந்தவன் போலிருந்தது. எவ்வளவு விஷயம் தெரியும்! எவ்வளவு தூரத்திற்குத் தெரியும்?

தப்ப வழியில்லை.

சந்தில் ஒரு வீடு! ஐந்தாறு பெயர்ப் பலகைகள். அறைகள் பலவும் பூட்டப்பட்டுக் கிடக்க, மனிதர் இல்லாமல் வீடே ஒழிந்து கிடந்தது.

குறுகலான நடைக்குள் நடந்து, ஒரு கதவுமுன் பஸ்ஸரை அழுத்தி, தவம் இருந்து, அது திறந்ததும், அவனைப் பார்த்து,

"மன்னிக்கணும் ஸார்! கொடுரமா இருந்துட்டோம். நான் வரேன்" என்று சொல்லி,

அவனை உள்ளே அழுத்தி, வெளியிலிருந்து கதவை அடைத்துக் கொண்டான்.

**(துரோகம் துரத்தும்......)**

எழுதுவது
**புஷ்பா தங்கதுரை**




# இன்ப அதிர்ச்சி!

**கடந்த ஜூன் மாதம் கியூட்டோ நகரில் நடந்த மிஸ் யுனிவர்ஸ் உலக அழகிப் போட்டியில் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ஜெனிபர் ஹக்கின்ஸ் பட்டத்தைத் தட்டிச் சென்றார். அவர் நேற்று அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நடைபெற்ற பேஷன் ஷோவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். அப்போது பார்வையாளர்களைப் பரவசப்படுத்த மற்ற அழகிகளோடு உலக அழகி ஜெனிபர் ஹக்கின்ஸும் மேடையில் பூனை நடை பயின்றார். அவர் ஒயிலாக நடந்து வந்தபோது எதிர்பாராத விதமாக அவரது பேஷன் பாவாடை அவிழ்ந்து கீழே விழுந்தது. இதனால் வெட்கத்தில் கூனிக்குறுகிப்போன உலக அழகி, முன்னும், பின்னும் கைகளால் பொத்தி மறைத்தவாறு மேடையை விட்டு ஓடினார். அந்த திக், திக் காட்சிகளைப் படத்தில் காணலாம்.**

# அழகுக்கு அழகு!

**இத்தாலி நாட்டின் வெனிஸ் நகரில் எய்ட்ஸ் குறித்த சினிமா திரைப்பட விழா நடந்து வருகிறது. இதில் நேற்று அமெரிக்க நடிகை ஸ்கார்லெட் ஜோகன்சன் கலந்துகொண்டார். இந்த விழாவில் எய்ட்ஸ் ஆராய்ச்சி நிதிக்காக 19 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பல்கேரிய ஸ்டைல் நெக்லஸ் ஒன்று ஏலம் விடப்பட இருக்கிறது. நடிகை ஸ்கார்லெட் ஜோகன்சன் நேற்று அந்த நெக்லஸை அணிந்து நிருபர்களுக்குப் பேட்டி அளித்தார். அழகுக்கு அழகு சேர்க்கும் வகையில் நடிகையின் கழுத்தில் நெக்லஸ் ஜொலிப்பதைப் படத்தில் காணலாம்.**





# அதிர்ந்த பிகினி

**பெண்களுக்கான டூ பீஸ் உள்ளாடையை பிகினி என்று அழைக்கின்றனர். இந்தப் பெயருக்குப் பின்னால் ஒரு வரலாறு இருக்கிறது. உடைபடாத சோவியத் யூனியன் ரஷ்யாவில் முதன்முறையாக பிகினி என்ற இடத்தில் அணுகுண்டு சோதனை நடத்தப்பட்டது. பூமியில் பள்ளம் தோண்டி அதன் அடியில் அணு குண்டைப் புதைத்து வெடிக்கச் செய்தனர். அப்போது அந்த இடம் முழுவதும் பெரும் பூகம்பம் ஏற்பட்டது போன்று பயங்கரமாக அதிர்ந்து புழுதிக் காடாகக் காட்சி அளித்தது. அந்தக் காட்சியை நேரில் பார்த்தவர்களின் லப், டப் சத்தம் சில நிமிடங்கள் நின்று துடித்தது. உள்ளாடையில் தோன்றும் பெண்களும் ஆண்களின் இதயத்தில் அதே போன்ற ஒரு அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றனராம். எனவே டூ பீஸ் உள்ளாடைக்கு பிகினி என்ற பெயரை வைத்துவிட்டனர். படத்தில் கனடா தலைநகர் ரொறன்ரோவில் நடந்த ஷோவில் ஒரு அழகி பிகினி உடையில் பார்வையாளர்களைக் கதிகலங்க வைத்த காட்சியைக் காணலாம்.**

26



# ஒரு பெண்ணின் வாழும் வரலாறு

## ஹிலாரி கிளிண்டன் எழுதுகிறார்

மேலும் வெலஷ்லி (Wellesly) பல்கலைக்கழகத்தில் கற்கின்ற போது எனது நண்பிகள் குறிப்பாக (விடுதி நண்பிகள்) எல்லோருமே சிறந்த ஆளுமை மிக்கவர்களாகக் காணப்பட்டதுடன். சிந்தனா ரீதியான நுட்பமும் அவர்களிடம் வெகுவாக காணப்பட்டது. எனது நண்பிகளில் குறிப்பிடத்தக்க இருவரை நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அவர்கள் ஜோஹன்னா பிரன்ஸன் (Johana Branson) கானாஸ் போன்றோராவார் ஜோஹன்னா பிரன்ஸன் லோவ்றென்சிலிருந்து பல்கலைக்கழக கற்றலிற்காக வந்திருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது; இவர் மேற்கத்தேய நடனமாடுவதில் (Western Dance) நன்கு தேர்ச்சி பெற்றிருந்தாள் - அத்துடன் கானாஸ் சித்திரம் வரைதலில் தேர்ச்சி பெற்றவளாக இருந்தாள். எமது கல்லூரியில் நாம் தங்கியிருந்து படித்த விடுதியின் (Hostel)ன் பெயர் "STONE DEVIS" என்பதாகும். எமது விடுதி அறையில் நாம் தங்கியிருக்கும்பொழுது ஒருநாள் விஷேட கலந்துரையாடல் ஒன்று



எம்மிடையே நடைபெற்றது. கலந்துரையாடல் என்பதை விட அதை ஒரு விஷேட ஆய்வரங்கம் என்றே கூறலாம். ஏனெனில் அவ்வளவுக்கு ஆழமாக சில விடயங்களைப்பற்றி நாம். கலந்தாலோசித்தோம். அந்த விடயங்களைப்பற்றி அதாவது நானும் ஜொஹன்னா பிரன்ஸன். கானாஸ். ஜின்னட் பெறலஸ். ஜான் திரிக்பம் ஆகிய ஐந்து பேருமே அந்த அறையில் இருந்தவர்கள். அந்த நான்கு தோழிகளுடனேயே நானும் இணைந்து கொண்டு இவ்வாறு வாதப்பிரதிவாதங்களிலும் மற்றும். ஆய்வரங்குபோல் தரமான நல்ல விடயங்களைப்பற்றி நாம் அனைவரும் ஒன்றாக எமது விடுதி அறையில் இருந்து இவ்வாறான பிரயோசனமான கலந்துரையாடலை செய்து எமது அறிவுக்கு உரம் சேர்த்து. மிகுந்த உத்வேகத்துடன் எமது உயர் கல்வியை நாம் தொடர்ந்து கொண்டிருந்தோம். ஒருநாள் நடைபெற்ற எமது கலந்துரையாடலில் Johanna என்கின்ற தோழி "புரண்ட் லைன்" (Frontline) சஞ்சிகையில் "EELLE SLEY" பல்கலைக்கழகத்தின் "First Lady" ஆக தெரிவுசெய்யப்படப் போவது யார் என்பதை தெளிவுபடுத்த முற்பட்டார்.

மேலும் ஒரு வரலாற்று உண்மையை இங்கு நான் கட்டாயம் நினைவுபடுத்தித்தான் ஆக்வேண்டும்; மொடலைன் அல்பிரைட் எனது கணவர் அமெரிக்காவின் ஜனாதிபதியாகவிருந்த காலப்பகுதியில் ஐக்கிய நாடுகள் சபையின் அமெரிக்கத் தூதுவராகவும், அமெரிக்காவின் பிரதம செயலாளராகவும் பணியாற்றியவர் என்பதை நான்' இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும். மொடலைன் அல்பிரைட் தனது உயர் கல்வியினை நான் கல்வி கற்ற வெலஷ்லி பல்கலைக்கழகத்தில் எனக்கு பத்து வருடங்களுக்கு முன் கற்று வெளியேறியவர் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் கல்வி கற்ற காலங்களுக்கும் எனது பல்கலைக்கழக காலத்திற்கும் இடைப்பட்டதான காலப்பகுதியில் பல்கலைக்கழகத்தின் வளர்ச் சியையும், முன்னேற்றத்தினையும் பற்றி நாங்கள் இருவரும் சந்திக்கும் போதெல்லாம் அளவளாவிக் கொள்வோம். பல்கலைக்கழக வாழ்வு பற்றியும்; அந்த மறக்கமுடியாத நாட்கள் எம்மில் தினித்துள்ள பசுமை நிறைந்த ஞாபகங்கள் பற்றி நினைவூட்டுவதையும்: அவரது கடந்த கால அனுபவங்கள் பற்றியெல்லாம் உரையாடும் சந்தர்ப்பங்களில் நாங்கள் லயித்துப்போய் உரையாடிக் கொண்டிருப்பது தான் எங்களது இயல்பாகவிருந்தது.

உண்மையில் மொடலைன் அல்பிரைட் போன்ற பல பெண்களை இவ் வெலஷ்லி பல்கலைக்கழகம் சிறந்த கல்விமான்களாக உருவாக்கி அமெரிக்காவின் அரச சேவைகளில் பணியாற்ற வைத்திருக்கிறது என்றால் இப்பல்கலைக்கழகம் அமெரிக்க வரலாற்றில் முதன்மைப்படுத்தப்பட வேண்டிய தொன்றாகும்.

மொடலைன் அப்பிரைட் போன்றே நானும் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கின்ற காலப்பகுதியில் மிக சுறுசுறுப்பாகவும் அவதானமாகவும் கல்வி கற்றதன் விளைவாக அப்பல்கலைக்கழகத்தில் பெயர் பெற்ற ஒரு மாணவியாக என்னால் திகழ முடிந்தது. அப்பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கை தொடக்கம் எல்லா நடவடிக்கைகளிலும் எனது ஆளுமை வெளிப்பாடுகளை காட்டியதன் மூலம் அப்பல்கலைக்கழகத்தில் உள்ள பேராசிரியர்களாலும், விரிவுரையாளர்களாலும் நான் போற்றப்பட்டேன். அது எனக்கு கடவுள் கொடுத்த நல்லதொரு வரப்பிரசாதமாகவே நான் என்றைக்கும் கருதுவதுண்டு.

வெலஷ்லி (Wellesly) பல்கலைக்கழகத்தில் உயர் கல்வி கற்று வெளியேறிய பெண்கள் தற்பொழுது அமெரிக்காவின் நிர்வாகத்துறையிலும். மேலும் அமெரிக்க மக்களின் முன்னேற்றத்திலும் பெரும் பங்காற்றுகின்றார்கள் என்பதை நினைக்கும்போது நான் மன மகிழ்வடைகின்றேன். அப்பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற நானும் அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியின் மனைவியாகவும். அமெரிக்காவின் முதல பெண்மணியாகவும் இருந்து அமெரிக்க மக்களுக்கு சேவை செய்யக்கிடைத்தமையே நான் பெரும் பாக்கியமாகவே கருதுகின்றேன்.



(இன்னும் வரும்...)

---

## பிளரியெட் (BLERIOT) ஆங்கிலக்கால்வாயைக் கடந்து பறந்த ஒரு பிரசித்தி பெற்ற விமானி

பிரான்ஸ் நாட்டின் பிரசித்திபெற்ற விமானியான. லூயிஸ் பிளரியெட் (LOUIS BLERIOT) என்பவர் சுமார் 43 நிமிடங்கள் ஆங்கிலக்கால்வாயின் மேலால் தனது விமானத்தை ஓட்டி சாதனை படைத்தார்; இந்த சாதனையை (25-07-1909) 25ம் திகதி ஜுலை மாதம் 1909ம் ஆண்டு அவர் நிகழ்த்தினார். அவர் தனது விமானத்தை செலுத்த ஆரம்பிக்கும் பொழுது எடுக்கப்பட்ட புகைப்படத்தையே இங்கு காண்கிறீர்கள். அவர் ஓட்டிய அந்த விமானம் "CALAIS" எனுமிடத்திலிருந்து தனது பயணத்தை ஆரம்பித்து. "DOVER CASTLE" எனும் இடத்தில் தரை இறங்கியது.



இந்த முதலாவது சாதனையை நிகழ்த்திய "லூயிஸ் பிளரியெட்"டுக்கு (LOUIS BLERIOT) ஆயிரம் பவுண் (Thousand pound) பரிசாக வழங்கப்பட்டது. இந்தப்பரிசை "டெயிலி மெயில்" (Daily Mail) வழங்கியது.

---

*இருபதாம் நூற்றாண்டின் வரலாறு நமது கண்முன் உள்ளது. ஆனால் கடந்த பல நூற்றாண்டுகளின் வரலாற்றை நாம் காண முடியாதுள்ளது.*

*ஆனாலும், நம்மைக் கடந்து சென்ற 19ம் நூற்றாண்டு வரலாறு கண்ணீர் சிந்த வைப்பதும், அழகியதும், அரியதுமான படங்களினூடாக உங்கள் முன் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*ஒவ்வொரு படமும் ஒவ்வொரு கதையைக் கூறுவன. 19ம் நூற்றாண்டின் வரலாறானது முன்னெப்போதுமில்லாத வகையில் அதிக மாற்றங்களை சந்தித்தது. எல்லா மாற்றங்களும் இயல்பாக ஏற்பட்டதுமல்ல, அவற்றுள் சில யுத்தங்கள், எதிர்ப்புகளைத்தாண்டி நடந்துள்ளன. பல சாம்ராஜ்யங்கள் சிதைந்து, புதிய நாடுகள் உருவாகியுள்ளன. விஞ்ஞான, அறிவியல் மாற்றங்கள் ஏற்படுகின்றன. உலகம் மாறிக்கொண்டே வந்திருக்கிறது.*

*19ம் நூற்றாண்டு தொடக்கத்தில் உலகின் முழு நிலப்பரப்பில் ஐந்தில் ஒரு பகுதி பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் கீழிருந்தது. இப்போது? இப்படியான பல கதைகள்... இவைகளை நமது வாசகர்கள் தரிசிக்க ஒரு வாய்ப்பை தினமுரசு ஏற்படுத்துகிறது.*

---

## உலகப் புகழ்பெற்ற ரஷ்ய பாலே நடனத்தின் ஆரம்பவிழாவும் அதன் முதலாவது காட்சியும் 1909



உலகப் புகழ்பெற்ற ரஷ்யாவின் குழு நடனமான 'பாலே' நடனத்தின் முதலாவது அரங்கேற்ற விழா ரஷ்யாவில் நடைபெற்றது. அந்த விழா 1909ம் ஆண்டு மிக விமர்சையாக கொண்டாடப்பட்டது.

அந்த விழாவில் அரங்கேறறபபடட முதலாவது "ரஷ்ய பாலே" நடனக்காட்சியையே இப் படத்தில் காண்கிறீர்கள். இந்த "ரஷ்யா பாலே" நடனத்தை முதலாவதாக தயாரித்து மேடையில் அரங்கேற்றியவர் "செர்ஜி டியாகிலவ்" (SERGEI DIAGHILEV) என்கின்ற பிரசித்திபெற்ற ரஷ்யாவின் பாலே நடன இயக்குனராவர். இந்த நடனக் கலை உலகப்புகழ்பெற்ற. ரஷ்ய நடனத்தாரகைகளான "நிஜின்ஸ்கி" (NIJINSKY). மற்றும் அன்னா பவ்லோவா (ANNA PAVLOVA) ஆகியோர். தமது குழுவினருடன் கலந்து கொண்டனர். இந்த ரஷ்ய குழுநடனமான "பாலே நடனம்" கலையுலகில் மிகவுமே பாராட்டைப்பெற்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# மூட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## ஜே.ஆரின் சர்வகட்சி மாநாடு

1983ஆம் ஆண்டு ஜுலை மாதம் இருபதாம் திகதி "பயங்கரவாதம் சம்பந்தமான சர்வகட்சி மாநாடு" என்று கூறி ஒரு மாநாட்டை ஜெயவர்த்தனா நடத்தினார். இந்த மாநாடு நடைபெற்ற மறுதினம் அதாவது 21ஆம் திகதி கொழும்பிலுள்ள இலங்கை மன்றக் கல்லூரியில் புனிதம் திருச்செல்வம் ஞாபகார்த்தப் பேருரை இடம்பெற்றது. பேராசிரியர் கன்னாத் அபயசேகரா, 'பத்தினி வழிபாடு' என்ற தலைப்பில் இப் பேருரையை நிகழ்த்தினார். இப்பேருரையைக் கேட்க வந்திருந்த யாழ்.மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர் நடராசா, ஜெயவர்த்தனா பற்றிப் பத்திரிகையாளர் சபாரத்தினத்திடம் கூறிய விடயம் சுவாரஸ்யமானது. அவர் சொன்னார், "ஜெயவர்த்தனா தாமாகவே தமிழ் மக்களுக்கு எதனையும் வழங்கத் தயங்குகிறார். தம்மைச் சிங்களவர்களின் துரோகி யென்று மற்றவர்கள் குற்றஞ்சாட்டி விடுவார்களென்ற பயத்தின் காரணமாகவே அவர் இவ்வாறு நடந்து கொள்கிறார். இந்தத் தவறை ஜெயவர்த்தனா மட்டும் விடவில்லை. பொதுவாக சிங்களத் தலைமைத்துவம்




அனைத்துமே இத் தவறை விடுகிறது. தமிழ் மக்களுக்கு எதையாவது கொடுத்தால் தாம் அரசியல் ரீதியில் மட்டந்தட்டப்பட்டு விடுவோமென்று அவர்கள் பயப்படுகின்றனர்" என்று நடராசா ஜே.ஆர்.கூட்டிய சர்வ கட்சி மாநாடு குறித்துக் கூறும்போது கருத்துத் தெரிவித்தார்.

ஜே.ஆர். கூட்டிய சர்வகட்சி மாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணி பங்குபற்றவில்லை. சகல கட்சிகளுக்குமே அழைப்பு விடுக்கப்பட்டபோதிலும் ஐக்கிய தேசியக் கட்சியும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் மட்டுமே பங்குபற்றின. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, நவ சமசமாஜக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும் அவை மாநாட்டைப் பகிஷ்கரித்தன. தமிழர் விடுதலைக் கூட்டணி, மாநாட்டில் பங்குபற்றாமைக்கான காரணத்தைத் தெரிவித்திருந்தது. தமிழர் பிரச்சினைக்கான தீர்வு குறித்து ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஓர்

> **1982ஆம் ஆண்டு மே மாதம் சென்னை பாண்டிபசாரில் மோதிக்கொண்ட பிரபாகரனையும், உமாமகேஸ்வரனையும் இலங்கையிடம் கையளிக் குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை இந்தியா தட்டிக் கழித்திருந்தமை ஜே.ஆருக்குப் பெரும் சிக்கலாகி விட்டது. பிரபாகரன், உமா மகேஸ்வரன் போன்றோரை உயிருடனோ அல்லது பிணமாகவோ பிடித்துத் தருபவர்களுக்கு ஓர் இலட்சம் ரூபா சன்மானமாகத் தரப்படுமென்று இலங்கை அரசாங்கம் அறிவித்திருந்தது. இந்த நிலையில் சென்னையில் இருவரும் பிடிபட்டார்களென்ற செய்தி ஜெயவர்த்தனாவுக்கு தேனாக இனித்திருந்தது.**

இணக்கப்பாட்டுக்கு வருமென்றால் மட்டுமே பயன்கிட்டும். சுதந்திரக் கட்சி மாநாட்டில் பங்குபற்றுமென்றால் தமிழர் விடுதலைக் கூட்டணியும் பங்குபற்றுமென்று அது தெரிவித்திருந்தது. மேலும் பல விடயங்களை உள்ளடக்கிப் பேசுவதற்காக மீண்டும் சர்வகட்சி மாநாட்டைக் கூட்டுவதென்ற தீர்மானத்தோடு மாநாடு ஒத்திவைக்கப்பட்டது.

ஜுலை 22ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பிக்கள் எவரும் பங்குபற்றவில்லை. பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் முடிவடைந்து விட்டதால் பங்குபற்ற மாட்டோமென்று

*(அரசியல் தொடர்)*

அவர்கள் கூறினர். அன்றைய தினம் அவர்கள் மன்னாரில் நடைபெற்ற கட்சி மாநாட்டில் பங்குபற்றியிருந்தனர். தமிழர் விடுதலைக் கூட்டணி தனது நிலைப்பாட்டை கடுமையாக்கிக்கொண்ட இத்தருணத்தில் இலங்கை அரசாங்கம் பிரகடனப்படுத்தியிருந்த அவசரகாலச் சட்டவிதிகள் இந்தியாவை ஆத்திரமுறச் செய்தன. ஜுலை இன சங்காரம் ஆரம்பிப்பதற்குச் சில தினங்கள் முன்னதாக இலங்கை அரசு அவசரகாலச் சட்ட விதிகளைப் பிரகடனப்படுத்தியிருந்தது. இதன்படி வழமையான பிரேத பரிசோதனைகள், மரண விசாரணைகள் எதுவுமின்றிச் சடலங்களை அடக்கம் செய்யும் அதிகாரம் ஆயுதப் படைகளுக்கும் பொலிஸாருக்கும் வழங்கப்பட் டிருந்தது. எந்தத் தமிழனையும் சுட்டுக் கொன்றுவிட்டுப் பயங்கரவாதியெனக் கூறிப் பிரேத பரிசோதனையோ மரணவிசாரணையோ இல்லாமல் படையினரும் பொலிஸாரும் சடலங்களைப் புதைத்துவிட வழங்கப்பட்ட இந்த அதிகாரம், மிகப் பயங்கரமான சட்டவிதியாகும். அப்பட்டமான மனித உரிமை மீறலாகுமென தமிழர் விடுதலைக் கூட்டணி கண்டனம் தெரிவித்திருந்தது.

1982ஆம் ஆண்டு மே மாதம் சென்னை பாண்டிபசாரில் மோதிக்கொண்ட பிரபாகரனையும், உமா மகேஸ்வரனையும் இலங்கையிடம் கையளிக் குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை இந்தியா தட்டிக் கழித்திருந்தமை ஜே.ஆருக்குப் பெரும் சிக்கலாகி விட்டது. பிரபாகரன், உமா மகேஸ்வரன் போன்றோரை உயிருடனோ அல்லது பிணமாகவோ பிடித்துத் தருபவர்களுக்கு ஓர் இலட்சம் ரூபா சன்மானமாகத் தரப்படுமென்று இலங்கை அரசாங்கம் அறிவித்திருந்தது. இந்த நிலையில் சென்னையில் இருவரும் பிடிபட்டார்களென்ற செய்தி ஜெயவர்த்தனாவுக்கு தேனாக இனித்திருந்தது. இராஜதந்திர வழிமுறையூடாக இவர்களைப் பிடிப்பதற்கு இலங்கை அரசு எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்ததும் ஜே.ஆருக்குக் கோபத்தை மூட்டியிருக் கலாம். இதற்கிடையில் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த பிரபாகரன் தலைமறைவாகியமையும் வடக்கில் வன்செயல்கள் அதிகரித்தமையும் ஜே.ஆரை உசுப்பி விட்டிருந்தன.

இலங்கை அரசாங்கத்தின் கோரிக் கையைக் கேட்டவுடனேயேதான் உடனடியாகத் தமிழகத்துக்குச் சென்று அவர்களைக் கையளிக்கவேண்டா மென்று அப்போது ஆட்சியிலிருந்த கலைஞர் கருணாநிதியைக் கேட்டுக் கொண்டதாகச் செ.சந்திரகாசன் குறிப்பிட்டுள்ளார். தந்தை செல்வாவின் புதல்வர் தான் இந்த சந்திரகாசன். "தமிழீழப் போராட்டத்தில் கலைஞர்" என்ற தலைப்பில் சந்திரகாசன் 1989இல் எழுதிய கட்டுரையொன்றில் இதனைக் குறிப்பிட்டுள்ளார். "இந்திய சட்டப்படி அவர்களுக்கு என்ன தண்டனை வேண்டுமானாலும் கொடுங்கள். இலங்கை அரசிடம் மட்டும் ஒப்படைத்துவிடாதீர்கள்" என்று தான் கேட்டுக்

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

கொண்டதாக அவர் குறிப்பிடுகிறார். அக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு கலைஞர் உடனடியாகவே மத்திய அரசோடு தொடர்புகொண்டு செயலில் இறங்கினாரென்றும் சந்திரகாசன் குறிப்பிடுகிறார். அப்போது மட்டும் பிரபாகரனும், உமா மகேஸ்வரனும் இலங்கை அரசிடம் ஒப்படைப் பட்டிருந்தால் ஈழ விடுதலைப் போராட்டம் அன்றே முற்றுப் பெற்றிருக்கு மென்பது சந்திரகாசனின் கருத்து. "இலங்கைத் தமிழர்கள் ஒரு தேசிய இனம். சுய நிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள். அவர்களுக்குப் பின்னால் ஒன்பது கோடி தமிழர்கள் உள்ளனர். அவர்கள் காப்பாற்றப்பட வேண்டும்" என்று கோரி, ஒரு கோடி கையெழுத்துக் களைத் திரட்டி ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்பி வைத்தவர் கலைஞரென்றும் சந்திரகாசன் பாராட்டி யுள்ளார்.

1976ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31ஆம் திகதி அப்போது தமிழ்நாட்டில் ஆட்சியிலிருந்த கலைஞரின் அரசை, இந்திய மத்திய அரசு கலைத்தது. அப்போது மத்தியில் ஆட்சியிலிருந்தது, இந்திரா காங்கிரஸ். கலைஞரின் "தி.மு.க. மாநில அரசு மீது பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டே ஆட்சி கலைக்கப் பட்டது. தி.மு.க. அரசு இலங்கையைப் பிரிக்கவேண்டு மென்ற ஈழத் தமிழர் போராட்டத்துக்கு ஆதரவளிக் கின்றது" என்பது மத்திய அரசு முன் வைத்த முக்கிய குற்றச்சாட்டுகளில் ஒன்றாகும்.

இலங்கைத் தமிழர்களின் உரிமைகளைக் காப்பதற்காகத் தமிழகத்தில் இடம்பெற்ற பல்வேறு போராட்டங்களுக்குக் கலைஞர் தலைமை கொடுத்தா ரென்றும் அங்கே அதற்காக இருபதாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் சிறை சென்றார்களென்றும் சந்திரகாசன் அக் கட்டுரையில் பாராட்டுத் தெரிவித்துள்ளார். இதே சந்திரகாசனை மூன்று வருடங்கள் கழித்து இந்தியாவை விட்டு வெளியேறுமாறு இந்திய மத்திய அரசு உத்தரவிட்டமை மற்றொரு விடயம். 1985ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13ஆம் திகதி இந்த நாடு கடத்தல் உத்தரவு விடுக்கப்பட்டது. பின்னர் இந்த உத்தரவு வாபஸ் பெறப்பட்டது. இது குறித்துப் பின்னர் பார்ப்போம்.

(தொடர்ந்து வழியும்....)




வணக்கம்! வணக்கம்!! வணக்கம்!!!

ஒவ்வொரு நாளும் புதிய புதிய பிரச்சினைகள் தோற்றம் பெற்று எமக்குள் பல கேள்விகளையும் எழுப்பி விடைகளையும் தேடுவது இயல்புதான். அரசியல் மாற்றம் நிறைந்த போன.வார1982ஆம் ஆண்டு மே மாதம் சென்னை பாண்டிச்சேரியில் மோதிக்கொண்ட பிரபாகரனையும், உமாமகேஸ்வரனையும் இலங்கையிடம் கையளிக் குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை இந்தியா தட்டிக் கழித்திருந்தமை ஜே.ஆருக்குப் பெரும் சிக்கலாகி விட்டது. பிரபாகரன், உமா மகேஸ்வரன் போன்றோரை உயிருடனோ அல்லது பிணமாகவோ பிடித்துத் தருபவர்களுக்கு ஓர் இலட்சம் ரூபா சன்மானமாகத் தரப்படுமென்று இலங்கை அரசாங்கம் அறிவித்திருந்தது. இந்த நிலையில் சென்னையில் இருவரும் பிடிபட்டார்களென்ற செய்தி ஜெயவர்த்தனாவுக்கு தேனாக இனித்திருந்தது.ம் படுகொலைகள் இல்லாமற் போனது மனதுக்குக் கொஞ்சம் ஆறுதலளிக்கிறது. இந்தநிலைமையே தொடர வேண்டும் எனவும் விரும்புகிறோம்.

***சின் :-*** *ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு பெரும்பான்மையைக் காட்ட முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கையில் இ.தொ.கா. நிபந்தனையற்ற ஆதரவு தரப்போவதாகத் தெரிவித்திருக்கிறதே.*

**மன் :-** எப்பவோ நடந்திருக்க வேண்டிய விஷயம். இப்பவெண்டாலும் நடந்திருக்கேயெண்டு சந்தோசப் படுங்கோ. பெரும்பான்மை இல்லாத அரசோட பேச முடியாதெண்டு கப்ஸா விட்டுக்கொண்டிருக்கிற தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி.மாரை விட்வும் ஆறுமுகத்தாற்ர முடிவு வரவேற்கக் கூடியதுதான்.

***சின் :-*** *எங்கட திருட்டுக் குணங்களை உப்பிடி உடைக்கிறியளே.....! ஆகஸ்ட் 30ஆம் திகதி குருநகர் மீனவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்த உங்கட தம்பிமாரை எதிர்த்து, குருநகர் மக்கள் நடத்தின ஆர்ப்பாட்டம், கண்டனங்களைப் பற்றி என்ன நினைக்கிறீங்க....*

**மன் :-** அது ஒரு துன்பியல் சம்பவம், அது வெளியால தெரிய வந்தால் தம்பிமாருக்கு எதிராக தமிழ் மக்களே போராடினம் எண்டு சர்வதேசம் நினைச்சுப்போடும் எண்டு ஊடகக்காறங்களிட்டைச் சொல்லி மூடி மறைச்சுப் போட்டம். உம்மை மாதிரி விடாக் கொண்டங்கள் சிலபேர் தான் அதைப் பெருசு படுத்திரியள்.

அதைத்தான் தம்பி செம்மணன் தன்ர ஸ்டேட்மெண்டில இந்தப் போராட்டங்கள் இராணுவ புலனாய்வுப் பிரிவாலயும், தேச விரோதிகளாலையும்தான் நடத்தப்பட்டதெண்டும் இரண்டு மீனவ சங்கங்களுக்கு இடையிலான பிரச்சினையைத் தீர்க்கத்தான் சுட்டனாங்கள் எண்டுமெல்லே விளக்கமா சொன்னாவர். எங்கட தம்பிமாருக்கு எதிராக யாரும் இருமினாலும் உப்பிடித்தான் சொல்லுவம். என்ன செய்வியள்?

***சின் :-*** *சொல்லுவியள், சொல்லுவியள். போராட்டம் நடத்தின மக்களுக்குத் தெரியும் யார் போராடினதெண்டு. ஊடகக்காறங்களை விரட்டியிருக்கலாம், உண்மையான உணர்வுகளை மறைக்க ஏலாதுங்கோ. மீசையில மண்ணுங்கோ, ப்ளீஸ் தட்டிவிடுங்கோ.....*

*ஜனாதிபதி லண்டனுக்கு போயிட்டு வந்தவுடன சமாதான முயற்சிகள் தொடர்பாக புதிய நம்பிக்கைகளை தெரிவித்து வருகிறாரே...........*

**மன் :-** இடைக்கால நிர்வாகம் பற்றி மூன்று மாத காலம் அவகாசம் பற்றியெல்லாம் பேசுற அதேவேளை நோர்வேயின் நகர்வுகள் புதிய நம்பிக்கைகளைத் தரும் எண்டும் தெரிவிச்சிருக்கிறார். யுத்தம் ஒண்டை அரசு துவங்காது. புலிகளும் துவங்கும் நிலையிலயில்லை எண்டிருக்கிறார். மொத்தத்தில சர்வதேசத்தின்ர அழுத்தம் இரண்டுதரப்பையும் புஷ் பண்ணுது எண்டு மட்டும் தெரியுது.

***சின் :-*** *இதுக்கெல்லாம் புஷ் பண்ணிற சர்வதேசம் படுகொலைகளையும் வன்முறைகளையும் நிறுத்துங்கோ வெண்டு அழுத்தினமில்லையே.....ம்....இப்ப நடைமுறையிலிருக்கிறதாகக் கூறப்படுகிற புரிந்துணர்வு ஒப்பந்தம் இலங்கையின்ர இறைமைக்கும், சட்ட விதிமுறைகளுக்கும் எதிரானது எண்டு தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணைக்கு பிரதிவாதிகளான ரணில், பிரபா, மஹிந்த ஆகியோருக்கு முகவரியிடப்பட்ட அழைப்பாணைகள் தொடர்பில சின்ன ஜோக். அதாவது பிரபா ஓ...... சொறி, உங்கட தம்பியின்ர அழைப் பாணையை ரணில் ஐய்யாவின்ர முகவரிக்கு அனுப்பும்படி உத்தரவாமே.....*

**மன் :-** அதுதான் ஜோக் எண்டு நீரே சொல்லிவிட்டீரே...... ரணிலின்ர மேற்பார்த்து அல்லது முகவரிக்கு எண்டு எங்கட பத்திரிகைகள் எழுதியிருந்ததைப் பாத்து எனக்கும் சிரிப்புத்தான். உப்பிடி யெண்டால் எத்தனை தடவை தம்பி உவையளின்ர கோட்சுக்கு போயிருக்க வேணும். வடிவேலு சொல்லிற மாதிரி இது சின்னபிள்ளைத்தனமாயிருக்கே....

***சின் :-*** *அப்பிடியெண்டால் உங்கட தம்பிக்கு பல கேஸுகள் கிடப்பில கிடக்கெண்டு ஒத்துக்கொள்ளுறியள். இப்ப தெரியுது ஆள் ஏன் காட்டுக்குள்ளயே இருக்க விரும்புறார் எண்டு...அண்ண இது சும்மா ஜோக்,....ஹி......*

*ஆறுமுகன் தொண்டமான் அரசுக்கு ஆதரவு வழங்கினது தனக்கும் கட்சிக்கும் பெருங் கவலையா இருக்குதெண்டு ஜோசப் சிமிட்டியிருக்காரே.*

**மன் :-** இந்தக் கேள்விக்கும் சோத்து முதல் கேள்வியிலயே சொல்லிப்போட்டன். அரசியல் பலம் இருந்தா அதை அரசோட எப்பிடி பேரம் பேசிற சக்தியாக பாவிக்கிறது எண்டு அடிப்படையே தெரியாத உவங்கள் எப்பிடி எம்.பி.யர்னாங்கள் எண்டது உலகுக்கே தெரிஞ்ச கேவலமான விஷயம். இவங்களுக்கு உண்மையிலேயே சனத்தின்ர நிம்மதியான வாழ்வு முக்கியமெண்டால் அதே ஆதரவை அரசுக்கு அப்பவே குடுத்து சமாதானப் பேச்சை ஆரம்பிக்கச் சொல்லியிருக்கலாம். அதுமட்டுமில்லாம அமைச்சுப் பொறுப்புகளையுமெடுத்து சனத்தின்ர அன்றாடப் பிரச்சினை தீர வழியும் செய்திருக்கலாம்.

தமிழ் மக்கள் அரசியல் ரீதியாகவும் பேரம் பேசும் சக்தியாக வளர்ந்திருக்கினம் எண்டதை சர்வதேச சமூகத்துக்குக் காட்டியிருக்கலாம். இதெல்லாத்தையும் விட்டுப்போட்டு ஆறுமுகத்துக்கு கழுவிவிடப் போயிட்டாங்கள்.

***சின் :-*** *கூல் டவுன், கூல் டவுன்....ப்ளீஸ்..... ஒண்டுக்கும் உதவாதவங்கள் எண்டு தெரிஞ்சும் பதவி குடுத்து வச்சிருக்கிற தம்பிமாரின்ர புத்தியை என்னெண்டு சொல்லிறது.......? தம்பிமாருக்கு எதிராகப் போராட முஸ்லிம் அமைப்பொண்டு துவங்கியிருக்காமே.....*

**மன் :-** ம்.....கிண்ணியாவில ஒப்பீஸ் திறந்திருக்கினமாம். முரசு எப்பவும் சொல்லி வாற மாதிரி தம்பிமாருக்கு எதிராகத் தமிழரே போராட வேண்டி வருமெண்டதும் முஸ்லிம் மக்கள் தொடர்ந்தும் அடக்கப்படேக்கை வேறு வழியில்லாமல் போராட முற்படுவினம் எண்டதும். இப்ப உண்மையாப்போச்சு.... தம்பிமார் சிந்திக்க வேண்டிய கட்டமிது. ரொம்ப இறுக்கினா கட்டுத் தெறிக்குமெண்டு சொல்லுவினம். அதுக்காக எல்லாரும் ஆயுதம் தூக்கினாச் சரி எண்டு எண்ணிப்போடக் கூடாது. மாற்றுக்கருத்துக் கொண்டவயள் போராடினம் எண்டதைப் புரிஞ்சுகொண்டால் நல்லது.

***சின் :-*** *மாற்றுக் கருத்துக்கு மதிப்பளிக்கிற மனித நேயம் மலரும் மட்டும் துவக்குதான் வழி திறக்குமெண்டு ஒரு நியதி சகோதர இளைஞர்களிட்ட வந்ததுக்கு, எங்கட பிழையான போராட்ட வடிவம்தான் காரணம்....ம.ம.மு. தலைவர் பெ. சந்திரசேகரன், ஈ.பி.டி.பி.யையும், புலிகளையும் சந்திக்க வைக்கிற முயற்சியில தீவிரமா இருக்கிறாராமே.....*

**மன் :-** நல்ல முயற்சி. ஈ.பி.டி.பி.க்காறர் சந்திக்கத் தயாரெண்டிருக்கினம், அதாவது தமிழ் மக்களின்ர ஜனநாயக உரிமையும், மனித உரிமையும் மதிக்கப்படும் எண்டு உத்தரவாதம் தரப்பட்டால் புலிகளைச் சந்திக்க விருப்பம் எண்டு சொல்லியிருக்கினம். இதில ஒரு விஷயத்தை கவனிச்சீங்களோ...தங்களுக்கு எதிரா படுகொலைகள் செய்யிறவையளிட்டையே மக்களின்ர நலனுக்காக கதைக்க முன்வருகினமாம். இதுதான் ஜனநாயகம். ஆனால் உத்தியோகபூர்வமாக எந்த அழைப்பும் இதுவரை விடுக்கப்படவில்லையாம். இவர் சந்திரசேகரன் உப்பிடிச் சொல்லிறார் எண்டு ஊடகங்கள் மூலமாகத்தான் கேள்விப்படுகினமாம்.

***சின் :-*** *அட அவையளோட கதைக்காம சந்திரசேகரன சும்மா ஊடகங்களுக்கு கதை விட்டுக்கொண்டு திரியிறார் எண்டு சொல்லுங்கோ..... யுத்தத்துக்கு போக அரசுக்கு விருப்பமில்லை எண்டு ஜனாதிபதி தெரிவிச்சிருக்கிறதை சந்தேகிக்கிறதாகக் சொல்லிற கூட்டமைப்பு செயலில காட்டும்படி தெரிவித்திருக்கிறதே....*

**மன் :-** திரும்பத் திரும்ப கூட்டமைப்பைப் பற்றிக் கதைக்கிறீர். சண்டைக்கு வரமாட்டம் எண்டு சொல்லிற அரசை செயலில காட்டச் சொல்லிறவையள் தம்பிமார் யுத்தத்துக்குத் தயார் எண்டு சொல்லிறதை விழுங்கித் தண்ணி குடிக்கினமே...

தம்பிமாரோட பேசுங்கோ எண்டிட்டினமெல்லோ, பிறகென்ன அறிக்கைகள் விட்டு விளம்பரம் தேடிறது? உதவாக்கரைகள்.....

***சின் :-*** *சொறி, சொறி, உவுங்களின்ர அறிக்கைகளை படிச்சுப்போட்டுக் கேட்டுப் போட்டன். சொறி....ரஷ்யாவில தீவிரவாதிகள் தாக்கினதில 392 பேர் இறந்திருக்கினமே......*

**மன் :-** அந்த பயங்கரமான படுகொலைகளை சகல நாடுகளும் கண்டிச்சிருக்கினம். எங்கட வெளிவிவகார அமைச்சரும் உப்பிடியான பயங்கரவாதத் தாக்குதல்களை அநுபவிக்கிறவர்கள் என்பதால வன்மையாக் கண்டிக்கிறதோட இப்பிடியான பயங்கரவாத நடவடிக்கைகளைக் கண்டிக்க சர்வதேச சமூகம் ஒண்டுபட வேணும் எண்டும் தெரிவிச்சிருந்தாரே. தவிரவும் ஜனாதிபதி ஊடகமொண்டுக்கு வழங்கின செவ்வியில கேள்வி ஒண்டுக்கு பதிலளிச்சபோது,

ஒரு பயங்கரவாத அமைப்பை அழிக்க மற்றொரு பயங்கரவாதத்தைப் பாவிக்க வேண்டிய தேவை அரசுக்கு இல்லை என்று கூறினாரே! அது கருணா தொடர்பான கேள்வி..... இதெல்லாம் எதைக் காட்டுது. சமாதானமெண்ட போர்வையில உள்ளுக்குள்ளால பயங்கரவாதம் நடக்குதெண்டதைத்தானே!

**மன்னவரும் சின்னவரும்**

இரகசியம் காத்தல் அவசியம் என்பதால் பெயர்கள், இடங்கள் யாவும் கற்பனையில்...

# நெஞ்சினில் என்ன காயமோ...? 73

பத்திரிகை மூலமாக நடிகர் எப்பொழுது நாடு திரும்புகிறார் என்ற தகவலுக்காகக் காத்திருந்தாள். ஆசிய திரைப்பட விழா ஒன்றில் சிறந்த நடிகருக்கான விருதைப் பெற்ற அவருக்குப் பாராட்டு விழா ஒன்று விமான நிலையத்தில் ஒழுங்குபடுத்தப்பட்டதாக அறிந்தாள். பூச்செண்டு ஒன்றையும் எடுத்துக்கொண்டு விமான நிலையம் விரைந்த அவள், நடிகரிடம் பூச்செண்டைக் கையளித்த பின்புதான் நிம்மதியடைந்தாள். இந்த சனக் கூட்டத்திற்கு நடுவே தன்னை அடிக்கடி அந் நடிகர் பார்ப்பதாகவும் சிரிப்பதாகவும் உணர்ந்தாள் தன் மீது அவருக்குக் காதல் இருப்பதாகவும்ஆனால் அதைக் கூறாமல் இருப்பதாகவும் நினைத்தாள். இந்தத் தயக்கத்திற்குக் காரணம், தான் அந்தக் காதலை நிராகரித்து விடுவோமோ என்ற பயம் அந் நடிகருக்கு இருக்கக்கூடுமோ என்று நினைத்து தனது காதலைத் தெரிவித்துக் கடிதம் ஒன்றை அனுப்பினாள். பல்வேறு கடிதங்களை அனுப்பியும் கூட அவளுக்குப் பதில் ஒன்றும் கிடைக்கவில்லை. அதற்கு நடிகரின் செயலாளர் தான் காரணம் என்று நினைத்து தொலைபேசியில் செயலாளரை ஏசினாள். நடிகரிடம் தொலைபேசியைக் கொடுக்குமாறு மிரட்டினாள். இவளின் நடவடிக்கைகள் நடிகரின் வேலைகளைக் குழப்புவதாக அமைந்ததால், நடிகர் பொலிஸாரின் உதவியை நாடினார். பொலிஸார் அவளை இப்படியான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் எனவும் அவளின் நடவடிக்கையில் தான் பிழையுள்ளது எனவும் அறிவுரை கூறியபொழுது, அவளின் நம்பிக்கைகளை மாற்ற முடியவில்லை. இந் நிலையில் அவளோ நடிகரின் செயலாளர் மீது அதிகம் கோபமுற ஆரம்பித்தாள். நடிகர் தன் மீது அளவுக்கதிமான காதலை கொண்டிருப்பதாகவும், நடிகரின் செயலாளர்தான் அதற்குக் குறுக்காக இருப்பதாவும் கூறினாள். தொடர்ந்து இப்படியாக தனது காதலுக்குக் குறுக்காக இருந்தால் அவரைக் கொலை செய்து விடுவதாகவும் மிரட்டிய போது செயலாளர் மீண்டும் பொலிஸாரை நாட வேண்டி வந்தது. இந் நிலையில் பொலிஸார் அவளை சிகிச்சைக்காக மனநோய் மருத்துவமனையில் அனுமதிக்குமாறு பணித்தனர்.

உடல் நோய்களால் பாதிக்கப்பட்டவர்களை விட உள நோயினால் பாதிக்கப்பட்டவர்களே அதிகமாகக் காணப்படும் இன்றைய கால கட்டத்தில், உள நலம், உளப் பாதிப்புகள், உள நோய்கள் பற்றி அறிந்துகொள்வதும் இவற்றிற்கான வைத்திய முறைகளை அறிமுகப்படுத்துவதும் அவசியமாகிறது. எனவே மேற்படி உள மருத்துவத் துறையில் அநுபவம் பெற்றவர்களும், நிபுணர்களுமான வைத்திய கலாநிதி திரு. த.கடம்பநாதன் (எம்.பி.பி.எஸ். எம்.டி. உள மருத்துவம்) அவர்களும் உளவியலாளர் திரு.தி.சுவீந்திரன் (எம்.ஏ.எம்,ஏ., எம்.பில்., உள மருத்துவம்) அவர்களும் இணைந்து தமது அநுபவங்களைப் பகிர்வர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்திக் கொள்கிறோம்.

## உள மருத்துவம்

தொடரும்....

# இனிய இல்லறம்

தலைப்பைப் பார்த்தவுடனேயே புரிந்துவிட்டிருக்கும் நான் எதைப் பற்றி உங்களுடன் பேசப் போகிறேன் என்பது! ஆமாம்! இனிய இல்லறத்துக்கும், சிறந்த முறையில் குழந்தைகளை வளர்ப்பதற்கும் உண்டான வழிமுறைகளைப் பற்றித்தான் நான் சில விஷயங்களைச் சொல்லப் போகிறேன்.

உங்களுடைய புருவங்கள் சற்றே உயருவதை என்னால் அடையாளம் கண்டுகொள்ள முடிகிறது. 'காவியுடை அணிந்த சுவாமிஜியாயிற்றே இவர்! திருமணம் செய்துகொள்ளாத பிரமச்சாரியாயிற்றே இவர்! இவருக்கு ஏது பிள்ளைகள்? அப்படியிருக்கும் போது, இல்லற வாழ்க்கை பற்றியும், குழந்தை வளர்ப்பு பற்றியும் இவருக்கு அநுபவம் ஏதும் இருப்பதற்கே வாய்ப்பில்லையே! அப்புறம் எப்படி அது பற்றி இவர் நமக்கு ஆலோசனைகள் சொல்ல முடியும்?' இதுதானே உங்கள் சந்தேகம்?

நான் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் மட்டுமின்றி, அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகளிலும்கூட லை.்.ப் என்ற பயிற்சி வகுப்புகள் நடத்திக்கொண்டு வருகிறேன். அப்போது தியானம், யோகா, பகவத் கீதை, வேதம் சம்பந்தப்பட்ட பல விஷயங்களைச் சொல்லிக் கொடுப்பதுடன், இனிய இல்லறம், குழந்தை வளர்ப்பு பற்றியும் பேசுகிறேன்.

பெங்களூரில், இனிய இல்லறம் பற்றி நான் ஒரு ஒர்க்ஷாப் நடத்தப் போவதாக அறிவித்த சமயம், ஒருசிலர் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். இன்னும் சிலர் நேரிடையாக என்னையே சந்தித்து துறவு பூண்ட ஒருவர், இல்லற வாழ்க்கையைப் பற்றி ஆலோசனை சொல்லுவது எப்படிச் சரியாகும்? என்று கேட்டனர். நான் அவர்களை அமைதிப் படுத்திவிட்டு, "காமசூத்திரம் எழுதிய வாத்ஸ்யாயனர் கூட ஒரு துறவிதான் என்பது உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டேன். "இந்தப் பூமியில் வாழ்ந்து, இறந்தபின் வாழ்க்கை என்னவாகும் என்று வழிகாட்டுவது மட்டும்தான் ஒரு துறவியின் கடமை என்று நான் நினைக்கவில்லை. மனித வாழ்க்கைக்குரிய நல்லது, கெட்டதுகளை எடுத்துச் சொல்லி, இந்த பூமியில் வாழ்கிற வாழ்க்கையும், மகிழ்ச்சி நிரம்பியதாகவும், நிம்மதி நிறைந்ததாகவும் அமைய வழிகாட்டுவதும் கூட என் கடமைதான் என்று கருதுகிறேன்" என்றேன்.

ஹைதராபாத் நகரில், நான் நடத்திய லை.்.ப் புரோகிராமில் இல்லற வாழ்க்கை, குழந்தை வளர்ப்பு பற்றிப் பேசினேன். என் சொற்பொழிவு முடிந்த பின், ஒரு பெண்மணி வந்து, என்னை வணங்கினார். "சுவாமிஜி! உங்கள் பேச்சு பிரமாதம்! எத்தனை சிக்கல்களுக்கு எவ்வளவு எளிமையான தீர்வுகளைச் சொல்லி, 'சே! இத்தனை வயதாகிவிட்டது நமக்கு! இந்த சிறு விஷயம் நமக்குத் தெரியவில்லையே!" என்று என்னைப் பற்றி நானே வெட்கப் பட வைத்துவிட்டீர்கள்" என்றார். நான் "உங்கள் பாராட்டுக்கு என் நன்றி" என்றேன்.

அந்தப் பெண்மணி தொடர்ந்து பேசினார். "ஸ்வாமிஜி! நீங்கள் சொல்கிற கருத்துக்கள் அற்புதமாக இருந்தாலும், இந்தக் கருத்துக்கள் துறவு பூண்ட ஒருவரது வாயிலிருந்து வருகின்றன என்பதைத்தான் என்னால் ஜீரணித்துக்கொள்ள முடியவில்லை. நீங்கள் துறவறம் பூண்டபோது உங்களுக்கு இருபத்து ஐந்து வயது. எனவே, திருமணம் பற்றிய அநுபவம் உங்களுக்கு இல்லை. திருமணமே இல்லை. என்கிறபோது, குழந்தை வளர்ப்பு பற்றிச் சொல்லவே வேண்டாம். யோகா, தியானம் பற்றி நீங்கள் பேசுகிறீர்கள் என்றால், அவைகளை நீங்கள் முறைப்படி கற்றுக்கொண்டவர்.

(தொடர்ந்து வரும்........)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும். பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

குறுக்கெழுத்துப் போட்டி இல.84க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

எம். ஏ. மிஸ்றுல் ஷேபா, தாருல் ஷேபா, வைத்தியசாலை வீதி, மீராவோடை-05

### பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.

1. ரவி-அனஸ்ரினா, 65/3, நீதிமன்ற வீதி, திருகோணமலை.
2. ரேகா லட்சுமன், பி . 1 . எப்.22, புளுமெண்டல் தொடர்மாடி, கொழும்பு-13.
3. பி. நவீன், 14, பிரதான வீதி, கொட்டகலை.
4. எஸ். யோகராஜா, கொ/பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, கொழும்பு- 14.
5. க. குணேஸ்வரன், மருதபுரம், காரைநகர் மேற்கு, காரைநகர்.
6. திருமதி. எம். கலையரசி, 173, லோவர் வீதி, பதுளை.
7. திருமதி. சாந்தினி சத்திவேல், மெல்போர், எஸ்டேட், புசல்லாவ.
8. எம். மஹ்ஜபீன், அல்-மினாபுரம், தில்லையடி, புத்தளம்.
9. எஸ். கனகஜோதி, ஓல்டன் மே.பி. சாமிமலை.
10. கொன்சன்ரைன் அனிஸ்ரலாமேரி, புங்குடுதீவு - கிழக்கு, புங்குடுதீவு.

## குறுக்கெழத்துப் போட்டி 86

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ■ |
| 5 | ■ | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | ■ | 12 |
| 13 | ■ | 14 | 15 | 16 |
| 17 | ■ | ■ | 18 | 19 |
| 20 | 21 | 22 | ■ | 23 |

**இடமிருந்து வலம்**

1. நம் நாட்டிலிருந்து ஏற்றுமதியாகும் பழவகைகளில் ஒன்று கம்பஹா மாவட்டத்தில் அதிக விளைச்சலைத் தருகிறது.
6. மாட்டுத் தொழுவம் (குழம்பியுள்ளது).
9. பிக்குணியின் எதிர்ப்பாற் சொல் (குழம்பியுள்ளது).
14. திருகடுகத்தில் ஒன்று. (குழம்பியுள்ளது)
18. பெண்களின் பருவத்தில் ஒன்று.(திரும்பியுள்ளது)
20. விடியல் (திரும்பியுள்ளது).

**மேலிருந்து கீழ்**

1. நம் நாட்டில் மலிந்துவிட்ட மக்கள் விரோதச் செயல்.
3. பனம் பழத்திலிருந்து தயாரிக்கப்படும் இப் பொருளை கிராமத்தவர் இப்படி அழைப்பர். (குழம்பியுள்ளது).
4. உணவு வேட்கை (தலைகீழாக உள்ளது)
8. குதிரையை கட்டுப்படுத்துவது (குழம்பியுள்ளது)
15. கொத்து

### குறுக்கெழுத்துப் போட்டி 84 விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| ஏ 1 | ல 2 | க் 3 | கா 4 | ய் 5 |
| க 6 | ■ | ஓ 7 | டை 8 | ■ |
| லை 9 | உ 10 | ச 11 | ■ | ஆ 12 |
| வ 13 | லி 14 | ■ | ல் 15 | வி 16 |
| ன் 17 | வ 18 | றை 19 | மூ 20 | ■ |
| ■ | ■ | ம 21 | ய 22 | ம் 23 |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 15.09.2004 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-86
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர் தினமுரசில் பிரசுரமாகும்.

ராதா ரெக்ஸ்ரைல்ஸின்
வண்ணச் சேலை பரிசுப் போட்டி
எல்லா விதமான, ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என எல்லோருக்கும் பிடித்தமான ஆடை அணிகளின் அட்சய பாத்திரம். எல்லாத் தெரிவுகளும் ஒரே கூரையின் கீழ்.
RATHAA TEXTILE
377, 379A, Galle Road, Wellawatta, Colombo-06.
(Opposite of Delmon Hospital) Tel: 2364792
Branch: No. 33,37th Lane, Colombo-06. ☎: 2364727
மகளிர் மட்டும் மகளிர் மட்டும்
60
பெயர்:........................
முகவரி:........................
........................
தொழில்: ........................
கையொப்பம்: ...............
உண்மை நேர்மை வெளிப்படைத் தன்மை

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிர்ஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே வண்ணச் சேலை பரிசு வழங்கப்படும்.
★ மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.
கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 05-09-2004
அனுப்ப வேண்டிய முகவரி:- 'ராதாவின் வாரம் ஒரு வண்ணச்சேலை' தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## இந்த வாரம் யாருக்கு சேலை? நயினா தீவு வாசகிக்கு அதிர்ஷ்டம்! 57

இவ்வாரம் சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

கு.காந்திமலர்
2ஆம் வட்டாரம், நயினா தீவு.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம். அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?! இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# கண்ணீர்ப் பூக்கள்

மெல்லியதாய் ஒலித்த மழலை ஒலியின் இனிமையால் திடுக்கிட்டு நிமிர்ந்தாள் பிரியா. அந்தப் பூங்காவின் ஓரமாய் ஊஞ்சல் விளையாட்டில் ஒன்றிப்போயிருந்த அந்தப் பிஞ்சுக் குழந்தைகள் கண்ணில் பட, கொஞ்ச நேரமாய் அவர்களை வெறித்துப் பார்த்தாள். சூம்பிப் போயிருந்த கால்கள் அவளது துடியாட்டத்தையெல்லாம் அடக்கிவிட்டிருந்தன. கண்களுக்குள் அந்த நாட்கள்.....அந்த நாட்களின் இனிமைகள்.....நினைவுகள்...நெஞ்சை வருட அவள் கண்கள் ஈரமாய்ப் போயின.

தூரத்தே தெரிந்த சின்ன முகங்களுக்குள் அவள் தேடினாள். சிந்து, பபி, பானு யாராவது தெரிகின்றார்களா? என்று, அவள் உற்று நோக்கினாள். இல்லை, அவர்கள் இருக்கவே மாட்டார்கள் என்ற உண்மை பயங்கரமாய் மனசுக்குள் அழுத்த அவள் தொண்டைக்குள் ஏதோ அடைத்தது. அந்தப் பிஞ்சு முகங்கள் இப்போதும் அப்பழுக்கில்லாமல் கண்களுக்குள் தெரிந்தன. தளர்நடை நடந்து நேர்ஸரிக்குப் போன அந்த நாட்கள்...... ஓ...அப்போதெல்லாம் சிந்து நல்ல வாயாடி....பானு சரியான பயந்தாங்கொள்ளி. பபியும் பிரியாவும்தான் எதையுமே சமாளித்துக்கொள்வார்கள். பக்கத்துப் பக்கத்து வீடு என்பதாலோ என்னவோ ஒன்றாகவே இணைந்துவிட்டார்கள். படிப்பு முதல் விளையாட்டு வரை நாலு பேரில் ஒருவர் கூடக் குறைந்திருக்காது.

ஓ...பபி, சிந்து எங்கேயிருக்கிறீர்கள்? அன்றைய அமுத நினைவுகள் மறையுமா? பிரியா! அந்த நாட்களின் வருடல் உங்களுக்கு நினைவிருக்கிறதா? தோள்களில் கனக்கும் புத்தகப் பையும்....கைகளுக்குள் பம்பரமாய் சுழலும் தண்ணீர்ப் போத்தல்களுமாய் வீதி முழுக்க நமக்கே சொந்தம் என்ற மாதிரி நாம் நடந்து கொண்டிருப்போம். தூரத்தே காரின் ஹோன் பத்துத் தடவை அடித்தபடி இருக்க, கிட்டே கார் வந்தவுடன் ஒருவரை ஒருவர் ரோட்டிலிருந்து வேலியோரம் தள்ளுவோமே. அந்த வேலிக்கரை....... நமக்கு நிறையவே பழகிப்போன அந்த வேலிக்கரையோரத்துப் பூவரசமரம்....மஞ்சளாய்ப் பழுத்த இலைகளும்...அந்தப் பச்சைத் துளிர்களும்தான் நமக்கு எவ்வளவு பரிச்சயம். அந்த வேலிக்கு நடுவில் வித்தியாசமாய்



மென் மஞ்சள் கலரில் பெயின்ட் அடித்த அழகான மதிற்சுவர். அதற்குள் நிறநிறமாய் பூத்துக் குலுங்கும் பூக்கன்றுகள். போகன் விலாக்கள். அதையும் தாண்டினால் மென்சிவப்பு நிறச் சுவரோடு அழகாய் நிமிர்ந்து நிற்கின்ற அந்தப் பெரிய வீடு. அந்தக் கண்ணாடி அங்கிள் வீடு. அங்கே வாசலுக்கு வெளியே நின்று பார்க்கும் போதே தெரியும் அந்தப் பளிங்கு போன்ற வெள்ளைக் குளிர்ப்பெட்டி. எப்போதுமே அந்த மஞ்சள் கலர் மதிற்சுவரை அதிசயமாய் விசித்திரமாய்ப் பார்த்துக்கொண்டு போகும் எங்கள் கண்களில் அந்தக் குளிர்ப்பெட்டி பட்டபோது....

நினைவோடு போய்க்கொண்டிருந்த பிரியாவிற்கு அந்த நினைப்பு வந்ததும் அழுகை வந்தது. எவ்வளவு உல்லாசமான நாட்கள் அவை. அந்தக் குளிர்ப்பெட்டியைக் கண்ட நாளிலிருந்துதானே அங்கிளோடு பழகி அவரது அன்பையும் சம்பாதித்துக்கொள்ள முடிந்தது. இப்போது எல்லாமே கனவாய் முடிந்துபோன கதையாகிவிட்டதே.

அன்றைக்கு அவர்கள் கண்ணில் அந்த பிரிட்ஜ் தென்பட்டபோது சட்டென்று நின்றாள் சிந்து.

"என்ன அது....?" தெரியாமல் கேட்டாள் பானு.

"நில்லு. ஐஸ் கட்டி வாங்கி வாறேன்" என்றபடியே சிந்து சிட்டாய்ப் பறக்க, பானு அவளைப் பிடித்து இழுத்தாள்.

"நாய் இருக்கும் போகாதே" என்று பானு பயப்பட, சிந்து திமிறிக்கொண்டே சிரித்தபடி ஓட, அந்த கண்ணாடிக்கார அங்கிள் வாசலுக்கு வந்தவர்,

"என்ன வேணும்" என்று அதட்டினார். அம்மாடி பானு பயத்தில் ஓடவே தொடங்கிவிட்டாள்.

சிந்து துணிச்சலோடு "ஐஸ் கட்டி வேணும் அங்கிள்" என்று கேட்க, பிரியாவும் பபியும் தயக்கத்தோடு அவரைப் பார்க்க, ஓடிய பானுவைக் கோழிக்குஞ்சைப் பருந்து தூக்குவது மாதிரி அலாக்காகத் தூக்கினார்.

"ஏனம்மா ஓடுகிறாய்? ஐஸ்கட்டி கேட்டால் தருவேனே" என்று சின்னத் துண்டு ஐஸ்கட்டிகளாய் சிவப்புக்கலர் குளிர்பானத்துக்குள் மிதக்கவிட்டுக் குடிக்கத் தந்தார். முதலில் முரட்டுத்தனமாய் அதட்டிவிட்டுப் பிறகு சிரித்துச் சிரித்துக் கதைத்தார் அந்த அங்கிள்...

அதன் பிறகு ஒவ்வொரு நாளும் பள்ளிக்குப் போய்விட்டு வரும்போது பெரிது பெரிதாய் பூவரசம் இலைகளைப் பறித்துக்கொண்டு அந்த வீட்டுக்கு முன்னால் நிற்பார்கள். "அங்கிள்...."என்று ஒரேயடியாய்க் கூப்பிடுவார்கள். அந்த ஐஸ்கட்டிப் பெட்டியோடு சிரித்தபடியே அங்கிள் வருவார். அந்தப் பச்சை இலைக் கிண்ணங்களிலே உருகிக்கொண்டிருக்கும் பனிக்கட்டித் துண்டுகளை அவர் வைப்பார். கைகளால் தொட்டுவிட்டுச் சில்லென்ற குளிர்ச்சியை ஒருவர் கன்னத்தில் ஒருவராய்த் தொட்டுச் சிரித்து விளையாடி, சில நிமிடங்களுள் கரைந்து போன பனிக்கட்டியின் குளிர் வழியும் இலைகளை விசுக்கி எறிந்துவிட்டு வீட்டுக்கு வந்த அந்த நாட்களெல்லாம் மறக்கக்கூடியவையா அங்கிள்? அந்த நாட்கள் இனியும் ஒரு தடவை வராதா......?

"பிரியா வீட்டுக்குப் போவோம் வா" அண்ணா கூப்பிடுகின்றான். சம்மதமில்லாமலே எழும்பினாள் ப்ரியா.

"பிரியாக் குட்டிக்குப் பிளேன் வாங்கித் தரட்டுமா?" அண்ணா கெஞ்சினான். அவளுக்கோ அழுகை அழுகையாய் வந்தது.

"பிளேன் விளையாட பானுவும், சிந்துவும், பபியும் வருவினையண்ணா?" விக்கினாள். அண்ணா ஒன்றும் பேசவில்லை. எழும்பினவுடன் கையைப் பிடித்தாள். கொஞ்சம் தூரமாய் நடந்தாள். அவளுக்குக் காலெல்லாம் வலித்தது. இழுத்து இழுத்து நடந்தாள். அண்ணா கையை நீட்ட அவனுக்குள் ஒடுங்கிக்கொண்டாள். தோளில் தூக்கி அணைத்தபடி அண்ணா வீட்டை நோக்கிப் போனான். போகும் வழியிலே கரியாய்த் தீய்ந்துபோய் விழுந்து கிடந்த அந்த மஞ்சள் நிற மதிற்சுவர். அவள் கண்களில் உப்பு நீர் வழிந்தது. 'அங்கிள் உங்கட கண்ணாடியை எனக்குப் போட்டு அழகு பார்ப்பீர்களே அங்கிள். எங்கே அங்கிள் நீங்கள்? எங்கே அங்கிள் உங்க கண்ணாடி?' அவள் கண்களுக்குள் அந்தக் கோர நாள் வந்து போனது. எப்போதும் போல்தான் அன்றைக்கும் சற்றே கருமை பூசியிருந்த வானம் வரப்போகின்ற சோகத்தை முன்னதாகவே சொல்வது மாதிரி லேசாய் சிணுங்கிக்கொண்டிருந்தது. அந்தத் தூற்றல் மழைக்குள் நனைந்தபடி சந்தோஷமாய் விளையாடிக்கொண்டு வந்த அந்தக் குழந்தைகள் கண்ணாடி அங்கிள் வீட்டில் மழைக்காக ஒதுங்கியிருந்தனர். அந்தப் பளிங்குத் தரையில் வேடிக்கை பார்த்து அந்தக் கண்ணாடி அங்கிளோடு விளையாடிக்கொண்டிருந்தனர். உயிர் வாழ்கின்ற கடைசி நிமிடம் அதுதான் என்று புரியாத அந்த அங்கிளும் குழந்தைகளோடு குழந்தையாய் மாறி அந்தப் பொழுதை இனிமையாக்கிக் கொண்டிருந்தார். அந்த நேரம் பார்த்துத் தானா இந்த இரைச்சல் கேட்க வேண்டும். தன்னருகே மிதந்த வல்லூறுகளைப் பார்த்துப் பயந்து வானம் கூடத் தனது சின்ன அழுகையை நிறுத்திவிட்டது. அங்கிள் தான் பெரிய பணக்காரர் ஆயிற்றே! பார்க்கும் போதே தகதகவென்று மினுமினுக்கும் பெரிய வீடு...அந்த மிக் விமானத்தின் கண்ணையும் அது உறுத்தி விட்டதோ என்னவோ? மேலே கேட்ட இரைச்சலால் பயந்துபோன பிள்ளைகளை அணைத்துக்கொண்டு அங்கிள் வெளியே வர முயன்ற போதுதான் அந்தப் பயங்கரம் நிகழ்ந்தது. குண்டுச் சத்தத்தோடு அந்தப் பிரதேசமே அதிர்ந்தது. எங்கும் மயான அமைதி. தொடர்ந்து ஊ...வென்று இரையும் இரைச்சல்கள். அரைமணி நேரத்திற்கு மாறி மாறித் தொடர்ந்தது இந்த அவலம். எங்கும் மனித ஓலங்கள். இறுதி நேர மரண அவஸ்தைகள்.

இருள் மண்டிக் கிடந்த கண்களுக்குள் இலேசாய் ஒளி படர்ந்தவுடன் சற்றே கண்களைத் திறந்தாள் பிரியா. எங்கே அந்த வீடு....? எங்கே அங்கிள்? எங்கே பபி, சிந்து, பானு? கொஞ்சம் சுதாகரித்துக் கொண்டு எழும்ப முயற்சித்தாள். அந்த ஐந்து வயதுச் சிறுமி. ஊஹும்..... முடியவே முடியவில்லை. கால்கள் முற்றிலுமாய் செயலிழந்துவிட்டன. சுற்றிலும் பார்த்தாள். ஒரே புகைமயம். கரியாய், கறுப்பாய் எரிந்து போன சுவடுகள். ஆங்காங்கே சிதறியிருந்த உடல்கள்....! ஓ..சிந்து, பானு, பபி, அங்கிள் அவள் அலற முற்பட்டு நினைவிழந்து விட்டாள்.

அதற்குள் யார் யாரோ வந்தார்கள். தொடர்ந்து மாறி மாறி வாகன இரைச்சல்கள்...ஆஸ்பத்திரிக் கட்டடங்கள். மருந்து வாடை. அதற்குப் பின் தான், அவளது கால்கள் ஓரளவுக்கு குணப்பட்ட பின்தான் அவளுக்கு அந்த உண்மைகள் சொல்லப்பட்டன. அவளது நண்பிகள் பானு, சிந்து, பபி, அன்பான அந்த அங்கிள் இனிமேல் வரமாட்டார்கள். அவளோடு விளையாடமாட்டார்கள். அவளுக்கு நெஞ்செல்லாம் வெடித்துவிடும் போலிருந்தது. அவர்கள் இல்லாமல் இங்கே. நான் என்ன செய்வது? இந்த உலகத்தில் அவர்களைத் தவிர வேறென்ன எனக்குப் பிடிக்கும் என்று சூனியமான விரக்தி மனசுக்குள் படர்ந்தது. அந்த உறவின் துள்ளல்கள் அவுளுக்குள் வெறுமையைக் கொடுத்துவிட்டு மறைந்து போயின. விதி அவளைத் துடிக்க வைத்தது.

வீட்டுக்கு போகும் வழியில் அடுத்தடுத்து பானு, சிந்து வீடுகள். ஏதோ வேலையிலிருந்த பானுவின் தாய் பானு இறந்த பின்னர் இப்போது தான் பிரியாவை கண்டதனால் ஓடிவந்து அவளைத் தூக்கிக்கொண்டு அழுதாள். பிரியாவின் சூம்பிப்போன வெள்ளைக் கால்களை நீட்டிக்கொண்டு ஏக்கத்தோடு அழுதாள். பிரியாவிற்கும் அழுகை வந்தது. அவளும் விம்மியபடி நிமிர்ந்து பார்த்தாள். உள்ளே பானு, சிந்து, பபி அங்கிள் நாலு பேரின் படமும் வரிசையய் மாட்டியிருந்தது. அழகாய் சிரித்தபடியிருந்த அந்தக் கலர்ப் படங்களை வியப்போடு விழி விரித்துப் பார்த்தாள்.

"ஏன் அன்ரி என்ரை படம் வைக்கவில்லை" என்று ஏக்கத்தோடு கேட்டாள்.

**-செல்வி சுபகீதா ஐயாத்துரை, கொடிகாமம்.**

நாலு படங்களிலும் சிவப்பும், மஞ்சளுமாய்க் கட்டிப் போட்டிருந்த அந்தக் கடதாசி மாலைகளைப் பார்த்தாள். அங்கிள் வீட்டு போகன் விலாக்களும் மணம் வீசும் மல்லிகைகளும் ஞாபகத்திற்கு வந்தன. முன்பெல்லாம் செவ்வரத்தம் பூப் பறித்து கோணல் மாணலாய் மாலை கட்டி கல்லாய் இருக்கும் தங்களது சாமிக்கு மாலை போட்ட நினைவு வந்தது. கொஞ்சம் உற்சாகமாய் இருந்தது. அண்ணாவை நிற்கச் சொல்லிவிட்டு வேலிக்கரையில் சடைத்திருந்த மரத்தில் செவ்வரத்தம் பூக்களை ஒவ்வொன்றாய்ப் பறித்து, தத்தித் தத்தி வந்து படியில் வைத்தாள். கிணற்றடியில் இருந்த வாழையில் நான்கு நார்களைக் கிழித்து வந்தாள்.

"இது என் பானுவுக்கு........ இது என் சிந்துவுக்கு...... இது என் பபிக்கு.....இது என் அங்கிளுக்கு....." என்று பூக்களையும் நாரையும் நாலாகப் பிரித்து வைத்தாள். கண்களால் கோணல் மாணலாய் மாலை கட்டத் தொடங்கினாள், தன் அன்புள்ளங்களுக்காய்.....

(யாவும் கற்பனை)

# பேச்சுவாத்தை பற்றிய பேச்சு!

எண்ணெயில் இட்ட கடுகாய் வெடித்தாள் எதிர்வீட்டுத் தேன்மொழி. தானும் சளைத்தவளல்ல என்பது போல் அவளை எதிர்த்துப் பேசிக்கொண்டிருந்தாள் தேவகி. இருவரும் ஒரே கல்லூரித் தோழிகள்தான். தற்போது உயர்தரப் பரீட்சை எழுதிவிட்டு வீட்டிலிருக்கின்றார்கள். இருவருக்குள்ளும் ஏதோ பெரிய பிரச்சினை போலும். என்ன பிரச்சினையோ தெரியாது. இப்படி வீதியில் வந்து தகராறு செய்வதைப் பார்த்தால் ஏதோ பெரிய பிரச்சினை யாகத்தான் இருக்க வேண்டும் என நினைத்துக்கொண்டார் தன் வீட்டு முற்றத்தில் இருந்து இதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த ஓய்வுபெற்ற நீதிபதி தியாகராஜன். அப்படியே மெல்லக் காதைக் கொடுத்து என்னவாயிருக்கும் என்று உற்றுக் கேட்கத் தொடங்கினார்.

"நீ அவகிட்ட சொல்லாதேன்னு நான் ஒங்கிட்ட சொன்னதை நீ அவகிட்ட சொன்னேன்னு அவ ஏங்கிட்ட சொல்றதுக்கா நான் உங்கிட்ட சொன்னேன்?"

"ஐயோ! எத்தனை தடவை சொல்றது. நீ ஏங்கிட்ட சொன்னதை நான் அவகிட்ட சொல்ல லேன்னு. சொல்லாததை சொன்னதா சொன்னா அந்த சொல்ல கேட்டுக்கிட்டு ஏதாவது சொல்லாம இருக்க முடியுமான்னு நீயும் கொஞ்சம் யோசிச்சு பாரு. நான் சொன்னேனா இல்ல சொல்லாம இருந்திருப் பேனான்னு உனக்கு சொல்லாமலே புரியும்"

"இனி புரிஞ்சு என்னாகப் போவுது. ரகசியத்தை ரகசியமா யாருகிட்டேயும் சொன்னா, அது ரகசியமில்லைன்னு ஆன பிறகு எந்த நாயையும் நம்பி இனி பிரயோஜனமில்லை."

"இந்தா பார், நாயே கீயேன்னு திட்டாதே. நாய் மாதிரி உனக்கு நன்றி விசுவாசமா இருந்திருக்கேன் என்கிறதை மறந்திட்டு பேசாதே!."

"பின்ன என்ன நாயை நாயேன்னு சொல்லாம தாயேன்னு சொல்வாங்களோ!."

"நீ என்ன வேணும்னாலும் சொல்லு. 'ஆனா நாய் நன்றியுள்ளதுன்னு மட்டும் புரிஞ்சிக்கோ"

"நன்றி கெட்ட நாயெல்லாம் நன்றியுள்ள நாயைப் பற்றி பேசக் கூடாது"

"அதுதான் நாய், நாய் வேலையை செய்யனும், கழுதை வேலையை செய்தா இப்படித்தான்."

"தெரு நாயை வீட்டுக்குள்ள விட்டா வீடு நாய்க் கூடமாகும்னும் இப்பத்தானே புரியுது."

இப்படித் தொடர்ந்துகொண்டிருந்த சண்டைக்குக் காரணம் என்ன என்பதை அறிவதற்காய் அவர்களிடையில் புகுந்து,

"என்னம்மா! என்ன பிரச்சினை சொல்லுங்க. என்னால முடிஞ்சா தீர்த்து வைக்கிறேன். எந்தப் பிரச்சினையையும் பிரச்சினையா எடுத்துக்கிட்டாதான் அது பிரச்சினை. பிரச்சினையை பிரச்சினையா எடுத்துக்காட்டி அது பிரச்சினையே இல்ல."



-மெய்யன் நட்ராஜ், டோஹா கட்டார்.

"நீங்களே சொல்லுங்க ஐயா...! தப்ப தப்பில்லாம செய்தாலும் தப்பு தப்புதானே! இதுல தப்ப தப்பு தப்பா செய்திட்டு தப்பில்லன்னு தப்பிக்கப் பார்த்தா தப்பு சரியாகிடுங்களா" என்ற தேன் மொழிக்கு எதிராய்,

"ஐயா! என்ன யோசிக்கிறாய் என்றால் என்ன யோசிக்கிறதுன்னு யோசிக்கிறேன்னு சொல்றவ யோசனையையெல்லாம் ஒரு யோசனையா எடுத்துக்கிட்டு யோசிக்காம ஒரு காரியத்தில இறங்க முடியுங்களா?" என்றாள் தேவகி.

"என்னம்மா பைத்தியக்கார வைத்திய சாலையில வைத்தியம் பார்க்கிற வைத்தியருக்கு பைத்தியம் பிடிச்சா, அந்தப் பைத்தியத்தை எந்த பைத்தியக்கார வைத்தியசாலையில வைத்தியம் பார்ப்பாங்கன்னு பைத்தியமே கேட்கிற மாதிரி, நீ சொல்றது ஒண்ணுமே எனக்கு புரியலிலே."

"புரியாத ஒன்ன புரியாத ஒருத்தர் கிட்ட புரிய வச்சிட்டேன்னு புரியாம பேசுற இவளுக்குப் புரிய வைக்கிறதும் நீங்க சொல்ற மாதிரி புரியாத ஒண்ணுதாங்க ஐயா!"

"தேவகி சொல்ல.... பதிலுக்குத் தேன்மொழியும்,

"நெருப்பு இல்லாம புகை வராது. காத்து இல்லாம இலை ஆடாது. நடந்தது நடந்ததுதான். நடந்ததை நடக்கலைன்னு சொன்னா, நடந்தது நடக்காதது ஆகாது. நடந்தது மீண்டும் நடக்காம போகாதுங்க ஐயா அப்படி ஒங்க ரெண்டு பேருக்குள்ள என்னதாம்மா நடக்கக் கூடாதது நடந்திரிச்சி. நடந்ததை சொன்னாத்தானே நடந்தது மறுபடியும் நடக்காம இருக்கிறதுக்காவது ஏதாவது சொல்லலாம்."

"எனக்குத் தெரியுங்கய்யா உங்களுக்கு எங்க பிரச்சினை தெரியாதுங்கிறது. தெரியாததை தெரிய வச்சி இதுக்கு ஒரு தீர்ப்பு சொல்ல தெரியாம எல்லாந் தெரிஞ்ச நீங்க தடுமாறக் கூடாதுன்னுதான் தெரியாதது தெரியாமலே இருக்கட்டும்னும் தெரிவிக்க லைங்க ஐயா!"

"தேவகி சொல்லவும் தேன்மொழியும்,

"எங்க பிரச்சினை எங்களுக்குள்ளேயே முடிஞ்சிப் போவனும் என்கிற தீர்மானத்துக்கு வந்துட்டேங்க ஐயா! தீர்மானத்தை தீர்மானமாக்கிறதுக்குத் தீர்மானிக்கிறதே தீர்மானமா இல்லாம தீர்மானத்தை தீர்மானமா தீர்மானிச்சிட்டேங்க ஐயா!"

சரி சரி. எப்படியோ உங்க பிரச்சினை தீர்ந்தா சரி. பிரச்சினை எதுவானாலும் நடந்ததை மறந்திடுங்க. மறக்கனும்னு நெனச்சி மறக்கனும்கிற வார்த்தையை மட்டும் மறந்திடாம மறக்க வேண்டிய சம்பவங்களை மறக்காம மறந்திடுறதுதான் நல்லது" என்று என்ன நடந்தது என்றறியாமலே தீர்ப்புச் சொல்லி நீதிபதி நகர, தேன்மொழியும் தேவகியும் பேசியதை மறுபடியும் பேசாமல், பேசாததையும் பேசாமல், பேச்சுவார்த்தை என்ற பேச்சுக்கே இடமில்லாமல் பேசாமல் போகின்றார்கள். பேச்சுவார்த்தை பேச்சுவார்த்தை என்று இன்னும் எதையும் பேசாமல் பேச்சுவார்த்தை பற்றியே பேசிக்கொண்டிருக்கும் எங்கள் நாட்டுச் சமாதானப் பேச்சுவார்த்தை போல!

*படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.*

# சிந்தித்துப் பார்க்க...

## புண்படுத்தும் அன்பு அன்பேயல்ல

நிரந்தரமான ஒழுக்கங்களை நீங்கள் பின்பற்றினால், எவ்வாறு அன்பு காட்டுவது என்பதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள்.

புண்படுத்தும் அன்பு - அன்பேயல்ல.

வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாத போது நெருங்கிய நண்பர்களை இழக்க வேண்டி வரும்.

எல்லோரையும் சமமாக நேசித்து சமத்துவமான வாழ்க்கையை அநுபவியுங்கள்.

ஒருவர் விரும்பாத போது, இருவர் சண்டையிட முடியாது.

நாங்கள் எதை நேசிக்கின்றோமோ அது போல் உருவாகி நாகரிகமடைந்துள்ளோம். நீங்கள் இறைவனை நேசித்தால் என்ன நடக்கிறது என்று பாருங்கள்.

பிறருக்கு எவ்வளவு நன்மை செய்கின்றீர்களோ அவ்வளவிற்கு நீங்கள் உங்களுக்கு நல்லதைச் செய்கின்றீர்கள். தினமும் உங்களுக்கு நல்லவராக இருங்கள்.

இறைவனுடன் அன்பாய் இருப்பது மனிதத்தன்மையை நேசிப்பதாகும்.

சில வேளைகளில் நீங்கள் மக்களுக்கு உதவிக்கரம் நீட்டும்போது அவர்கள் அதனை உதாசீனப்படுத்தி விடக்கூடும். இருந்தபோதும் உங்களுடைய எண்ணங்கள் மூலம் அன்பும், கருணையும் காட்டுங்கள்.

பெருந்தன்மையான இதயம் விரைவில் மிக மதிப்புள்ள இதயமாகும்.

எதிரிகளை இல்லாதொழிப்பதற்கான சிறந்த வழி அவர்களை நண்பர்களாக்கிக் கொள்வதாகும்.

உங்களில் நீங்கள் அன்பு வைக்கக் கற்றுக்கொள்வதன் மூலம் மற்றவர்களை வெறுப்பதிலிருந்து விடுபடலாம்.

**"இன்றைய நாளுக்கான நல்ல எண்ணங்கள்" என்ற நூலிலிருந்து....**

# "சந்தன மார்பைக் கண்டு சந்தேகம் கொண்டவள்"

அன்று முழுவதும் அறைக்குள்ளேயே அடைந்து கிடந்தாள் மைதிலி. அவளுக்கு எழுந்திருக்கவே பிடிக்கவில்லை. யாருடனும் பேசவோ அல்லது யாரும் பேசுவதைக் கேட்பதற்கோ கூட அவளுக்கு வெறுப்பாயிருந்தது.

ஜன்னலூடாக வெளியே மாலை ஓய்வதையும், இருள் ஓங்குவதையும் பார்த்தபடி படுத்துக் கிடந்தாள். வீடு இரவுக்குள் நுழைந்துவிட்டது.

ஏமாற்றமும் கோபமும் அவளை வெதும்ப வைத்தன. ஊருக்கு வந்துவிட்டவன் இன்னமும் அவளைப் பார்க்க வரவில்லை என்பதை அவளால் தாங்கிக்கொள்ள முடியாதிருந்தது.

அப்படியென்ன அலட்சியமிருக்க முடியும்? ஒவ்வொரு நிமிடமும் அவன் வரும் காலடியோசையைக் கேட்பதற்காக, மனம் துடிக்கும் ஓசையையும் அடக்கிக் காத்திருப்பவளுக்கு அவன் காட்டும் பதில் இதுதானா? ஊருக்குள் நுழைந்தவுடன் அவளைத் தேடி வரும் துடிப்பு அவனுக்கு இல்லையா?

மைதிலி சுருண்டு படுத்திருந்தாள் ஒரு புழுவைப் போல. தலையணைக் குஞ்சங்களின் மெல்லிய இழைகள் வாசனின் கன்னத்து இளமயிர் உருவாக்கும் கிளர்ச்சியைத் தந்தன. உடலிலிருந்து பெற்றுக்கொண்ட சூட்டை பஞ்சணை திருப்பி அவளுடலில் வீசியது.

தன் பாதங்களிலிருந்து மோகத்தின் கிறுகிறுப்பு கிளைத்து மேலேறுவதை அந்தச் சூட்டுடன் உணர்ந்தாள். தொடையின் நரம்புகள் விடைத்து, அடிவயிற்றில் கதகதப்பு உண்டானது. மார்புகள் நெறி கட்டினாற்போல் விண்ணென்று தெறித்தன. முகத்தைத் தலையணையில் அழுந்தப் புதைத்தவள், விருட்டென்று எழுந்து முகம் இறுக அந்தத் தலையணையை ஓங்கிக் குத்தினாள்.

வளையல்கள் உறையைக் குத்திக் கிழித்ததில், உட்பொதிந்திருந்த பஞ்சுத் துணுக்குகள் சிதறிப் பறந்தன. வெல்ல முடியாத வேட்கையின் துணுக்குகள் வெளிப்பட்டுச் சிதறுவதைப் பார்த்து மனம் ஒரு வித அமைதி கண்டது.

திரும்பப் படுக்கையில் முகக்குப்புற விழுந்தாள். அவனை விட்டு எண்ணத்தைத் திருப்ப முடியாதா........ மனம் சோர்ந்தது.

அவன் வரவே மாட்டானோ...? அச்சம் மைதிலியைச் சூழ்ந்தது. தாழ்ந்த விழிகளிலிருந்து கண்ணீர் இறங்கத் தொடங்கியது.

வாசலைப் பார்த்தபடியே கிடந்தாள்.

அவன் வரவில்லை. ஏமாற்றம் அடிவயிற்றில் கூர்மையான ஆயுதமாகப் பாய்ந்தது. பிய்ந்திருந்த தலையணையை மேலும் பிய்த்தெறிந்தாள். பறந்து சிதறிய பஞ்சுத் துணிக்கைகள் கண்டு மீண்டும் மனம் வடிந்தது. கெட்டிப்பட்டு வீம்பால் நிரம்பியது.

**தருவது முழடில்யன்**

நிச்சலனமுடன் சிறிது நேரம் படுத்திருந்தாள். வாசலில் அரவம் கேட்டது. வாசனின் குரல்தான். காதிலிருந்து தலைக்குள் விறுவிறுப்பு ஏறியது. அவன் அவளைத்தான் எங்கே என்று கேட்கிறான். வாசற்படி தாண்டி அறையினுள் கால்வைக்கும் சத்தம் கேட்டது. தலை கிறுகிறுத்தது. வாசல்புறம் திரும்பாமல் கண்களை மூடிக் கிடந்தாள்.

வந்தவன் சற்று நின்றான். உடல் கலைந்து நன்றாக மலர்ந்த செந்தாமரையைப் போல பஞ்சணையில் நெளிந்து கிடந்தவளைப் பார்த்தான்.

அறைக்குள் இருந்த அரையிருட்டில் மைதிலி அதீத அழகுடன் தோன்றினாள். நெருங்கிச் சென்று பார்த்தான். தாயுடன் கோபித்துக்கொண்ட குழந்தை போல சிணுங்கிக் கிடந்தாள்.

அத்தனை நெருக்கத்தில், அதுவும் நீண்ட நாட்களுக்குப் பின் அவளைப் பார்க்க நேர்ந்ததில் வாசன் மிகவும் கிளர்ச்சியடைந்தான். இதயம் படபடத்தல், மூச்சு இரைத்தல், இமை இறக்க முடியாதிருத்தல் போன்ற இன்னோரன்ன உபாதைகளுடன் சில நிமிட நேரத்திற்கு அவளைப் பார்த்தபடியே நின்றான்.

பின்னர் அளவிட முடியாத அன்பு சுரந்த குரலில் "மைதிலி" என்று மெல்ல அழைத்தான்.

அவள் திரும்பாமல் கிடந்தாள்.

வாசன் அருகே சென்று அமர்ந்து அவள் முகத்தை மெல்லத் திருப்பி மீண்டும் "மைதிலி" என்றழைத்தான்.

அவள் அவன் கையை விலக்கிவிட்டுக் கிடந்தாள்.

"எவ்வளவு நாள் கழித்து வந்திருக்கிறேன்.... என்னைப் பார்க்கப் பிடிக்கவில்லையா?"

மீண்டும் மௌனமே கோபத்தைச் சொன்னது.

"ஆசைக்கு மேலாக கோபத்தை திரையிடுவது பெண்களின் சுபாவம் போலிருக்கிறது" என்று நகைத்தான்.

மைதிலி திரும்பி வெடித்தாள், "எத்தனை பெண்களோடு பழக்கம் உங்களுக்கு?"

கேள்வியை முடிக்கு முன்பே அவன் மார்பில்



சந்தனம் ஒற்றிக் கிடந்ததைப் பார்த்தாள்.

தலைக்குள் இரத்தம் எகிற மீண்டும் அவனை உதறி விலகிப் படுத்து விம்மினாள்.

வாசன் அவள் மீது சரிந்து அவளைத் திருப்பினான். அவன் அவள் முகத்தை நிமிர்த்தியபோது கன்னத்தின் ஈரம் அவனது கிளர்ச்சியை மேலும் தூண்டுவதாக இருந்தது. அவளைச் சிறைப்படுத்திய கரங்களை விலக்கிவிடாது இறுக்கியபடி சிறிது நேரம் இருந்தான்.

மைதிலி அவன் கரங்களுக்குள் அசைவின்றி இருந்தாள். அவன் யாரோ பரத்தையிடம் சென்று வந்திருக்கிறான் என்ற நினைப்பே அவளை நெருப்பாய்ச் சுட்டது.

'என்னை எப்படி வேண்டுமானாலும் கட்டிப்பிடித்துக்கொள். ஆனால் என் உடல் உன்னைத் தழுவாது' என்று வீம்புடன் மனதுக்குள் சொல்லிக்கொண்டாள். 'உன்னைத் தழுவி என் அழகை மீட்டுக்கொள்ளப் போவ தில்லை. இயல்பாக இருந்த என் அழகு முழுவதும் கெடுவதனாலும் கெட்டும்! பரத்தையின் மார்புகளால் தாக்கப்பட்டு நெஞ்சில் சந்தனக் காயம் ஏற்படுத்தி வந்திருக்கிறாய்... கசங்கிய ஆடைகளை மாற்றிவிட்டு வரக்கூடத் தோன்றவில்லை உனக்கு... ஆண் கொழுப்பு! வீட்டினுள்ளேயே உன்னை வர விட்டிருக்கக் கூடாது. வந்துவிட்டாய். ஆனால் என் உடல் உன்னை நெருங்காது. உன்னோடு பிணங்கப் போவதில்லை.... ஆனால், முயங்கவும் மாட்டேன்....' என்று மனதுக்குள் வீம்புடன் சொல்லியபடி கற்சிலையென இருந்தாள் மைதிலி.

"வந்தவனை வரவேற்கக்கூட மாட்டாயா?" என்று பரிதாபக் குரலில் கேட்டான் வாசன்.

அவள் இமைகளை உயர்த்தி நெருப்பை வீசினாள். 'நீ என் வீடு வர வேண்டாம். உன்னை நான் தழுவுவது, கழித்து எறிந்து விட்ட மட்பாண்டங்களைத் தொடுவது போன்றதுதான்....' என்று தனக்குள் சொல்லிக்கொண்டாள். வெளியே உதட்டில் அலட்சியச் சுழிப்பு ஓடியது.

"என்னைச் சேர்த்துக்கொள்ள மாட்டாயா?" வாசனின் இரகசியக் குரல் இறைஞ்சியது.

"நான் எதற்கு? உன்னை அணைத்து முயங்கும் அந்தப் பரத்தையிடமே போய் நெடுங்காலமும் வாழ்ந்திரு...போ!" என்று உஷ்ணச் சொற்களை உதிர்த்துவிட்டு அவனையும் உதறிப் பஞ்சணையில் வீழ்ந்தாள் மைதிலி.

***தொல்கவின் தொலையினும்***
***தொலைக சார விடேஎன் விடுக்குவென்***
***ஆயின் கடைஇக் கவவுக்கை***
***தாங்கும் மதுகை அம் குவவுமுலை***
***சாடிய சாந்தினை வாடிய கோதையை***
***ஆகில் கலம்கழீஇ அற்றும்***
***வாரல் வாழிய கவை இநின் றோளே.***
***(நற்றிணை - 350:5-10)***

# சிந்தியா பதில்கள்

**செச்னிய ஜனாதிபதித் தேர்தல் நீதியாக நடக்கவில்லை என மனித உரிமை அமைப்புகள் சொல்லியிருக்கின்றனவே?**

-சி.துஷ்யந்தன், மண்டூர்.

அதையெல்லாம் யார் கேட்டுக் கொண்டிருக்கப் போகிறார்கள்...பலமுள்ளவன் சொல்வதையே பத்திரிகைகளும் ஒத்துப்பாடும். நமக்குத் தெரியாததா என்ன!

**ஒடுக்கப்பட்டுத் துயரங்களை அநுபவிக்கும் மக்களின் விடுதலைக்காக குழந்தைகள் கொல்லப்பட்டாலும் அது தவிர்க்க முடியாததுதானா?**

-எம்.ஆறுமுகம், வெலிமடை.

கோரம்!......உண்மையில் வீரம் என்பது பிறரை அழிப்பதிலோ அல்லது தன்னையே அழிப்பதிலோ காட்டப்படுவதல்ல; பிறரையும் காப்பாற்றுவதில் காட்டப்படுவது.

**இலக்கியவாதிகள் ஏன் சினிமாவை வெறுக்கிறார்கள்?**

-நா.பிரியா, மொறகொட.

யார் சொன்னது? கல்கி, புதுமைப்பித்தன் காலத்திலிருந்தே சினிமா மீதும் ஈடுபாடு காட்டியே வந்திருக்கிறார்கள். இன்றளவும் முன்னுதாரணமாகப் பேசப்படும் 'உன்னைப் போல் ஒருவனை' இயக்கியவர் ஜெயகாந்தன். அசோகமித்திரன் சினிமாக் கம்பனி ஒன்றிலேயே பல காலம் வேலை பார்த்தவர். இன்று பல படங்களிலும் சுஜாதா இருக்கிறார் ரஜினியின் 'பாபா' படத்தில் எஸ்.ராமகிருஷ்ணன் சம்பந்தப்பட்டிருக்கிறார். லேட்டஸ்ட் தகவல் : வஸந்த் இயக்கப் போகும் ஒரு புதிய படத்திற்கு கதை, வசனம் இன்றைய சர்ச்சைக்குரிய எழுத்தாளர் ஜெயமோகன்.

**படைவலுச் சமநிலை, உரிமைப் போராட்ட இருதலை, முன் தடுப்பு வலு, அரசியல் ராணுவப் பொறி தகர்த்தல், வெளிச் சக்திகள் யுத்தத்தைத் திணித்தல்... இவையெல்லாம் என்ன சிந்தியா?**

-எம்.எஸ்.அஹமட் இப்ராஹீம், ஏறாவூர்.

"மக்களே! தமிழ் ரோசத்திற்காகச் சாகத் தயாராகுங்கள்!" (ஆஹா.....எழுதும்போதே எவ்வளவு 'கிக்' காக இருக்கிறது!)

**பார்த்திபனின் 'குடைக்குள் மழை'க்கு என்ன அர்த்தம்?**

-ஏ.எம்.அக்தர் பர்வீஸ், கெக்கிராவ.

குடை ஓட்டையாக இருக்கும்!

**கூட்டமைப்பு எம்.பி.க்களில் முதுகெலும்புள்ளவர்களே கிடையாதா?**

-கே.சண, கல்லடி.

அவர்களுக்குத் தேவை கதிரையும் உயிரும் முதுகெலும்பல்ல.

**'ஜக்குபாய்' கடைசியில் இல்லைபோல் தெரிகிறதே..... அப்போ ரஜினி?**

-க.கமால்தீன், ஏறாவூர் - 03.

பாய்....பாய்...!

**டெண்டுல்கருக்கு வந்துள்ள கை நோ இந்திய அணிக்கு பெரும் இழப்புதானே?**

-ச.அருள்மொழிவேந்தன், உக்கிளாங்குளம்.

அதை விட பெரிய இழப்பு, கை சரியாக இருந்தும் இல்லாததுபோல் விளையாடிக் கொண்டிருக்கும் ஷேவாக்கும், டிராவிட்டும்!

**மதங்கள், அறநூல்கள், மகாத்மாக்கள் எவ்வளவு போதனைகளைச் சொல்லியும் மனிதர்கள் திருந்தியதாகத் தெரியவில்லையே?**

-சோமசுந்தரம் மணி, செக்கடிபிளவு.

அவை, எல்லோரிடமும் அன்பாயிருக்கும்படியும், பிறர் செய்யும் கெடுதிகளை மன்னிக்கச் சொல்லியுமே உபதேசித்து வருகின்றன. ஆனால், மனிதர்கள் ஏன் ஒருவரை மற்றொருவர் கொல்லும் திறமைக்கு உயர்ந்த மதிப்புக் கொடுக்கிறார்கள்? கொலை தவறானது என்று ஒப்புக்கொள்ளும் மனிதர்களும், தங்களுக்குப் பிடிக்காதவர்கள் கொல்லப்படும்போது அந்தரங்கத்தில் நிம்மதியடைகிறார்கள்; பறவைகளுக்கு இறக்கைகளை வெட்டிக் கூண்டில் வைத்து ரசிக்கிறார்கள்; அதுபோலவே சில மனிதர்களும் தங்களுக்காக வேறு சிலர் சாவதை வரவேற்கிறார்கள்; தங்களுக்குக் கீழ்நிலையில் சிலரை வைத்துக் கொண்டு அவர்களிடம் அன்பு செலுத்துவதைக் காருண்யமாக நினைக்கிறார்கள்.... இதற்கெல்லாம் வேரைக் கண்டுகொள்ளாமல், எந்தப் போதனையாலும் மனிதன் திருந்தப் போவதில்லை.

**கவிப்பேரரசு வைரமுத்து பற்றி?**

-எஸ்.திலகேஸ்வரன், அம்பாகோட்டை.

கெட்டிக்காரர்தான், சந்தேகமில்லை! 'கலக்கப்போவது யாரு...நான்தான்' என்று கமல்ஹாசனுக்கும், 'ஜெயிக்கப்போவது நான்தான்' என்று ரஜினிக்கும் எழுதி... அரசியல்வாதிகளும், விருது வழங்குபவர்களும் வியந்து பார்க்கும்படியான கோடீஸ்வரராகி விட்டார்!

**அப்படியே சங்கதி?**

-சேனையூரான், செங்கலடி.


ஓமோம்!

**இன்று தமிழர் அரசியலில் புலிகளுக்கெதிரான மாற்றுக் கருத்துக் கொண்டிருப்போரையெல்லாம் 'துரோகிகள்', 'தமிழ் ஆயுதக் குழுக்கள்' என்ற இரு குறியீடுகளுக்குள் அடக்கி, அவர்களெல்லாம் கொல்லப்படுவது நியாயம் என்று எழுதும் பத்திரிகைகளை எந்த தர்மத்தில் சேர்ப்பது?**

-இ.வேல்முருகன், கொழும்பு - 13.

எந்த இழவிலாவது சேர்த்துக்கொள்ளுங்கள். முருகா...எனக்கு ஏன் இந்தச் சோதனை!

**அறிவாளிகளை எப்படி அடையாளம் கண்டுகொள்வது?**




-மனோ கோபாலன், ஹப்புத்தளை.

கேள்விகளுக்குப் பதில்கள் சொல்லிக்கொண்டிருக்கக் கூடும். கவனித்துப் பாருங்கள்! (என்னமோ எரியும் வாசனை வருகிறது...முதலில் தண்ணீரைக் குடியுங்கள்...ஹி....ஹி....)

**'இன்று கருணை என்பதே கிழங்கு வர்க்கத்தில்தான் காணக் கிடைக்கிறது' என்று புதுமைப்பித்தன் போன நூற்றாண்டில் எழுதியது இந்த நூற்றாண்டுக்கும் பொருந்துவதாகத்தானே இருக்கிறது?**

-பெ.விக்னேஸ்வரன், ஹட்டன்.

கருணை மட்டுமல்ல, அன்பு, நன்றி என்பதெல்லாம் கூட அபூர்வமான விஷயங்களாகிவிட்டன என்பதைச் சொல்லும் குமுதத்தில் வந்த கு.க. ஒன்று :

பஸ்ஸில் ஒரு பெண் ஏறினாள். ஓர் ஆண் எழுந்து அவளுக்கு இருக்க இடம் கொடுத்தான். அவள் மயக்கம் போட்டு விழுந்தாள். நினைவு தெளிந்து எழுந்ததும் சீற் கொடுத்தவனுக்கு நன்றி தெரிவித்தாள். இம்முறை அவன் மயக்கம் போட்டு விழுந்தான்.

**மினி உலகக் கிண்ணம் யாருக்கு?**

-ஆ.ஜீவகுமார், அக்கரப்பத்தனை.

கங்காரு நாட்டினரிடமிருந்து அதை இழுத்துப் பறிக்கக் கூடியவர்கள் காந்தி தேசத்தினர்தான் என்று எதிர்பார்த்தால்...'ஹரே ராம்' என்று கவிழ்ந்துபோய் கிடக்கிறார்கள். அத்தபத்து அணியினர் போகும்போது விரலை உயர்த்திக் காட்டிய வெற்றிச் சிரிப்பில் நம்பிக்கைகொள்ள மனம் விரும்பினாலும்.... 'பிளேயர்' நாட்டு மைதானத்தில் இவர்களின் முதல் 'பிளே'யைப் பார்த்த பிறகுதான் எதையும் சொல்ல முடியும். இப்போதிருக்கிற நிலைமையைப் பார்க்கையில்... அவுஸ்திரேலியாவுடன் இங்கிலாந்துக்காரர்கள் இறுதிப் போட்டிக்கு வர அதிக வாய்ப்புண்டு.

**கொலைகள் நின்றுவிட்டது பேச்சுவார்த்தை தொடங்குவதற்கான அறிகுறியாகத் தெரிகிறதா?**

-எஸ்.நிரஞ்சலா, கொழும்பு - 06.

அறிகுறி பார்த்து நோயைக் கண்டுபிடிக்கும் உங்கள் விளையாட்டுக்கு நான் வரவில்லை. வேண்டுமானால் உங்களுக்குப் பதிலாக ஒரு கு.க. :


ரவியின் தாய் அவனுடைய படிப்பைப் பற்றி மிகவும் கவலைப்பட்டாள். என்னவாக வருவான் என்று அறிந்துகொள்ளும் ஆர்வம் அவளைக் குடைந்தது. பையனை ஒரு மனோதத்துவ மருத்துவரிடம் அழைத்துப் போனாள். ஒரு சோதனை செய்து பார்க்கலாம் என்று கூறிய அவர், நேர்ஸிடம் சில பொருட்களை எடுத்துவர உத்தரவிட்டார். அவள் ஒரு சுத்தியல், ஒரு குறடு, ஒரு ஸ்குரூட்ரைவர் ஆகியவற்றைக் கொண்டுவந்து மேசையில் வைத்தாள்.

"பையன் சுத்தியலை எடுத்தால் தச்சன் ஆவான்; குறடை எடுத்தால் மெக்கானிக் ஆவான்; ஸ்குரூட்ரை எடுத்தால் எலக்ட்ரீஷியன் ஆவான்!" என்று மருத்துவர் கூற, எல்லோரும் வியப்புடன் பார்த்துக்கொண்டிருந்தனர்.

மேசையில் கிடந்த எதையும் திரும்பியும் பாராத பையன், பாய்ந்து சென்று நேர்ஸைக் கட்டிப்பிடித்துக்கொண்டான்.




உலகின் முதலாவது முக்கோண டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இங்கிலாந்து, அவுஸ்திரேலியா மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளுக்கு இடையில் நடைபெற்றுள்ளதாக அறிந்தோம். இப்போட்டிகள் லோட்ஸ், ஓவல், ஓல்ட் ட்ரபட், லீட்ஸ் மற்றும் நொடின்ஹம் ஆகிய மைதானங்களில் இடம் பெற்றுள்ளன. இம் ீமதானங்களின் வரலாறுகளை இங்கு நோக்குவோம்.



உலகின் முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலிய அணிக்கு தலைமை தாங்கிய டேவ் வில்லியம் கிரஹரி

லோட்ஸ் மைதானம் உலகிலேயே உள்ள மிகப் பழைமைவாய்ந்த மைதானங்களில் ஒன்றாகும். சர்வதேச கிரிக்கெட் நிர்வாகத்தை மேற்கொண்டு வருகின்ற 'சர்வதேச கிரிக்கெட் சம்மேளன'த்தின் தலைமையகம் இங்கு அமையப் பெற்றிருப்பதால் லோட்ஸ் மைதானம் முக்கிய இடத்தை வகிக்கின்றது.

உலகப் புகழ் பெற்ற லோட்ஸ் மைதானத்தை தோமஸ் லோட்ஸ் என்பவர் நிர்மாணித்துள்ளார்.

1787இல் லண்டன் நகரிலுள்ள டோர்செட் சதுக்கம் எனும் நகரில் இம் மைதானம் தோமஸ் லோட்ஸ் அவர்களால் முதன் முதலில் உருவாக்கப்பட்டுள்ளது. அதன்பின்னர் 'இஸ்லின்ங்டன்' எனும் இடத்துக்கு மாற்றப்பட்டு 1810ஆம் வருடம் வரை இவ்விடத்திலேயே இம்மைதானம் இருந்து வந்துள்ளது.

இதன் பின்னர் லோட்ஸ் மைதானம் தற்போது இருந்து வரும் புனித ஜோன்ஸ் வுட் மாவத்தை எனும் இடத்தில் 1814ஆம் வருடம் அமைக்கப்பட்டது.

தற்போது இயங்கி வருகின்ற லோட்ஸ் மைதானத்தில் இடம்பெற்றுள்ள முதலாவது கிரிக்கெட் போட்டி எம்.ஸி.ஸி. அணிக்கும் ஹார்ட்பட்ஷயர் அணிக்கும் இடையில் 1814, ஜுன் மாதம் 22ஆம் திகதி நடைபெற்றுள்ளது. இம் மைதானத்தில் இடம் பெற்றுள்ள முதலாவது முதல் தரப் போட்டி 1814 ஜுலை மாதம் 13ஆம், 15ஆம் திகதிகளில் எம்.ஸி.ஸி. அணிக்கும் புனித ஜோன்ஸ்வுட் அணிக்கும் இடையில் நடைபெற்றுள்ளதாக லோட்ஸ் மைதான வரலாறு கூறுகின்றது.

லோட்ஸ் மைதானத்தில் உத்தியோகபூர்வ டெஸ்ட் போட்டி முதன்முதலில் 1884ஆம் வருடம் ஜுலை மாதம் 21, 22, 23ஆம் திகதிகளில் இங்கிலாந்து அணிக்கும் அவுஸ்திரேலிய அணிக்கும் இடையில் நடைபெற்றுள்ளது. இதன்போது இங்கிலாந்து அணி, ஒரு இன்னிங்ஸிலும், 5ஓட்டங்களிலுமாக வெற்றியீட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

முதன் முதலில் துடுப்பெடுத்தாடியுள்ள அவுஸ்திரேலிய அணி 229 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. எச்.ஜே.எச்.ஸ்கொட் 75 ஓட்டங்களையும் ஜி.கிபன் 63 ஓட்டங்களையும் அவுஸ்திரேலிய அணி சார்பில் பெற்றுள்ளனர்.

இதற்கு எதிராக ஆடிய இங்கிலாந்து அணி 379 ஓட்டங்களைப் பெற்றது. இதன்போது ஏ.ஜி. ஸ்டீல் திறமையாக விளையாடி 148 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இங்கிலாந்து அணி சார்பில் ஜி.உல்யெட் மிகத் திறமையாகப் பந்துவீசி 36 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார். இதனால் மிகவும் பின்னடைவு கண்ட அவுஸ்திரேலிய அணி, தனது இரண்டாவது இன்னிங்ஸில் 145 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது. ஆக, லோட்ஸ் மைதானத்தில் இடம்பெற்றுள்ள முதலாவது உத்தியோகபூர்வ டெஸ்ட் போட்டியின் வெற்றியை இங்கிலாந்து தனதாக்கிக்கொண்டது.

இப்போட்டியின்போது இங்கிலாந்து அணிக்கு லோர்ட் ஹெலிஸும், அவுஸ்திரேலிய அணிக்கு டபிள்யூ.எல். மர்டொக்கும் தலைமை தாங்கியுள்ளனர்.

1972 ஆகஸ்ட் மாதம் 26ஆம் திகதிதான் லோட்ஸ் மைதானத்தில் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி முதல் தடவையாக நடைபெற்றுள்ளது. இதுவும் கூட இங்கிலாந்து



முதலாவது டெஸ்ட் போட்டியில் முதலாவது பந்தை வீசிய எல்பிரட் ஷோ.

அணிக்கும், அவுஸ்திரேலிய அணிக்கும் இடையிலேயே இடம்பெற்றுள்ளமையும், இப் போட்டியில் கிபன் செபலின் தலைமையிலான அவுஸ்திரேலிய அணி ஐந்து விக்கெட்டுகளால் வெற்றிபெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

உலகின் மிகவும் புகழ்பெற்ற லோட்ஸ் மைதானம் கிரிக்கெட் விளையாட்டின் 'பொற் கோயில்' என அழைக்கப்படுகின்றது.

இங்கிலாந்தின் மிடில்செக்ஸ் மாநிலத்துக்குச் சொந்தமான இம் மைதானத்துக்கு அருகில் 1787ஆம் வருடம் ஆரம்பிக்கப்பட்ட புகழ்பெற்ற மார்லிபோன் கிரிக்கெட் கழகத் தலைமையகம் அமைந்துள்ளது.

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் நான்கினது (1975, 1979, 1983, 1999) இறுதிப் போட்டிகள் இம்மைதானத்திலேயே நடாத்தப்பட்டுள்ளன.


உலகின் முதலாவது முக்கோண டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இடம்பெற்றுள்ள லோட்ஸ் மைதானம் பற்றி அறிந்தோம். ஓவல் மைதானம் பற்றி 10ஆம் அத்தியாயத்தில் பார்த்தோம். ஏனைய மைதானங்கள் குறித்து அடுத்த அத்தியாயத்தில் அறிவோம்.

**-மைந்தன்.**

**விஜயகாந்த் தனிக்கட்சி அமைப்பார்**
**-லியாகத் அலிகான்**
**தவிர்க்க முடியாத காரணங்களினால் அடுத்த வாரம் பிரசுரமாகும்**

## 4ஆம் ஆண்டு நினைவில்

மண்ணில் 13 - 03 - 1951



விண்ணில் 12 - 09 - 2000

**பி. அரியதாசன் J.P.**

அரசாங்க ஒப்பந்தகாரர் ICTAD, உரிமையாளர் 'றஞ்சனாஸ்' மன்னார்

"கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள்
இது முதல் பாக்கியவான்கள்"

என்றும் நினைவுடன்
மனைவி : மலர், பிள்ளைகள்: விமால், றஞ்சனா,
உறவினர்கள், நண்பர்கள். பெற்றா மன்னார்- 023-2232434






**மின்சார உலகின் வேகத்திற்கு ஏற்ப மனிதனுடைய பிறப்பு,இறப்பு பற்றிய விரிவான விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டிய அவசியமற்ற இவ்வுலகில் மானிடத் தேவைக்கு ஏற்ப விரைவாக அவர்களது பிறப்பு எண்ணையும் (திகதி) பிறந்த கிழமையினையும் (திங்கள் - ஞாயிறு) கொண்டு தீர்க்கமாக என் அருள் ஞான ஜோதிட சித்தத்தில் கணிக்கப்பட்ட சுருக்கமான உங்கள் பலா பலன்களாகும்.**

**சொல்பவர் :**
**ஜோதிட அறிஞர், பேராசிரியர்,**
**டாக்டர் பீ.கே. சாமி J.D.G.A.N.,**
**(J.P.சமாதான நீதிபதி, கொழும்பு - இலங்கை)**

## ஆதிக்கம் 4: பிறந்த கிழமை ஞாயிறு

நான்மறை, நாநிலம், நாற்திசை இவற்றின் சேர்க்கைக்குத் தனிச் சிறப்பு உண்டு. ஞாயிறு பிரகாசம், ஒளியின் வல்லமையுள்ள தினம். ஓய்வுக்கும் அமைதிக்கும் ஆனந்தத்திற்கும் காரணமான தினம் இது. இவ்வாறான தித்திக்கும் இனிப்பான தினத்திலும் ஆதிக்க எண்ணான 4இலும் பிறந்துள்ள நீங்கள் திறந்த மனமும், விரிவான நோக்கமும், பரந்த இதயமும் உடையவர்.

குளம் அமைதியாக இருக்கும்? ஆனால், அதன் ஆழத்தில் முதலைகள் இருக்கலாம். கடல் ஆர்ப்பரிக்கும். ஆனால், எந்த அழுக்குகளையும் கடல் தன்னுடன் வைத்துக் கொள்வதில்லை. கடலின் அலையோசைபோல் நீங்கள் சத்தம் போட்டுத்தான் பேசுவீர்கள். ஆனால் ஆபத்தானவர் அல்லர். அன்பும் கருணையும் நிறைந்தவர்.

இரகசியம், பரகசியம் என்பதற்கு அர்த்தம் தெரியாதவர்களாக இருப்பீர்கள். எதனையும் வெளிப்படையாகவே கூறுவீர்கள். மற்றவர்களின் நயவஞ்சகத்தன்மை, ஏமாற்றுப் புத்தி என்பவற்றை நீங்கள் தெரிந்திருக்க நியாயமில்லை. பிறருடன் அன்பைக்கொடுத்து சந்தோசம் காண்பீர்கள். முன்கோபம் அடிக்கடி உங்களுக்கு ஏற்படும். திடீரென கோபம் அடங்கிவிடும். எந்தக் காரியத்தையும் விரைவாகச் செம்மையாக அழகாகச் செய்யும் எண்ணம் கொண்டவர் நீங்கள்.

பிறர் செய்யச் சிரமப்படும் காரியங்களை நீங்கள் இலகுவாகச் செய்து முடிப்பீர்கள். உதாரணமாகக் காகிதத்தில் சித்திரம் வரைவதற்குக்கூட சிலருக்குக் கடினமாகவும் சிரமமாகவும் இருக்கும். ஆனால், நீங்கள் கல்லில் மிக இலகுவாகச் சிலை வடிப்பீர்கள். அந்தளவுக்கு அரிதான காரியங்களைச் செய்யக்கூடிய திறன் உங்களுக்கு உண்டு. நீங்கள் வாழ்நாளில் பல நாள் கஷ்டத்திலும் சில நாள் இன்பத்திலும் வாழ்வீர்கள். ஆனால், வருமானம் குறைவுபடாது.

கல்வியைப் பொறுத்தவரையில் ஓரளவுதான் படித்திருப்பீர்கள். உடலை வளைத்து வருத்தி வியர்வை சிந்தித்தான் உழைக்க வேண்டிய தேவை உங்களுக்கு இருக்கிறது. இருந்தாலும் மனத்திடமும் எதையும் சாதிக்கும் வல்லமையும் உங்களுக்கு நிறையவே இருக்கின்றது. மனதைத் தளரவிடாமல் முன்னேற்றத்தை அடைவீர்கள். துன்பமான நிலையிற்கூட வெளியே காட்டிக் கொள்ளாமல் சந்தோசமாகவே இருப்பீர்கள்.

அன்பும் இரக்கமும் உங்கள் இரு கண்கள். அந்தளவுக்கு பிறர்மீது அன்பு செலுத்துவீர்கள். அத்தோடு பிறரின் துன்பத்தையும் போக்குவீர்கள். உதவி புரிவீர்கள். 25 வயதுக்குப் பின்னர்தான் தொழிலைப் பொறுத்த வரையில் முன்னேற்றம் நிகழும். 34 வயது வரை வருமானம் சமநிலையில் காணப்படும். 35 வயதிலிருந்து வருமானமும் இலாபமும் பெருகும். 44, 47, 50, 53, 56 இந்தக் காலங்களில் அடிக்கடி சில சிரமங்கள் ஏற்பட்டாலும் வருமானத்திற்கு எந்தக் குறைவும் ஏற்படாது. 57 வயதிலிருந்து ஆயுள்வரை சந்தோசமாகவும், நிம்மதியாகவும் வாழ்வீர்கள்.

7ஆவது வயது, 21ஆவது வயதுக் காலங்களில் உடல் நலக்குறைவு ஏற்பட்டுக் குணமாகும். இதன் பிறகு ஆயுள் வரை ஆரோக்கியமாக வாழ்வீர்கள். அடிக்கடி மயக்கம், கிறுகிறுப்பு, வாய்க்கசப்பு, வாந்தி போன்றவை ஏற்படும். இதற்குக் காரணம் பித்த சம்பந்தமான தேகம் உங்களுக்கு இருப்பதேயாகும். பித்தத்தை ஏற்படுத்தும் உணவு வகைகளைத் தவிர்த்துப் பித்தத்தைத் தணிக்கும் ஆகாரங்களைத்தான் நீங்கள் சாப்பிட வேண்டும். இஞ்சி, இலந்தைப்பழம், எருமைத் தயிர், எலுமிச்சம்பழம், எள்ளு, கத்தரிப்பிஞ்சு, சீரகம், தேங்காய், நெல்லிக்காய், பசுநெய் போன்றவை.


பிறப்பெண் 4இல் நீங்கள் பிறந்திருந்தாலும் உங்களுக்குச் சந்தோசத்தினையும் மன நிம்மதியினையும் தருகின்ற அதிர்ஷ்ட எண் 6ஆறு. ஆகவே மாதத்தில் வருகின்ற 6, 15, 24, திகதிகளில் நீங்கள் நல்ல காரியங்களைச் செய்யுங்கள். சித்தியும், வெற்றியும் கிடைக்கும். இந்தத் திகதிகள் ஞாயிற்றுக்கிழமையில் அமையுமாக இருந்தால் விசேட பலன் கிடைக்கும்.

வெள்ளை நிற ஆடைகளை விரும்பி அணியுங்கள். அதிர்ஷ்டமும் யோகமும் உங்களுக்குண்டாகும். மோதிரம் அணிய ஆசையா? வைரக்கல், புஷ்பராகம், இமிடேசன் வைரம், முத்து பதித்த தங்க மோதிரம் அணியுங்கள். நீங்கள் வசிக்கும் மனையின் இலக்கங்களை இப்படி அமைத்துக் கொள்ளுங்கள். 6, 15, 24, 33, 42, 51, 60 போன்ற எண் ஆறு கூட்டுத்தொகை வரக்கூடியதாக அமைத்துக் கொள்ளுங்கள்.

ஆகவே, ஆதிக்க எண் 4ஐயும் பிறந்ததினம் ஞாயிற்றுக்கிழமையினையும் கொண்ட நீங்கள் வாழ்க்கையில் சகல அதிர்ஷ்டங்களையும் பெற என் நல்லாசிகள்.

ஞாயிறு நான்கோடு இணைந்து ஆயிரம் யோகம் உண்டு. வாழ்வில் ஞாலம் ஆளும் பாக்கியமுண்டு. தேயாத செல்வம் கோடி உண்டு.

**அடுத்து ஆதிக்கம் 5 திங்கட்கிழமை பிறந்தவர்களைப் பற்றிப் பார்ப்போம்**



“மாஜிக் தந்திரங்கள்” குறித்த பயிற்சியும் அதனோடு ஒட்டிய சுவைமிகு தகவல்களும் தொடர்ந்து வெளிவரும். மாஜிக் பிரியமுடைய நீங்களும் மாஜிக் நிபுணராகத் திகழ எமது வாழ்த்துக்கள்.

# மாஜிக் தந்திரங்கள்

இந்த விதமாகப் பரணிலிருந்து எடுப்பது போலவும், ஸ்ரூலிலிருந்து எடுப்பது போலவும், மேடையின் பக்கம் இருந்து எடுப்பது போலவும், மேசை மீதிருந்து எடுப்பது போலவும், ஆகாயத்திலிருந்து எடுப்பது போலவும், சபையில் உள்ளவரின் ஜேபியிலிருந்து எடுப்பது போலவும், ஒன்பது ரூபாயை எடுத்துவிட்டு, பத்தாவது ரூபாயை குவளையில் போட்டுவிட வேண்டும்.

அதன்பின் குவளையைக் குலுக்கிக் குலுக்கி காண்பித்து அதை உள்ளங் கையில் கொட்டி பத்து ரூபாயை எண்ணிக் காண்பித்துக் குவளையிலேயே போட்டு, காட்சியை முடித்துவிட வேண்டும்.

குறிப்பு :- இந்தக் காட்சியை நடத்தும்பொழுது குவளையில் ஒவ்வொரு ரூபாயாக சரியான நேரத்தில் நழுவ விட்டுக்கொண்டேயிருக்க வேண்டும். ரூபாயை உள்ளே போடுவது போல பாவனை செய்யும்பொழுது அதேநேரத்தில் ரூபாயை நழுவ விட வேண்டும். ஒவ்வொரு முறையும் கவனமாக ரூபாயை நழுவ விட வேண்டும்.

கையில் வைத்திருக்கும் ரூபாயைத் தந்திரமாக வெளியே எடுத்து சபையோருக்குக் காண்பித்து குவளையில் போடும்பொழுது, தந்திரமாக மறைத்துக்கொள்ள வேண்டும்.

## காலி அலுமாரியில் பல பொருள்களை வரவழைத்தல்

இந்தக் காட்சிக்குத் தனிப்பட்ட முறையில் ஓர் அலுமாரி தயாரிக்க வேண்டும். இதற்கு மூன்று தட்டுகள் வைக்க வேண்டும். இந்த அலுமாரியின் உயரம் ஒரு மீட்டர் இருக்க வேண்டும். 70 செ.மீ. அகலம் இருக்க வேண்டும். குறுக்களவு 15 செ.மீ. இருக்க வேண்டும். இதன் பக்கப் பலகைகள் ஒரு செ.மீ. கனம் இருக்க வேண்டும். இந்த அலுமாரிக்கு முன் பக்கம் இரண்டு கதவுகள் அமைக்கப்பட்டு, ஒரு பாட்லாக்கும் அமைக்கப்பட வேண்டும்.

இந்த அலமாரியிலுள்ள மூன்று தட்டுகளையும் உயரப் பலகை அதாவது பக்கப் பலகையில் இணைத்துவிட வேண்டும். இந்தத் தட்டு, அரை செ.மீ. கனத்திலிருக்க வேண்டும். இந்த மூன்று தட்டுகளைப் போலவே அதே கனத்தில் அதே அளவில் மூன்று தட்டுகள் தயாரிக்க வேண்டும்.

அலமாரியில் உள்ள மூன்று தட்டுகளுக்கும் மேலே ஒவ்வொரு தட்டுக்கும் ஒரு தட்டு வீதம் இதை வைக்க வேண்டும். பின் பகுதியில் இரண்டு பலகைக்கும் சம அளவில் இரண்டு கீல் வைத்துத் திருகிவிட வேண்டும். இந்தத் தட்டுகள் ஒவ்வொன்றிற்கும் ஒரு சம அளவான இடைவெளி இருக்க வேண்டும். இப்படி ஒவ்வொரு தட்டிற்கும் மேலே மற்றொரு தட்டு வைத்து கீல் வைக்கப்பட்டிருப்பதால் மேல் தட்டைத் தூக்கினால் அது கதவு போல பின் பகுதியை மூடிக் கொள்ளும். ஆனால் இந்த மூன்று தட்டுகளையும் பின் பக்கமாகத் தள்ளி மூடினால் அது அப்படியே இறுகலாக நிற்க வேண்டும். முன் பக்கம் சாய்ந்து விழக் கூடாது. அதே நேரத்தில் பின் பக்கமிருந்து முன் பக்கம் தள்ளினால் அது முதல் தட்டின் மேல் படிமானமாகப் படிந்துவிட வேண்டும். இந்தவிதமான ஓர் அலமாரி செய்து அதற்கு கருங் காலி மரம் போல பாலீஷ் செய்துவிட வேண்டும்.

பிறகு இந்த அலமாரியின் பின் பக்கம் ஒரு திரை இணைக்க வேண்டும். இந்தத் துணி வழுவழுப்பாக அலமாரி மரத்தின் நிறத்திலேயே இருக்க வேண்டும். இரண்டாவது தட்டை முதல் தட்டின் மேல் படுக்க வைத்து விட்டால் பின்பகுதி திறவையாக இருக்கும்.

இந்தப் பகுதி சபையோருக்கு திறவையாகத் தெரியக்கூடாது. எனவே தான் பின் பகுதிக்கு அலமாரி நிறத்திலேயே திரையிட்டுவிட்டால் சபையோருக்கு அது பின் பலகை போலத் தோன்றும்.

இந்த வகையில் ஓர் அலமாரி தயாரித்தபின் ஒவ்வொரு தட்டிலும் வெவ்வேறு விதமான பொருள்களைப் பார்வையாக வைக்க வேண்டும். முதல் தட்டு அதாவது மேல் தட்டில் டம்ளர்கள், செம்புகள் மற்றும் ஏதாவது பாத்திரம் இவற்றை அழகாக வைக்க வேண்டும்.

இரண்டாவது தட்டில் பழங்கள், காய்கள் இவற்றை அழகாக அடுக்கி வைக்க வேண்டும்.

மூன்றாவது தட்டில் பொம்மைகள், குதிரை, யானைகள், பொம்மை வண்டி, ஏரோப்ளேன், ரயில் வண்டி இவற்றை அழகாக அடுக்கி வைக்க வேண்டும். இவை பக்க பலகைக்கு ஒரு செ.மீ. இடைவெளியுடன் வைக்க வேண்டும்.

அதன்பின் ஒவ்வொரு தட்டிலுமுள்ள பொருள்களை அந்தப் பலகையுடன் ஆணி வைத்து அடித்தோ, பசை கொண்டு ஒட்டியோ பலகையுடன் இணைத்துவிட வேண்டும். இந்தப் பலகை அசைந்தாலும் பொருள்கள் கீழே விழக்கூடாத அளவில் இருக்க வேண்டும். இப்படி தட்டுப் பலகையுடன் பொருள்களை இணைத்தபின் இந்தத் தட்டைத் தூக்கிப் பின்பக்கமாகச் சாத்திவிட்டால் அந்தத் தட்டில் ஒன்றும் இல்லாததுபோலவே இருக்கும். இதே போல மற்ற இரண்டு தட்டுகளையும் பின்புறமாகச் சாத்திவிட்டால் அலமாரி முழுவதும் காலியாகத் தோன்றும். பின்னால் சாத்தப்பட்ட தட்டுகளை முதல் தட்டின் மேல் படுக்க வைத்தால் அலமாரியின் பொருள்கள் நிறைந்திருப்பதாகத் தோன்றும். பின்னால் அலமாரியின் நிறத்தில் திரைவிட்டிருப்பதால் முன்னாலிருந்து பார்ப்பவர்களுக்குப் பொருள் நிறைந்த அலமாரி போலவே தோன்றும்.

பொருள் நிறைந்த தட்டுகளை முன் பக்கம் இறக்கவும், பின் பக்கம் சாத்தி விடவும், இந்தத் தட்டுகளின் பின்புறம் பொருள்களுக்கு இடையே கடைசிப் பகுதியில் ஒரு கொக்கியையோ, பட்டனையோ இணைத்துவிட வேண்டும்.

இந்தக் காட்சியை நடத்தும் முன், மேடைக்கு முன் திரையிட்டு இருக்க வேண்டும். மேடையில் இரண்டு ஸ்ரூல்களைப் போட்டு, அதன் மேல் அலமாரியை வைத்துவிட வேண்டும். சாமான்கள் வைத்த தகட்டை முதல் தட்டின் மேல் இறக்கி வைத்துவிட வேண்டும். அலமாரியைச் சாத்தி அதன் மேல் கறுப்புத் துணியைப் போட்டு மூடிவிட வேண்டும்.

முன் திரையை நீக்கிவிட்டு, காட்சியாளர் கையில் மந்திரக் கோலை எடுத்துக்கொண்டு மேடைக்கு வர வேண்டும். மேடையிலுள்ள அலமாரியின் மேல் மூடப்பட்டுள்ள கறுப்புத் துணியை எடுத்துவிட்டு, அதன் இரண்டு கதவுகளையும் திறந்துவிட்டு, உள்ளே உள்ள பொருள்கள் பார்வையாளர்களின் கண்களில் படும்படி செய்ய வேண்டும்.

பிறகு, திறந்த கதவு திறந்திருக்க, காட்சியாளர் அலமாரியின் பக்கத்தில் போய் நின்று கறுப்புத் துணியைப் போட்டுவிட்டு, கதவின் மறைவில் இடது கையை அலமாரியில் வைத்து, சாமான் உள்ள தட்டை பின்புறமாக இழுத்து இடைவெளியை மறைத்துவிட வேண்டும்.

(தொடர்ந்து வரும்..........)

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை.

*-காதில பூ கந்தசாமி-*

யாழ்ப்பாணத்தில உதயமாகிற பத்திரிகைக் காரியாலயமொண்டுக்குள்ள மீனவர்கள் புகுந்து ரகளை பண்ணியிருக்கினமெண்டு கேள்விப்பட்ட உடன எனக்குப் பாருங்கோ நெஞ்சு பொறுக்கேல்லையுங்கோ. என்னயிருந்தாலும் நானும் ஒரு பத்திரிகைக்காறன். அதுவும் காதில பூவெண்டு பட்டப் பெயர் பெற்ற பெரிய மனிஷன். சக பத்திரிகையொண்டு சங்கடத்தில மாட்டியிருக்கேக்க. உதவிக் கரம் நீட்டாட்டால் சரியில்லைத்தானே! சொல்லுங்கோ. உடன எடுத்தன் ஒரு கோல், அந்தப் பத்திரிகைக்கு.

எடுத்த கையோட ஒருத்தி சிங்களத்தில பேசினாள். இதென்னடா, எங்கட சுந்தரத் தமிழ்ப் பத்திரிகை எப்பயிருந்து சிங்களமாய் மாறினதெண்டு திகைச்சன். ஒருவேளை மீனவர் புகுந்த வேகத்தில எல்லாரும் விட்டிட்டுப் போனதால, பொலிஸ்க்காறர்தான் பாரமெடுத்திருக்கினமோ எண்டெல்லாம் யோசினைகள் ஓடிக்கொண்டிருக்க, அடுத்ததா இன்னொருத்தி வந்து இங்கிலீஷில பேசினாள். டக்கெண்டு உசாராகிக் கொலரைப் பூட்டிக்கொண்டு, ‘யா,’ ‘யா’ எண்டன். ஒரு சொல்லும் விளங்கிறதாக் காணேல்லை. நல்ல காலம் கடைசியா ஒருத்தி தமிழில பேசினாள். அட, யாழ்ப்பாணத்துக்கு கோட் நம்பர் மாறியிருக்காம், ஒரு மூண்டு ரெண்டை முன்னுக்குப் போட்டிட்டு நம்பரைச் சுத்தட்டாம்.

இந்தக் கேடிள்ஸ் எல்லாத்தையும் தாண்டி ஒரு மாதிரி எடிட்டரைப் பிடிச்சன் ஃபோனில. ஆனால் பாருங்கோ, குருநகர்ப் பிரச்சினை என்னெண்டு கேக்க வெளிக்கிட்ட உடனயே ஆள் போஃனைக் கட் பண்ணிப் போட்டுது. ரெண்டு மூண்டு தரம் ட்ரை பண்ணியும் ஒரே கட்தான். என்னடா செய்யலாமெண்டிட்டு டக்கெண்டு குரலை மாத்தி லண்டனில இருந்து ஒரு கோலெண்டு சொன்னன். அவ்வளவுதான். ஆள் உடன லைனுக்கு வந்தார்.

“ஐயா, எடிட்டர், அது நான்தான் உங்கட பெஸ்ட் ஃபிரண்ட் காதில பூ. ஏனையா கோலெடுத்த உடனயே கட் பண்ணிறீர்” எண்டன்.

அது...... நான் எடுத்தாப்போல குருநகர்ப் பிரச்சினையெண்டு துடங்க, எக்கணம் அங்கத்தய ஆக்கள்தான் திரும்பவும் போனெடுத்துத் திட்டப் பாக்கினமெண்ட பயக்கெடுதியில கட் பண்ணினவராம், நானெண்டு தெரியாமப் போச்சாம்.

“எல்லாஞ் சரி, ஏனப்பா உந்தப் பொல்லாப்பு? ஊர்ச் சனம் ஒண்டு திரண்டு வந்து திட்டிற அளவுக்கு என்னப்பா அப்பிடி மோசமாய் எழுதினனீர்” எண்டு கேட்டன்.

எழுதினதில்லப் பிரச்சினையாம். எழுதாம விட்டதுதான் பிரச்சினையாம். ஏதோ ஒண்டு நடக்க, அதை எழுதாமல், வேற ஏதோ எழுதிச் சமாளிக்கப் பாத்திச்சினமாம். அவங்கள் கொஞ்சம் ரோசமுள்ள சனம். கொதிச்செழுந்து வந்து கொலரைப் பிடிச்சுக் கேட்டிருக்குது.

‘ஏனையா, உங்களுக்கு நாங்கள் காட்ஸ் விளையாடினால் தெரியுது. குடும்ப சச்சரவு நடந்தாத் தெரியுது. சூடு விழுந்தது, படகு எரிஞ்சது, ஆக்களப் பிடிச்சது, அடிச்சது ஒண்டுமே தெரியேல்லையோ? பத்திரிகையா நடத்திறியள்? கண் முன்னால நடந்த ஓண்டக் கதை மாத்தி எழுதுறியளோ?’ எண்டு கேட்டுத் தள்ளிப் போட்டாங்களாம்.

“அது சரி ஆசிரியரே, சனங்கள் ஆத்திரப்படுங்களெண்டு தெரிஞ்சும், ஏன் நீங்கள் மாத்தியெழுத வெளிக்கிட்டனீங்கள்” எண்டு கேட்டன்.

“மோட்டுக் கேள்வியெல்லோ கேக்கிறீர்? ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம், இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம் எண்ட நிலையையா எனக்கு. முடவன் கோவிச்சாலும் பரவாயில்லை, பேச்சோட போயிடும். எருது கோவிச்சால் ஏறி உழக்கியெல்லே போடும். அதுதான் ஏத்தி எழுதாமல் இறக்கி எழுதியிருந்தனான்” எண்டார்.

“மெத்தச் சரி. மெத்தச் சரி. சனங் கோவிச்சலென்ன, யார் கோவிச்சாலென்ன, கோபிக்கக் கூடாதவை கோவிச்சுப் போடாமல் பாத்துக் கொள்ளுறதுதான் புத்தி. எண்டாலும் பாரும், இப்பிடியான விஷயத்தில அப்பட்டமா வக்காலத்து வாங்கிறதாக் காட்டிக்கொள்ளாமல் எழுதத் தெரிய வேணும். அதைத் தான் பாரும் ஜாணசிலிம் எண்டு சொல்லுறது” எண்டு புத்தி சொன்னன்.

“அதென்னவோ இவ்வளவு காலமும் வக்காலத்து வாங்கியே எழுதிப் பழகி, எழுத்துப் பாணி அப்பிடியே பிஸின் போட்டு ஒட்டினாப்போல படிஞ்சு போட்டுது. பேப்பரோட பிரிச்செடுத்தால் பேப்பரே கிழிஞ்சிடும் போல பற்றிப் பிடிச்சிட்டுது. இனியெப்பிடித் திருத்திறது சொல்லும்” எண்டார்.

“அது ஒண்டும் பெரிசாத் திருத்தத் தேவையில்லை பாரும். கொஞ்சம் டிப்ளோமட்டிக்கா நடந்து கொண்டால் சரி வரும். அதென்னண்டாப்பாரும், சனத்துக்காகக் குரல் குடுக்கிற மாதிரி நாலு கேள்வியக் கேக்கிறது. குருநகர் மீனவரைத் தாக்கியது யார்? எண்டு உசாராக் கேக்கிறது. ( கவனம்! உசாராப் போய் யாரெண்டு மட்டும் சொல்லப் போயிடாதயும் - பிறகு உம்மைத் தாக்கியது யார் எண்டு கேக்க எவரும் சொல்லத் துணிய மாட்டினம்.) சனம் கொஞ்சம் சாந்தப்பட்டவுடன, மெல்ல மெல்ல வேற கதைகள விடுறது. இது தேசத் துரோகிகளின்ரயும் உளவுப் படைகளின்ரயும் சதி வேலைதான் எண்டு சொல்லிக் கதைய முடிக்கிறது. அதை விட்டிட்டு எடுத்த எடுப்பிலேயே அப்பட்டமான பொய்யை அப்பிடியே எழுதப் போனால் யாருக்குக் கோபம் வராது” எண்டு எடுத்துச் சொன்னன்.

“விளங்கிட்டுது. விளங்கிட்டுது. இனிமேல் அப்பிடித்தான் எழுத வேணும். உம்மை மாதிரி ஒருவர் புத்தி சொன்னாத்தான் எல்லாம் புரியுது. தாங்ஸ்” எண்டு விடை பெற்றுக்கொண்டார்.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்


(09.09.2004 தொடங்கி 15.09.2004 வரை)

## சோதிட மாமணி தில்லை


### இந்த வாரக் கிரக நிலை

சிங்கம் - சூரியன், செவ்வாய், புதன், கன்னி - வியாழன், துலாம் - கேது, மேடம் - இராகு கர்க்கடகம் - சனி, வெள்ளி


சந்திரன் கர்க்கடகம், சிங்கம், கன்னி, துலாம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.




**மேடம்** : (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) தொழில் நிலை மாற்றம், தொழில் மந்தம், பொருள் விரயம், தூர இடப் பயணம், பொருள் இழப்பு, குடும்ப நன்மை, உறவினர் உதவி, உத்தியோக சிரமம், மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05**




**இடபம்** : (கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருக சீரிடத்து முன்னரை) தொழில் சிறப்பு, காரியானுகூலம், இனசன நன்மை, பெரியோர் சகாயம், குடும்ப சிறப்பு, உத்தியோக உயர்ச்சி, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06**




**மிதுனம்** : (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்) தொழில் கஷ்டம், பண வரவு தடை, பிரயாண மிகுதி, எதிர்பாராச் செலவு, உத்தியோக மாற்றம், மனக் கிலேசம், மாணவர் கல்வி மந்தம், பரீட்சையில் கவனமின்மை, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07**



**கர்க்கடகம்** : (புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.) தொழில் கஷ்டம், வீண் பிரயாசம், பெரியோர் உதவி, கௌரவம், குடும்ப நன்மை, உத்தியோகக் கலக்கம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05**




**சிங்கம்** : (மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) தொழில் சிரமம், வீண் மனஸ்தாபம், வெளியிட வாழ்க்கை, அன்னியர் சகவாசம், பெரியோர் நன்மை, உத்தியோகச் சிறப்பு, மனக் குறை நீங்கும், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04**




**கன்னி** : (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) தொழில் கலக்கம், பெரியோர் நட்பு, இனசன மகிழ்ச்சி, குடும்ப நன்மை, உத்தியோகப் பேறு, மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06**




**துலாம்** : (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்) தொழில் பலிதம், செலவு மிகுதி, உற்சாகம் குறைவு, குடும்ப நன்மை, உத்தியோக சிறப்பு, புதிய பதவி நன்மை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02**




**விருச்சிகம்** : (விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை ) தொழில் பலிதம், பலவித சிறப்பு, உயர்ந்த நிலை, காரியானுகூலம், குடும்ப மகிழ்ச்சி, உத்தியோக மேன்மை, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 05**




**தனு** : (மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) தொழில் கலக்கம், மன மகிழ்ச்சி, வீண் பிரயாசம், அன்னியர் நட்பு, உத்தியோக மாற்றம், மாணவர் கல்வி மேன்மை, புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01**



**மகரம்** : (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) தொழில் நன்மை, பாரிய முதலீடு, கடன் தொல்லை நீங்கும், குடும்ப மகிழ்ச்சி, உத்தியோக கஷ்டம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03**



**கும்பம்** : (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்) தொழில் மந்தம், காரியத் தடை, பிரயாச மிகுதி, திடீர்ப்பயணம், குடும்ப நன்மை, உத்தியோகக் கலக்கம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06**



**மீனம்** : (பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) தொழில் சிறப்பு, கௌரவம், பெரியோர் நட்பு, இனசன மேன்மை, குடும்ப நன்மை, உத்தியோக மகிழ்ச்சி, புதிய பதவி மேன்மை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07**

Regd. as a News Paper at the G.P.O.(QD/81/NEWS/2004)


## மாணிக்கங்கள்



நேரில் வருபவர்களுக்கு மட்டுமே இந்தப் பாக்கியம்.
ஒவ்வொரு பிரச்சினைக்கும் அபூர்வமாகச்
செயற்படக்கூடிய அபூர்வ சக்தியுள்ள மாணிக்கக் கற்கள் உண்டு.
முதலில் ஜாதகக் கணிப்பைப் பார்வையிட்ட பின்னரே
தெய்வீக உரு செய்து கொடுக்கப்படும்.
தேவையானவர்கள் மட்டுமே நேரில் வரவும்.

**பேராசிரியர். டாக்டர் பி.கே.சாமி J.D.G.A.N.JP**
**இல. 162 கொட்டாஞ்சேனை வீதி,**
**கொழும்பு — 13.**
**தொலைபேசி — 2342463, 2342464**





## நிபுணத்துவ கைரேகை



கைரேகை என்பது ஒரு கடல் போன்றது. அப்படியே அதை ஆராய்ச்சி செய்வதென்றால் ஆதி பராசக்தியின் அருட்கடாட்சம் வேண்டும். இக் கூற்றுக்கமைய உலக நாடுகளுக்கு சென்று கைரேகைக் கலையை அக்குவேறு ஆணிவேறாக அலசி ஆராய்ந்து நிபுணத்துவம் பெற்ற என்னைச் சந்தியுங்கள். உங்கள் கைரேகையை பார்த்துப் பலா பலனை தெரிந்து கொள்ள முன்னறிவித்தலுடன் வந்தால் கைரேகை வாசிக்க காலநேரம் கொடுக்கப்படும்.



Tel: 2344832

**கே.கங்காதரன் (M.A) J.P.**
162, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு-13.
Booking Time 4.00 p.m To 7.00 p.m Only


# வண்ணம்....

சின்னச் சின்னக் கிரீடங்களைச் சுமந்துகொண்டிருக்கும் இந்த நத்தையினம் ஆழ்கடலில் வாழ்கின்றது. இதை ஒவியுலா ஓவியம் என்று அழைக்கின்றனர். தன் முட்டைகளை உடல்மேல் சுமந்து திரியும் இது மற்றைய உயிரினங்களிடமிருந்து தன்னைக் காத்துக்கொள்வதற்காக உருமறைப்புச் செய்து கொள்ளக்கூடியதாகும். கால்கள் இல்லாததால் ஊர்ந்துசெல்கின்றது. பார்வை தெளிவாகத் தெரியாத- ஆனால், ஒளியை மட்டும் கொண்டு கிரகிக்கக்கூடிய அற்புதம் கொண்டது. 12 c.m. நீளம் கொண்ட உருவம். நரம்புத் தொகுதி விருத்தியடைந்த முதல் உயிரினம் என்கின்றனர் விஞ்ஞானிகள்.

## 1 ஆவது பிறந்தநாள் வாழ்த்து



08
09
2004

## சுஜன் சிவகுமார்

Germany uhland str 16A இல் வசிக்கும் சிவகுமார் - ரஞ்சினி தம்பதிகளின் தவப்புதல்வன் சுஜன் தனது முதலாவது பிறந்தநாளை 11.09.2004 சனி அன்று Broken Burlo Germany இல் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். சுஜனை அன்பு அப்பா - அம்மா, மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், மச்சான்மார், மச்சாள்மார், சித்திமார், சித்தப்பாமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் அருளால் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்: சிவகுமார் (அப்பா).
Uhland str-16A, 46397 Bocholt, Germany, T.P: 028712384547

## 2 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

### செல்வன் இ. பிரவீன்



**07 . 09 . 2004**

London இல் வசித்து வரும் இதயநாதன் - யாழினி தம்பதிகளின் செல்வப் புதல்வன் பிரவீன் தனது இரண்டாவது பிறந்த தினத்தை 07.09.2004 செவ்வாய்க்கிழமை அன்று அப்பா - அம்மா, தங்கை தருணிகா, சீத்தா, சித்தி, தம்பி லவீன் மற்றும் நண்பர்கள், உறவினர்களுடன் தனது இல்லத்தில் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா - அம்மா, இலங்கை தேத்தாத்தீவில் வசித்து வரும் அப்பப்பா செல்லையா - அப்பம்மா மாரிமுத்து, அம்மப்பா வீரசிங்கம் - அம்மம்மா இராசமணி, பெரியப்பாமார் -ஏகாம்பரம், புஸ்பநாதன் (ஜீவா), பெரியம்மாமார் - சீதேவி, பொன்மணி, மாமாமார்- தில்லைநாதன் (டுபாய்), கமலநாதன் (டுபாய்), சோமசுந்தரம், வீரசிங்கம், சீறி, சங்கரப்பிள்ளை, மாமிமார்- வேவீ, வாவா, கோமதி, வாணி, வினோதா, இரத்தினம்மா சித்தாமார் - ஜெயம் (லண்டன்), நித்தியானந்தராசா (அபுதாபி), சித்திமார் - தயாழினி, கோமளா (லண்டன்), அண்ணாமார் - பௌசியன், தயாபரன் (டுபாய்), சுதர்சன், அக்காமார் - தஷா, சுதா, சீவா (யாழ்.பல்கலைக்கழகம்), பிறேமளா மற்றும் அக்காமார், அத்தான்மார், அண்ணாமார், மச்சாள்மார், உற்றார் உறவினர்கள், London இல் உள்ள நண்பர்கள் அனைவரும் எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்: புஸ்பநாதன் (ஜீவா), மட்டக்களப்பு
தொலைபேசி :- 065 - 2250305


# சாயி சத்யா
# வெள்ளவத்தையில்



**No.119, Manning Place, Colombo-06**

## தனது 14ஆவது சொகுசு தொடர்மாடியை அமைக்கவுள்ளது



2 படுக்கையறைகள்
2 குளியறைகள்
750 ச. அடி

2 படுக்கையறைகள்
2 குளியறைகள்
800 ச. அடி 850 ச. அடி

விஸ்திரணத்தில் பின்வரும் வசதிகளை உள்ளடக்கியதாக அமையவுள்ளது.
அவரவர் விருப்பத்திற்கு ஏற்றபடி மேலதிக மாற்றங்களும் செய்து தரப்படும்

- தரமான Main Door
- Car Park
- Mitsubishi Lift
- Plastic குளியலறை கதவுகள்
- தரமான மர கண்ணாடி யன்னல்கள்
- தனித்தனியான தண்ணீர், மின்சார Meters
- 3 Phase மின்சார வசதி
- இறக்குமதி செய்யப்பட்ட Tiles
- இறக்குமதி செய்யப்பட்ட குளியலறை இணைப்புக்கள்
- Intercom வசதி
- Tube Wells
- Stainless Steel Sink


ஒரு மாதத்திற்குள் பதிவு செய்வோருக்கு விசேட கழிவுகள்





**Special Featuers**


விசாலமான Lobby போதிய காற்றோட்ட வெளிச்ச வசதிகளுடன் நல்ல தனிமையான சூழலில் அமையவுள்ளது. மற்ற தொடர்மாடி மனைகளுடன் ஒப்பிடும்போது விலையில் மிகக் குறைவு.





**SHANTHINIKENTHAN**
**PROPERTY DEVELOPERS**
7/5,Hamers Avenue, Wellawatte,Colombo-06
Tel: 2-360031, 2-501380 Mobile:0722-405271
E-mail: singam@sltnet.lk


## 1 ஆவது பிறந்த நாள் வாழ்த்து



## சிந்துகா / 12.09.2004

திருகோணமலையைச் சேர்ந்த இரட்ணஜீவன் - விக்னேஸ்வரி தம்பதிகளின் செல்வப் புதல்வி சிந்துகா தனது முதலாவது பிறந்தநாளை 12.09.2004 அன்று ஜேர்மன் Neuss இல் உள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா - அம்மா, அப்பப்பா - அப்பம்மா (கனடா), அம்மப்பா - அம்மம்மா (இலங்கை), சிவகுமரன் மாமா - வசந்தி மாமி (கனடா), கெங்காதரன் மாமா - ஜெயந்தி மாமி (கனடா), ரூபன் பெரியப்பா - சுதா பெரியம்மா (பிரான்ஸ்), சந்திரகுமார் மாமா - சுகந்தி மாமி (லண்டன்), அசோக் பெரியப்பா - கேதீஸ் பெரியம்மா (பிரான்ஸ்), நந்தன் பெரியப்பா - இந்திரா பெரியம்மா (இலங்கை), பரமேஸ் மாமா (இலங்கை), வனஜா சித்தி (இலங்கை), ரகுராம் பெரியப்பா - கமலினி பெரியம்மா (ஜேர்மன்), கரன் மாமா - டெனிஸ் மாமி (ஜேர்மன்), அண்ணன்மார்களான கிஷாந், விதுசன், அக்காமார்களான மதுசிகா, சாருகா, துர்க்கா, மச்சாள்மார்களான செளமியா, ரௌமியா, சருஷா, மச்சான்மார்களான சருஷன், கெவின், தம்பி கிஷாலன் மற்றும் உற்றார், உறவினர்களும் பல கலைகள் பெற்று பல்லாண்டு வாழ விநாயகர் அருளை வேண்டி வாழ்த்துகிறார்கள்.

தகவல்: அம்மப்பா இராசையா, வவுனியா.